33

33

தொட்டியை மணந்த அரச குமாரி

தி. நா. சுப்பிரமணியன்

5 JAN 1946
MADRAS

O-,3NSU5,T
N46
105233

அல்லயன்ஸ் வெளியீடு

தி. நா. சுப்பிரமணியன்

அவர்கள் இயற்றிய

ஆராய்ச்சி நூல்கள்

கங்கை கொண்ட சோழன்

(சென்னைப் பல்கலைத் தமிழாராய்ச்சி துறைத் தலைவர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை பி. ஏ., பி. எல். சிறப்புரை கொண்டது)

பொருளடக்கம்

(1) சோழநாடும் சோழர் பழமையும் (2) இராஜேந்திரன் முன்னோர்கள் (3) இராஜேந்திரன் இளமைப் பருவமும் இளவரசாட்சியும் (4) இராஜேந்திரன் அரசாட்சி (5) இராஜேந்திரன் போர்ச் செயல்கள் (6) இராஜேந்திரனும் இராஜாதி ராஜனும் (7) இராஜேந்திரன் காலத்தில் இருந்த நாட்டின் நிலைமை

——— ரூ. 1—8—0 ———

பல்லவ மகேந்திர வர்மன்

பொருளடக்கம்

(1) போத்தரசர் (2) அவனிசிம்ஹன் (3) லளிதாங்குரன் (4) பகாப்பிடுகு (5) சதுருமல்லன் (6) குணபரன் (7) விசித்திரசித்தன் (8) சேத்தகாரி (9) சித்திரகாரப்புலி (10) மத்தவிலாஸன் (11) ஸங்கீர்ண ஜாதி (12) அவனி பாஜனன்.

——— ரூ. 1—4—0 ———

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - 7

தோட்டியை மணந்த அரசகுமாரி

முதலிய கதைகள்

33/T-46

5 JAN 19

ஆசிரியர் :

தி. நா. சுப்பிரமணியன்

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் : : சென்னை

உரிமை பதிவு

சாதா பைண்ட் ரூ. 2/–
கலிகோ பைண்ட் ரூ. 2/8

தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

1 மங்கையர்க்கரசியின் காதல்
2 நீலமணி
3 கன்யா குமாரி
4 சந்தனக் காவடி
5 சக்ரவாகம்
6 கனகாம்பரம்
7 தோட்டியை மணந்த அரச குமாரி
8 பவழ மாலை
9 வெண் தாமரை
10 அழகி
11 ஜடாதரன்
12 லக்ஷ்மீகடாக்ஷம்
13 குழலோசை

O73XSUb,T
N46

14 வாடா விளக்கு
15 குழைந்தையின் மனம்
16 பிள்ளை வரம்
17 தேவகி
18 சக்தி வேல்
19 மோகினி
20 போகிற வழியில்
21 வைர டோலக்
22 ஆலமரத்துப் பிள்ளையார்
23 பட்டுப் புடைவை
24 பட்டாசுக் கட்டு
25 கொந்தளிக்கும் பாசம்
26 ஐ. ஸி. எஸ். பிள்ளை
27 விமோசனம்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105233

Printed at the Sadhu Press, Royapettah, Madras.
Paper Issue Card No. M.S. 115 for The Alliance Co.,
P. I. C. No. M. S. 109—Copies 1,500—5-12-45

முன்னுரை

தமிழ் இலக்கியத்திலே சிறுகதை ஒரு நிரந்தரமான ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது. இன்றைக்குத் தமிழ் நாட்டில் சிறுகதை எழுத்தாளர் பலர் இருக்கின்றனர். ஆனுல் அவர்கள் எழுதும் கதைகளுக்கும் இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ளனவற்றுக்கும் முக்கியமான வித்தியாசம் ஒன்று உண்டு.

அவர்களுடைய கதைகள் யாவும் ஆசிரியர் கற்பனையில் பிறந்தவை: இந்தக் கதைகள் அவ்விதம் அல்ல. சரித்திர சம்பந்தம் கொண்டவை; ஒவ்வொரு கதைக்கும் ஆதாரங்கள் உள்ளன.

*　　*　　*

குயவன் ஒருவன் மண்பாடங்கள் செய்கிருன்; சூளை வைக்கிருன். பிறகு எடுத்துப் பார்த்தால் அந்தப் பாண்டங்கள் யாவும் ஒரே விதமான நேர்த்தி உடையனவாக இரா. வேக்காடு சீராக இராது.

அதேபோலத்தான் இந்தக் கதைகளும். முதலில் இவை பத்திரிகைகளுக்காகப் பலவேறு காலங்களில் எழுதப் பெற்றவை. ஒவ்வொரு கதையின் அமைப்பு அதை எழுதும்போது ஆசிரியருக்கு இருக்கும் மனேநிலையைப் பொறுத்ததாகும் என்பதை யாவரும் அறிவர்.

ஆகவே இந்தப் புத்தகத்தில் உள்ள கதைகள் யாவும் ஒரே விதமான பக்குவத்தை அடைந்திரா. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கும்.

கதைகள் ஒன்றிரண்டுக்கு முன்னர் இடப்பிட்டிருந்த பெய்ரை மாற்றிப் புதிய தலைப்புக் கொடுத்திருக்கிறது. அதேபோலச் சிலவற்றுள் அங்கங்கே சிறு திருத்தங்கள் செய்யப் பெற்றுள்ளன.

கற்பனைக்கும் எட்டாத அதிசயங்களைச் சரித்திர நிகழ்ச்சிகளில் காணலாம் என்னும் உண்மையைச் சிறு கதை உருவத்தில் அமைக்கப்பெற்றுள்ள இந்தக் கதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

தி. நா. சுப்பிரமணியன்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	தோட்டியை மணந்த அரச குமாரி	...	1
2.	எச்சிற் பாண்டம்	...	22
3.	முற்பகல் செய்யின் -	...	39
4.	மகாபத்கான்	...	50
5.	வெகுமதி	...	62
6.	நைவேத்தியம்	...	74
7.	அடிமைப் பெண்	...	86
8,	வெற்றி யாருக்கு?	...	97
9.	அநாதைப் பிணம்	...	107
10.	அசோகன் துறவு	...	118
11.	பறையறைந்த பெண்	...	128
12.	கலையின் பலி	...	137
13.	கடைத் தேங்காய்	...	149
14.	அந்தச் சனியன்	...	157
15.	நடன ஸரஸ்வதி	...	170

முகப்புப் படம்

தி. நா. சுப்பிரமணியன்

நன்றி

இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள கதைகளுள் 'நைவேத்தியம்', 'கலையின் பலி' ஆகிய இரண்டும் மணிக்கொடியிலும், 'அடிமைப் பெண்' என்பது தினமணி ஆண்டு மலரிலும், 'வெற்றி யாருக்கு' என்பது ஹனுமான் ஆண்டுமலரிலும், 'மறையமறைந்த பெண்' என்பது சூறாவளியிலும் வெளிவந்தவை. 'அநாதைப் பிணம்', 'அசோகன் துறவு', 'கடைத் தேங்காய்', 'நடன ஸரஸ்வதி' ஆகிய நான்கும் சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் வெளிவந்தவை. மற்றவை கலைமகளில் பிரசுரிக்கப்பட்டவை. முதலில் அவற்றைத் தங்கள் பத்திரிகைகளில் வெளியிட்டு உதவிய அவற்றின் ஆசிரியர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

தி. நா. சு.

5 JAN 1946



தி. நா. சுப்பிரமணியன்

தோட்டியை மணந்த அரசகுமாரி

1

"உன் தலையிலே பிரமன் எப்படி எழுதியிருக்கிருனே?" என்று வாய்விட்டுக் கூறி ஒருதரம் பெருமூச்செறிந்தான் அந்தக் கிழவன். சுமார் அறுபது வயது இருக்கும். எனினும், அவன் முகத்தில் தனியான தேஜஸ் ஒன்று காணப்பட்டது. கம்பீரமான அவனுடைய பார்வையைக் கண்டு பக்கத்தில் இருந்தவர்கள் பயந்து கைகட்டி வாய்புதைத்து ஒதுங்கி நின்றனர்.

அவன் அந்த வீட்டின் 'ஆளோடி'யில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தான். நடை சிறிது மெதுவாகவும் கொஞ்சம் வேகமாகவும் மாறி மாறி இருந்தது. ஒரு லக்ஷ்யமும் இல்லாமல், வெட்டவெளியை நோக்கும் வெறித்த பார்வையுடன் அவன் கைகளை மார்பில் கோத்துக் கட்டிக்கொண்டு நடந்தது அவன் மனத்துள் ஏதோ ஒன்று குமுறிக்கொண் டிருந்தது என்பதை அறிவித்தது. அவனுடன் நெடுநாட்களாகப் பழகிய அந்தரங்க ஊழியர்களாகிய அவர்கள் அதனை நன்கு அறிவர்.

அந்தச் சமயத்தில் அவனை அணுகி எதையும் தெரிவிக்க அஞ்சினார்கள் அவர்கள். ஆனால் செய்தியோ முக்கியமானது; உடனே தெரிவித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் பின்னால் அந்தக் கிழவன் கோபித்துக் கொள்ளக்கூடும். இருதலைக்கொள்ளி எறும்புபோல அவஸ்தைப்பட்டனர் அவர்கள்.

அந்த வீட்டினுள்ளிருந்து வீணாகானம் இனிமையாக ஒலித்துக்கொண்டிருந்தது. ஒரு பெண் அதனுடன் ஒத்து உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தாள். பக்திப் பெருக்கால் பாடி இறைஞ்சித் தனக்குக் கருணை காட்ட வேண்டும் என்று பக்தன் ஒருவன் எம்பெருமானை வேண்டும் பாடல் அது. அவள் அதனைப் பாட்டாக எண்ணிப் பாடவில்லை. தன்னையே அந்தப் பக்தனாகப் பாவித்துத் தனக்குக் கருணை காட்டவேண்டும் என்றே புருஷோத்தமனை வேண்டினாள்.

அந்தப் பாட்டின் ஒலியும் மெதுவாகக் கரைந்து அடங்கிவிட்டது. வீணாநாதமும் நின்றது. எங்கும் நிச்சப்தம் நிலவியது.

குறுநடை போட்டுக்கொண்டிருந்த கிழவனும் அந்தப் பாட்டைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தான். அர்த்தபுஷ்டி பெற்றிருந்த அதன் பாவம் அவன் உள்ளத்தைக் கலக்கியது. அதுவே அவன் நோய்க்கு மருந்தாகவும் அமைந்தது.

கிழவன் வாயிற்புறத்தை விட்டு வீட்டிற்குள் செல்வதற்குத் திரும்பினான். அப்பொழுது ஏவலாளன் ஒருவன் முன்வந்து நின்று வணங்கி, "மகாராஜா தெரிவிக்கச் சொன்னார்கள்" என்று கூறினான். உள்ளே போய்விட்டால் அந்தக் கிழவன் திரும்பவும் எப்

பொழுது வெளியில் வருவானோ என்ற பயம் போலும் அவனுக்கு!

கிழவன் அதற்கு நேராகப் பதில் ஒன்றும் கூறுமல் வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

"பொழுது என்ன இருக்கும்?"

"விடிந்து ஐந்து நாழிகை ஆகிறது. தேருக்கு வடம் பிடிக்கப் போகிறார்கள்."

"சரி, வந்துகொண்டிருக்கிறார் என்று சொல், போ."

மேல்வார்த்தைக்கு இடம் கொடுக்காமல் கிழவன் உள்ளே போய்விட்டான்.

2

வீட்டின் உட்புறமும் விசாலமாக இருந்தது. உப்பரிகை தூக்கி விடப்பட்டிருந்த பெரிய கல்யாணக் கூடத்தைக் கொண்டது முன்கட்டு. சமையல் அறை, உக்கிராண அறை முதலியன பின்கட்டில் இருந்தன. கூடத்தின் மத்தியில் சுவர் ஓரமாக ஒரு சிறிய மாடம். அது ஒரு விமானம்போலவே கட்டப்பட்டிருந்தது. அதன் நடுவிலே அந்த க்ஷேத்திரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஜகந்நாதப் பெருமானின் விக்கிரகமும் இதர பரிவார தேவதைகளின் விக்கிரகங்களும் படங்கள் சிலவும் வைத்து அலங்கரிக்கப்பட்டிருந்தன.

எதிரில் ஒரு சிறிய குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. பக்கத்தில் பூஜைக்கு வேண்டிய சாமக்கிரிகள் இருந்தன. அவற்றின் எதிரில் வீணையுடன் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள்.

அவள்தான் சற்று முன்பு பெருமானைத் துதித்துப் பாடியவள். பூஜை செய்து கொண்டிருந்த அவள்

அவர் முன்னே பிரார்த்தித்தாள். அவள் மெய்ம்மறந்து பூஜையை முடிக்கும் வகை அறியாதவளாகக் கல்லாய்ச் சமைந்திருந்தாள் என்றே சொல்லவேண்டும். இரு கண்களினின்றும் நீர் ஆருகப் பெருகி வழிந்துகொண்டிருந்தது. கிழவன் மெதுவாக வந்து தன் பக்கத்தில் நின்றதையும் கவனிக்கவில்லை அவள்.

"பத்மா!"

அந்தக் குரல் அவளைக் கனவுலகத்தினின்றும் பூமிக்குக் கொணர்ந்து தள்ளியது.

அந்தக் குரல் அவளுக்குப் புதிது அன்று. எப்பொழுதும் அவள் அதிலே ஓர் இனிமையைக் கண்டிருக்கிருள். உற்ருர் உறவினரை விடுத்துச் சிறைவாசம் அநுபவிக்கும் அவளுக்கு அதுவே ஓர் ஆறுதலாக இருந்தது.

எதற்கும் ஒரு முடிவு உண்டு; அவளுடைய சிறைவாசத்திற்கும் அவ்விதமே முடிவு உண்டு. விடுவிக்கப் படவேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. ஆனல் அந்த விடுதலை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைத் தான் அவள் அறியக்கூடவில்லை. தான் விரும்பிய விதமே தனக்கு நல்ல கதி கிடைக்கவேண்டும் என்றே அவள் புருஷோத்தமனைத் தோத்திரம் செய்துகொண்டிருந்தாள்.

அந்த ஏக்கத்திலேயே அவள் சிந்தையை இழந்து உட்கார்ந்திருந்தாள். கிழவன் கூப்பிட்டது அவளுக்குச் சுய உணர்வை உண்டாக்கியது. தான் ஆராதிக்கும் ஜகந்நாதப்பெருமான் மனம் கசிந்து தன் கோரிக்கையை அங்கீகரித்துவிட்டார் என்றே எண்ணினுள் அவள். சட்டென்று எழுந்து அந்தப் பெரியவனுக்கு நமஸ்காரம் செய்து ஒதுங்கி நின்ருள்.

"தீர்க்க ஸுமங்கலீ பவ!" என்று இரு கைகளை யும் உயர்த்தி மனப்பூர்வமாக ஆசீர்வதித்தான் அந்தக் கிழவன்.

அவளுடைய சிறைவாசத்திற்குச் சமமான அந்த வாழ்க்கைக்கு அந்தக் கிழவனே காவலாளி. அவளுடைய எதிர்கால வாழ்க்கையின் பொறுப்பை அந்தக் கிழவ னிடமே ஒப்படைத்திருந்தான் அரசன். அவன் எவ்வி தம் முடிவு செய்கிருனே அவ்விதமே நடக்கும் என்பதை யும் அவள் அறிவாள். ஆயினும் தன் தந்தையின் ஸ்தா னத்தில் இருக்கும் அவன் தனக்கு ஒருவிதமான கெடு தலையும் செய்யமாட்டான் என்பதையும் அவள் நன்கு அறிவாள்.

"குழந்தாய், அரசன் கொடுத்த கெடு முடியப் போகிறது. இன்றைத்தினந்தான் கடைசி நாள். என்ன செய்வது?"

"பெரியப்பா, தங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. தாங்களாகப் பார்த்து எப்படிச் செய்தாலும் சரிதான்" என்று சிறிது தைரியமாகவே பதில் சொன் ஞள் அவள். ஆயினும், துக்கம் பொறுக்கமுடியாமல் பலபலவென்று கண்ணீர் உகுத்தாள்.

"பத்மா, வருத்தப்படுவதில் என்ன பயன்? பிரமன் இன்றைக்கு ஒன்றையும் புதிதாக எழுதப்போவதில்லை. அன்று எழுதியபடியே எல்லாம் நடக்கும்."

"ஆமாம். நீங்கள் கூறுவது உண்மைதான். எனி னும் மானத்தை இழந்த பிறகு உயிர் வாழ்வதில் என்ன இருக்கிறது? நான் பிறந்த குடும்பம் என்ன? அதன் பெருமை என்ன? அரசன் தண்டனை ஒரு குடும்பத்

தையே அன்றோ அழித்துவிடுவதாக இருக்கின்றது? அந்தத் தண்டனையை என் தலையில் சுமத்த நான் என்ன அபராதம் செய்தேன்?"

"பத்மாவதி, வருத்தப்படாதே. மனக்கலக்கம் சிறிதும் இல்லாமல், தைரியத்துடன் இருக்கவேண்டிய சமயம் இது. எனக்கு இப்பொழுது புதிய யுக்தி ஒன்று தோன்றுகிறது. அதனை உபயோகித்துப் பார்க்கலாம். அரசனுக்கு முன்பிருந்த கோபம் இப்பொழுது கொஞ்சம் தணிந்திருக்கிறது. கடவுள் கட்டாயம் நமக்கு வழி விடுவார். வா, போகலாம்."

பத்மாவதி குனிந்து வீணையை எடுத்து ஒருபுறமாகச் சாத்திவிட்டு அந்தக் கிழவனுடன் புறப்படத் தயாரானாள். அக்காரியங்களை அவள் யந்திரம் போலவே செய்தாள். அவள் மனமும் கடைக்கண் பார்வையும் மாடத்தில் எழுந்தருளியிருந்த ஜகந்நாதப் பெருமான்மீதே இருந்தன; "நீதான் கதி" என்று வேண்டுவனபோல் இருந்தன.

திருவிழாப் பார்க்கப் போகும் அவள் தன்னை ஒரு விதத்திலும் அலங்காரம்செய்துகொள்ளாமல்அப்படியே கிளம்பியது கிழவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

"ஏனம்மா, ஒரு நல்ல புடைவையைக் கட்டிக் கொண்டு உன் நகைகள் எல்லாவற்றையும் போட்டுக் கொள்ள வேண்டாமா? இப்படியேயா போவது?"

"நகைகள் எதற்காக? நான் ராஜாத்தியா, தோட்டிச்சியா?"

கிழவன் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை; "சரி" என்று கிளம்பிவிட்டான்.

3

எங்கே பார்த்தாலும் ஒரே குதூகலம். வீதியில் இருந்த வீடுகளில் ஒவ்வொன்றும் பார்வைக்கு மிக அழகாக இருந்தது. திண்ணைப்படங்கு முழுவதும் காவிப் பட்டையும் சுண்ணும்புப் பட்டையுமாக மாறி மாறி அடிக்கப்பட்டிருந்தது. திண்ணைமீதும் வாசலிலும் மாவரைத்து இழை கோலங்கள் விதம் விதமாகப் போடப்பட்டிருந்தன.

ஒவ்வொரு வீடும் நன்ருகச் சுண்ணும்பு அடிக்கப் பட்டிருந்தது. வாயிற்படிகளில் மாவிலைத் தோரணங்கள் தொங்கின. அவற்றின் இருபுறங்களிலும் உள்ள மாடங் களில் கைவிளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.

ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் ஜனங்கள், ஆண் பெண் அடங்கலும் கும்பலாக நின்றுகொண்டிருந்தார் கள். அவர்கள் எல்லோரும் காலையிலேயே ஸ்நானம் செய்து புதிய பட்டாடை உடுத்திருந்தார்கள்.

தெருவில் போவோர் வருவோர்களும் அவ்விதமே தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோருமே கவலையற்றவர்களாகச் சந்தோஷத்தால் ஆரவாரித்துக்கொண் டிருந்தார்கள். வருஷத்திற்கு ஒரு நாள். அன்றைத்தினத்தை அவர்கள் இஷ்டப்படியே கொண்டாடிக் களிக்காமல் வேறு என்ன செய்வது? வருஷம் முந்நூற்று அறுபது நாட்களுமா கஷ்டப் படுவது? ஒரு நாளைக்காவது மாறுதல் வேண்டாமா?

அப்பொழுது ஆஷாட மாஸம்; பூரி க்ஷேத்திரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஜகந்நாதப் பெருமானுக்குப் பிரம்மோத்ஸவம் நடை

பெற்று வந்தது. அன்றைத்தினம் தேர்த் திருவிழா; டோலோத்ஸவம்.

உத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம். ஜகந்நாதப்பெருமானைக் குலதெய்வமாகக் கொண்ட கஜபதி அரசர்கள் முன்னின்று அந்த உத்ஸவத்தை நடத்திவைப்பார்கள்.

கஜபதி மன்னர்கள் நாட்டை எம்பெருமானுக்கே அர்ப்பணம் செய்தவர்கள். ஸ்வாமிதான் நாட்டுக்கு அதிபதி. மன்னர்கள் அவருடைய பிரதிநிதிகளாகவே அமர்ந்து நாட்டைப் பரிபாலனம் செய்துவந்தார்கள்; தங்களை எம்பெருமான் தாஸர்களாகவே மதித்து வந்தார்கள்.

தெய்வ பூஜை அரசனுக்குரிய ஸகல மரியாதைகளுடன், ஷோடசோபசாரங்களுடன், விமரிசையாக நடைபெறும். மன்னர்கள் பக்கத்தில் இருந்து அதனைக் கண்காணிப்பார்கள்; சமயங்களில் விசிறி வீசுவது முதலிய தொண்டுகளையும் ஆற்றுவார்கள்.

ஜகந்நாதப் பெருமானுக்குத் தாங்கள் அடிமைகள் என்பதை அவர்கள் நன்கு வெளிப்படுத்துவது இந்தப் பிரம்மோத்ஸவத்தின் பொழுதுதான்! எம்பெருமானுக்கேயன்றி அவன் அன்பர்களுக்குங்கூடத் தாங்கள் அடியார் என்பதை அறிவிக்கவேபோலும் தேர் ஓடும் காலங்களில் கஜபதி மன்னர்கள் தங்கத் துடைப்பத்தைக் கையில் ஏந்தித் தேருக்கு முன்னால் வீதியைச் சுத்தம் செய்துகொண்டு போவார்கள்.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண மக்கள் பல இடங்களிலிருந்தும் திரண்டு பூரி க்ஷேத்திரத்திற்கு வருவர். நாட்டின் பிரதான உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் அப்பொழுது அங்கேதான் தங்கியிருப்பார்கள்.

திவ்ய க்ஷேத்திர யாத்திரிகர் பலருக்கும் வேண்டிய ஸௌகரியங்களை அவர்கள் அமைத்துக்கொடுப்பார்கள்.

உத்ஸவ காலத்தைக் கவலையின்றிக் கழித்து ஆண்டவனைத் தரிசித்து அவன் அருளைப் பெறுவதற்குப் பாகவதோத்தமர்கள் கூட்டம் கூட்டமாக வந்திருப்பார்கள். எங்கே பார்த்தாலும் பாகவத கோஷ்டிகள் எம் பெருமானுடைய அனந்தகல்யாண குணங்களை நாம ஸங்கீர்த்தனம் செய்து ஆடிப்பாடிக் களித்திருப்பர். கோயிலிலும் தேர் ஓடும் நான்கு வீதிகளிலும் எப்பொழுது பார்த்தாலும் ஒரே கூட்டமாக இருக்கும்.

4

தேரடியில் கூடியிருந்த ஜனங்கள், கிழவனும் அவனைப் பின்தொடர்ந்து பத்மாவதியும் வருவதைக் கண்டு அவ்விருவருக்கும் வழிவிட்டு விலகி நின்றனர். பிரமுகர்களும் பிரதான உத்தியோகஸ்தர்களும் கிழவனுக்குத் தலைவணங்கிக் கைகூப்பிக் கும்பிட்டு நின்றனர். கிழவனும் அவரவர் அந்தஸ்துக்கேற்பப் பதில்மரியாதை செய்துகொண்டே நடந்து சென்று தேரடியை அடைந்தான்.

"பண்டித மஹாசயரே! வரவேண்டும். வடம் பிடிக்க உத்தரவாகலாமே!" என்று சொன்னான் அரசன்.

"சித்தம்."

இந்தப் பதிலைக் கிழவன் ஒரு யந்திரம்போலவே, வழக்கத்தையொட்டிக் கூறினான். அரசனுடைய கேள்வி அவன் மனத்துள் ஈட்டிகொண்டு குத்துவதுபோலப் பதிந்தது; அவன் இருதயத்தைப் பிளந்தது. 'அரசன் நம்மை இந்தக் கேள்வி கேட்கலாமா? நாம் அல்லவா

முன்னதாக வந்திருந்து அரசன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து, அவனை வரவேற்று உபசரித்து அவன் உத்தரவைப் பெறவேண்டும்? அதற்கு மாறாக அரசன் முன்னதாக வந்திருந்து, காலதாமதம் செய்துவந்த நம்முடைய உத்தரவை வேண்டுவது முறையா ?' என்றெல்லாம் எண்ணினான்.

கிழவன் பல வருஷங்களாக அரசாங்கத்தில் சேவகம் செய்துவந்தவன், இங்கிதம் அறிந்து நடக்கும் சாமர்த்தியம் வாய்ந்தவன். எப்பொழுதும் நடக்க வேண்டிய காரியங்களை முன்னமேயே எண்ணி ஒழுங்கு படுத்தி அதன்படி நடப்பவன். இதுவரையில் இம்மாதிரிக் காலம் தாழ்த்து வந்ததில்லை. அதனால் அவன் பெரிதும் மனம் வருந்தித் தன்னைத் தானே நொந்துகொண்டான்.

ஆம் ; அவன் மனநிலை அத்தகைய பக்குவத்தில் தான் இருந்தது. முன்பு எல்லாம் அவன் அரசனிடத்தில் பெறவேண்டியது ஒன்றும் இல்லை. களங்கமற்ற மனத்தையுடைய அவன் நிர்ப்பயமாக விளங்கிவந்தான். அன்றைக்கோ அவன் மன்னனிடம் யாசித்துத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்பினான். அவன் தன் கோரிக்கைக்கு இணங்குவானோ, மாட்டானோ என்ற சந்தேகம் உண்டாயிற்று, அவன் மனம் மாசு அடைந்தது. மன்னன் மனங்கோணாமல் நடந்து அவன் இஷ்டப்படிச் செய்து அவனைக் களிப்பிக்க விரும்பினான். தான் காலம் தாழ்த்து வந்ததைக் கண்டு மன்னன் எங்கே கோபித்துக்கொள்வானோ என்ற பயம் வேறு ஏற்பட்டது,

மன்னனோ இது ஒன்றையும் கவனிக்கவில்லை. பண்டித மஹாசயரிடத்தில் அவனுக்குப் பரம பக்தி; பூர்ண நம்பிக்கை ; அவனைத் தன் தந்தையின் ஸ்தானத்

தில் வைத்துப் பூஜித்து வந்தான் மன்னன். ராஜதந்திரத்தில் நிபுணனான அந்தக் கிழவன் எத்தனை புரட்சிகளைக் கண்டிருக்கிறான்; அடக்கியிருக்கிறான்! அவனுடைய உதவியில்லாமல் மன்னன் அவற்றைச் சமாளித்து வெற்றிகொண்டிருக்க முடியுமா?

அப்பொழுது அவன் மனம் வேறொன்றின்மீதும் ஈடுபடவில்லை. விக்கினம் ஒன்றும் இல்லாமல் தேரைச் செலுத்தி நிலைக்குக் கொணர்ந்து சேர்க்கவேண்டுமே என்ற ஒரே கவலையைத்தான் அடைந்திருந்தது.

ராஜ்யத்தின் பிரதம மந்திரியாகிய பண்டித மஹாசயர் அரசனுடன் இருக்கையில் கேட்பானேன்? தேருக்கு வடம் பிடித்துவிட்டார்கள்.

அரசனும் தன் முன்னோர் வழக்கப்படியே தன் குலதர்மத்தை மேற்கொண்டான். தங்கத் துடைப்பத்தைக் கையில் ஏந்தி எம்பெருமான் பவனிவரும் தேருக்குமுன்பாக வீதியைச் சுத்தம் செய்யத் தொடங்கினான். மந்திரி பிரதானிகள் சூழ்ந்துவர, பரிவாரங்கள் ஆலவட்டக் குடையை அவன் தலைக்கு உயரத் தூக்கிப் பிடித்துப் பக்கத்துக்கு ஒருவராக இருபுறங்களிலும் நின்று சாமரங்கள் வீச, அவன் வீதியைக் கூட்டுவது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

வடம்பிடித்த ஆட்கள் தங்கள் சந்தோஷமிகுதியால் ஆரவாரம் செய்து, பிடித்த கைவிடாமல் இழுத்து அந்த வீதியைக் கடந்து மூலைக்கு வந்துவிட்டனர். விமானத்தில் கட்டியிருந்த மணிகள் சப்தமிட அசைந்து அசைந்து தேர் மூலைதிரும்பும் அழகைப் பார்க்க மன்னனும், தன் திருப்பணியை மறந்து சிறிது அப்படியே நின்றான்.

அவன் கண்கள் தாமாகக் கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தன. அவ்வளவுதான்; பண்டித மஹாசயரின் பக்கத்தில் நின்றிருந்த பெண்ணைக்கண்டு திடுக்கிட்டான். பண்டிதருடன் இருந்தவளை அவன் அதுகாறும் காணவில்லை; அப்பொழுதுதான் முதல் முதலாகக் கவனித்தான். அதுவரையில் அவன் உத்வேகம் முழுவதும் ஆண்டவன் திருப்பணியிலேயே லயித்திருந்தது. அவளைக் கண்டவுடன் அவன் பூலோக உணர்ச்சியைத் திரும்பவும் பெற்றான்.

'அந்தப் பெண் யார்? புதியவளாக இருக்கிறாளே! இதுவரையில் அவளைப் பார்த்ததில்லையே? பண்டிதரின் பெண்ணோ?...சே சே. இல்லை. அவருக்கு இந்தப் பெண் கிடையாதே. அன்றி அவளைப் பார்த்தால் பிராமணப் பெண்ணாகவும் தோன்றவில்லையே.

'ஒருகால் அந்தப் பெண்ணாக இருக்கக்கூடுமா? அப்படியும் இராது, மந்திரி பண்டித மஹாசயர் என்றைக்கும் அரசனாணையை மீறியது இல்லை. நம்முடைய உத்தரவை அப்படியே நிறைவேற்றி வைப்பவர்.

'நம்முடைய உத்தரவுதான் என்ன? அதனைச் செய்துமுடிக்காமல் இருந்திருப்பாரா?'

அவன் எண்ணம் இவ்வாறு பலவிதமாகச் சென்றது. ஐந்து வருஷத்திய நிகழ்ச்சிகள் யாவும் அந்த ஒரு க்ஷணத்தில் அவன் மனத்திரையில் தோன்றி மறைந்தன.

'அவள் பத்மாவதியாக இல்லாமல் இருக்க வேண்டும். அவள் முகத்தின் பொலிவுதான் என்ன! யாவரையும் வசிகரம் செய்யும் சக்தி வாய்ந்ததாக

இருக்கிறதே !' ஆம், மன்னன் சிறிது நேரத்தில் அவளிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான்.

எனினும் அவன் சந்தேகம் தீரவில்லை. அவள் பத்மாவதியாகவே இருந்துவிட்டால் என்ன செய்வது ?

அதுவே அவன் உள்ளத்தை வாட்டியது. ஆயினும் ஒருவிதமாகச் சமாதானம் செய்துகொண்டான்.

'அவள் என்ன செய்வாள் ? அவள்மீது ஏதாவது குற்றம் உண்டா ? நம்மை அவள் எப்பொழுதும் இழிவு படுத்தியது இல்லையே ! அவளுடைய தந்தை இழைத்த அவமானத்துக்கு அவள் எவ்விதம் பொறுப்பாளி ஆவாள் ? அவளுக்கு நாம் அளித்த தண்டனை மிகவும் கடுமையானதுதான் ...சே ! எப்படி யிருந்தாலென்ன ? நம்முடைய குலத்திற்கே ஏற்பட்ட அவமானத்தைப் பொறுக்கமுடியுமா ?'

5

ஐந்து வருஷங்களுக்கு முன்பு நடந்த விஷயம் :

ஒட்டதேசத்தின் தலைநகரான கடகம். (இப்பொழுது **ஓரிஸ்ஸா** என்று வழங்கப்பெறும் மாகாணத்தின் முக்கியப்பட்டணமான **கட்டாக்**) ஒருநாள் மிகவும் குதூகலமாகக் காணப்பட்டது, அக்காலம் இன்றைக்குச் சுமார் நானூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு. அப்பொழுது அந்நாட்டைச் சூரியவமிசத்து அரசனை கஜபதி கபிலேந்திரன் ஆண்டுவந்தான். யுவராஜன் புருஷோத்தமனுக்குக் கல்யாணம் நடக்க இருந்தது. நாட்டுமக்கள் தங்கள் கண்ணின் கருமணிபோல நேசித்துவந்த யுவராஜனுக்குக் கல்யாணம் என்பதைக் கேட்டவுடன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடும்பங்களில் கல்யாணம் நடப்பதுபோலவே பாவித்துக் குதூகலித்தார்கள்.

கல்யாணத்துக்குப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் யாவும் நிறைவேறிவிட்டன. மஹாநதிக் கரையிலிருந்து அரண்மனை வரையில் உள்ள ராஜவீதி முழுவதும் கொடிகளாலும் தோரண வாயில்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மஹாநதிக் கரையோரமாக இருந்த தோட்டங்களும் பங்களாக்களும் கல்யாணத்துக்கு வரும் சிற்றரசர்களும் வெளிநாட்டு உத்தியோகஸ்தர்களும் தங்குவதற்காக ஒதுக்கப் பட்டிருந்தன. பெண்வீட்டார் வெளியே தங்குவதற்கு வசதி யாவும் நகர்ப்புறத்தே உள்ள அரண்மனையில் செய்யப்பட்டிருந்தன.

இளவரசனை மணக்கப்போகும் அரசகுமாரி மிகவும் கட்டழகு வாய்ந்தவள் என்ற செய்தி எப்படியோ ராஜ்யத்தில் பரவிவிட்டது. அவளைக் கண்டு மகிழ நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் திரண்டு தலைநகரத்துக்கு வந்திருந்தார்கள். மணக்கோலத்துடன் அவள் ராஜ வீதியில் பவனி வருவதை யாவரும் கண்டு ஆனந்திக்க விரும்பினர். அவள் பட்டணப்பிரவேசம் செய்ய இருந்த தினத்தன்று ராஜவீதியில் எங்கே பார்த்தாலும் ஒரே கூட்டம்.

குறிப்பிட்ட காலத்தில் அரசிளங்குமாரி பவனி வரவில்லை. ஊர்வலம் வரும் வரும் என்று ஜனங்கள் காத்துக் கொண்டே நின்றார்கள். வெயில் ஏறிக் கொண்டே போயிற்று. மக்களும் பொறுமையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்தனர். அவர்கள் யாவரும் ஏமாற்றப்பட்டார்கள்.

ராஜாங்கத்தின் வியவகாரங்களை அறிந்தவர்களில் சிலர் கூடிக் கூடிக் குசுகுசுவென்று ரகசியம் பேச ஆரம் பித்துவிட்டார்கள். ஆயினும் அது ரகசியமாக நிற்க வில்லை. காட்டுத்தீப்போல் எங்கும் வியாபித்துவிட்டது.

கல்யாணம் நின்றுபோய்விட்டது என்பதை அறிந்த வுடன் ஜனங்கள் மனத்தில் ஏமாற்றத்தைவிட ஆத்தி ரமே மேலிட்டு எழுந்தது. அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனம்போனபடி பேசவும், திட்டவும், வசைமொழியோ சபதமோ கூறவும் ஆரம்பித்து விட்டனர்.

புருஷோத்தமனுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயித் திருந்த பெண் விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த அரசகுலத்தைச் சேர்ந்தவள். அவள் பத்மாவதி எனப் படுவாள். அவள் தன் பெயருக்கேற்றபடி மஹாலக்ஷ்மி யைப் போன்ற அழகும் சம்பத்தும் உடையவள். அவளுடைய அழகைக் கண்ட மக்கள் அவளுக்கு ரூபாம்பிகை என்று பெயரிட்டனர்.

அவள் தந்தை விஜயநகர அரசகுடும்பத்தில் இளைய பரம்பரையைச் சேர்ந்தவன். காஞ்சீபுரத்தைத் தலைநக ராகக் கொண்டு தமிழ்நாட்டு மண்டலாதிபதியாக ஆண்டுவந்தான். சூரியவம்சத்தைச் சேர்ந்த ஒட்ட தேசத்து அரசன் கஜபதி கபிலேந்திரனுடைய மூத்த மகனும் யுவராஜனுமான புருஷோத்தமனுக்குத் தன் பெண் பத்மாவதியைக் கல்யாணம் செய்துகொடுக்க நிச்சயமானதை அவன் தனக்குக் கிடைத்த பாக்கியம் என்றே கருதினான்.

ஆயினும் எல்லாம் நிச்சயமாகிக் கல்யாணம் நடை பெறும் சமயத்தில் நின்றது எதனால்? புருஷோத்தம னுக்கு வீரம் இல்லையென்று? அழகு இல்லையென்று?

அவை யாவும் அல்ல. ஒட்டதேசத்தரசர்கள் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர்களாம்!

அரசகுடும்பங்களிலும் பெரிய இடங்களிலும் கலகம் செய்வதற்கென்றே சிலர் இருப்பார்கள். அவர்களுக்கு ஜீவனோபாயமே அதுதான். விஜயநகர அரச குடும்பத்திலும் அவ்விதம் சிலர் இருந்தார்கள். அவர்களால் நேர்ந்த விளைவே அது.

"கஜபதி க்ஷத்திரிய தர்மத்தைக் கடைப்பிடிக்கவில்லை; தோட்டி வேலை செய்கிறான். வாள் பிடிக்கும் கையினால் துடைப்பத்தை ஏந்தலாமா? அவன் எவ்வளவு செல்வாக்கும் பலமும் பரந்த ராஜ்யமும் படைத்தவனாக இருந்தாலும், அவ்விதம் ஜாதிகெட்டவன் பிள்ளைக்கு எங்கள் பெண்ணைக் கொடுக்கமாட்டோம்."

இவ்விதம் முடிவாகக் கூறிச் சம்பந்தத்தை மறுத்துவிட்டனர் விஜயநகரத்தவர்கள்.

6

சிற்றரசர்களும் மற்றையோரும் வந்து கல்யாணம் நடைபெறவேண்டிய சமயத்தில் இப்படி அவமானப்பட நேர்ந்ததைக் கஜபதி கபிலேந்திரன் எவ்வாறு சகிக்க முடியும்? அவன் மகன் புருஷோத்தமனும் சும்மா இருப்பானா? அதனை நாம் விவரித்துக் கூறவேண்டியதில்லை.

"என்னைத் தோட்டியென்றும், அதனால் தோட்டிக்குத் தன் பெண்ணைக் கொடுக்க முடியாது என்றும் கூறினான் அல்லவா? நான் க்ஷத்திரிய வீரன் என்பது உண்மையாகில் அந்தப் பெண்ணைச் சிறைசெய்து ஓர் உண்மைத் தோட்டிக்கே மணம் செய்து வைப்பேன்" என்று நடுச்சபையில் சபதம் செய்தான் புருஷோத்தமன்.

சபதப்படியே பத்மாவதியைச் சிறை செய்யப் புருஷோத்தமன் அவள் தந்தை ஆண்டுவந்த தமிழ் மண்டலத்தின்மீது படையெடுத்துச் சென்ருன். ஒட்ட தேசத்துப் படை சென்றவிடம் எல்லாம் நாட்டைப் பாழ்படுத்தியது. எனினும் அவனுல் முதற்போரில் வெற்றிகொள்ள முடியவில்லே. மிக்க ஆத்திரத்துடன் போர் செய்தும் அவன் எண்ணம் நிறைவேறவில்லே. அவன் ஆத்திரமே இடையூருக விளேந்தது போலும்.

பெரும்படையைப் பலிகொடுத்து நாடு திரும்பிய புருஷோத்தமனுக்குத் தன் தோல்வியைப் பொறுக்க முடியவில்லே. தக்ஷிணத்தை ஆண்டுவந்த பாமனி ஸுல்தானும், வங்காளத்தை ஆண்டுவந்த இலியாஸ் ஷாஹி ஸுல்தான்களும் தன் பெயரைக் கேட்ட அளவிலேயே அஞ்சும்படி ஸகல கலிங்காதிபதியாக விளங்கிய அவன் சாதாரணமான ஒரு மண்டலாதிபதி யிடம் தோற்றுவிடுவதா? இரண்டாந்தடவையும் படை யெடுத்துச் சென்ருன்.

இது அவன் நினேத்தபடி வெற்றிகரமாக முடிந்தது. ஆற்றின் புதுவெள்ளம் போலப் புரண்டுவந்த கலிங்கப் படையின் முன்பாக விஜயநகர மண்டலாதிபதி நிற்க முடியவில்லே, அவன்கீழ்ச் சிற்றரசர்களும் தலேகுனிந் தனர். கலிங்கப்படை காஞ்சீபுரத்தைக் கைக்கொண்ட துடன் நிற்கவில்லே; தெற்கே காவிரிக்கரை வரையில் சென்று நாட்டின் பல பாகங்களேயும் சூறையாடியது. திருவாரூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்கள் புருஷோத்தமன் ஆளுகையின்கீழ் வந்தன.(அவன் படை விளேவித்த இன்னல்களேத் தமிழ்நாட்டு மக்கள் வெகு காலம்வரை மறக்கமுடியவில்லே. அது 'ஒட்டியன்

கலாபம்' என்று சாஸனங்களில் மிகுதியாகக் குறிக்கப் பட்டுள்ளது.)

புருஷோத்தமன் காஞ்சீபுரத்தைக் கைப்பற்றிய காலத்தில் அங்கே வாழ்ந்துவந்த பத்மாவதியையும் சிறைகொண்டான். அவன் அந்தப் பெண்ணைக் கண் எடுத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. அவ்வாறு தன்னை அவமானம் அடையச் செய்தவளை, போரில் வெற்றி பெற்றவனாயினும். நேரில் பார்ப்பது தன்னு டைய கௌரவத்திற்குக் குறைவு என்று எண்ணினான் போலும். பேரழகியான பத்மாவதியின் மையலில் எங்கே ஈடுபட்டு மனம் இளகித் தன் சபதத்துக்குப் பங்கம் ஒருகால் நேர்ந்துவிடுமோ என்ற பயமாகவும் இருக்கலாம்.

வெற்றிப் படையுடன் வீர சிங்காதனத்தின்மீது அவன் அமர்ந்திருக்குங்கால் கைப்பற்றிய பொருள்களை யும் சிறைசெய்த முக்கியஸ்தர்களையும் தர்பாரில் கொணர்ந்து ஆஜர் செய்ய இருந்தனர் அவனுடைய பரிவாரத்தார். பத்மாவதியைத் தவிர மற்றையோர் களையே அனுமதித்தான் புருஷோத்தமன்.

சிறைசெய்யப்பட்ட மண்டலாதிபதியும் அவன் குடும்பத்தவர்களும் கூடியிருந்தனர். அவர்கள் யாவரும் கேட்கும்படியே உத்தரவிட்டான் அரசன்.

"பண்டித மஹாசயரே! நான் முன்பே தீர்மானித் துள்ளபடி, பத்மாவதியை இன்றைத் தினத்திலிருந்து ஆறுமாத காலத்திற்குள்ளாக ஓர் உண்மைத் தோட்டிக்கு நீர் மணம் செய்துவைத்துவிட வேண்டும். அந்தக் காரியம் உமது பொறுப்பு. இதுவே என் ஆணை."

7

அந்தக் காலவரையறை முடிந்துவிடப் போகிறது. அன்றைத்தினம் தேர்த் திருவிழாவின் கடைசிநாள். அன்று சூர்யாஸ்தமனத்திற்குள் மந்திரி அரசன் ஆணையை நிறைவேற்றிவிட வேண்டும். ஆயினும் இந்தப் பழிக்கு ஆளாக விரும்பவில்லை கிழவன். பத்மாவதியின் உள்ளத்தை, புருஷோத்தமன் உள்ளத்தையுங் கூட, நன்கு அறிவான் அவன்.

காலம் ஒன்றுக்குத்தான் மனப்புண்ணை ஆற்றும் சக்தி உண்டு. நாட்கள் செல்லச் செல்லப் புருஷோத்தமனுடைய கோபமும் தணிந்தது. பத்மாவதியைப் பண்டித மஹாசயரிடம் ஒப்பித்த சில தினங்களுக்கெல்லாம் அவன் கோபம் அறவே ஒழிந்ததுமட்டுமல்லாமல் அவள்மீது பச்சாத்தாபமும் உண்டாயிற்று.

'அவள் தந்தை விளைவித்த அவமானத்துக்குப் பத்மாவதி எவ்விதம் பாத்தியப்படுவாள்? அவள் ஒரு பொழுதும் நம்மை நிந்தித்ததில்லை. நம்மையே அடைய வேண்டும் என்று காத்திருந்தாள். எனினும் அது நிறைவேருதபடி விதி குறுக்கே நின்று தடுத்தது. அவள் தந்தை செய்த குற்றத்துக்காக அவளைத் துன்புறுத்துவது அநியாயந்தான்' என்றெல்லாம் எண்ணினான். போர்வீரன் முன்வைத்த காலைப் பின்வாங்குவனா? அதனை அப்படியே விட்டுவிட்டான்; காலக்கிரமத்தில் அவளை அறவே மறந்துவிட்டான் என்றும் கூறலாம்.

ஆனால் பத்மாவதிக்கு அதனை அவ்வாறு மறக்க முடியுமா? அவள் வாழ்க்கையின் முடிவு நம்பிக்கை என்னும் நூல்முனையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அரசன் ஆணைப்படி தான் ஒரு தோட்டியை மணக்க

நேரிடில் உயிரை விடவும் சித்தமாக இருந்தாள். அரச குடும்பத்தில் பிறந்தவள் அன்றோ அவள்? 'எல்லாம் வல்ல புருஷோத்தமன் ஒருவன் இருக்கிறான்; அவன் தன்னைக் கைவிடமாட்டான்' என்பதை அவள் நிச்சயமாக நம்பிப் பாரத்தை அவன்மீது போட்டுச் சேவை செய்துவந்தாள்.

இப்படி, அவர்களுடைய மனப்பான்மையை நன்கு அறிந்த கிழவன் அரசனிடம் பத்மாவதியைப்பற்றிப் பரிந்து பேசுவதற்குச் சமயம் பார்த்திருந்தான். திடீரென்று இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்கு அவனுக்கு உண்மையில் பயமே. நன்மையை விளைவிப்பதற்குப் பதில் கெடுதலாக முடிந்துவிட்டால்?

மந்திரி எதிர்பார்த்திருந்த சமயமும் கிட்டியது. அன்றைத்தினம் அவன் தேரடிக்கு வந்ததுமுதல், அரசன் முகத்தையே கூர்ந்து கவனித்து வந்தான். மன்னன் உள்ளத்தில் ஏற்படும் கிளர்ச்சிகளை அவன் அறிந்து கொள்வதற்கு முன்னதாகவே கிழவன் உணர்ந்து அவற்றுக்கு ஏற்றபடி நடந்துவந்தான்.

புருஷோத்தமன் பத்மாவதியைக் கண்டு சற்றுத் திகைத்து நின்றான். பழைய ஞாபகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவனுக்கு வந்தன. அதனை அறிந்துவிட்டான் மந்திரி. அவ்வளவுதான்: பத்மாவதி கையைப் பிடித்து அழைத்து மன்னன் முன்னிலையில் நிறுத்தினான்.

"தங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது ஒன்றுண்டு. அரசர் ஆணைக்கு எல்லோரும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதற்கு விலக்கே இல்லை. விஜயநகர ராஜ குடும்பத்தில் பிறந்த இந்தப் பெண்ணை ஒரு தோட்டிக்கு மணம் செய்துவைக்க வேண்டும் என்பது எனக்கு

அரசர் இட்ட உத்தரவு. இவளுக்குத் தகுந்த வரன் இதுகாறும் கிடைக்கவில்லை. தேரடியில் தோட்டி வேலை செய்யும் தாங்களே இவளுக்குத் தக்க வரன் ஆவீர்கள். ஆதலின் தாங்கள் இவளைத் திருமணம் செய்து அரசராணையை நிறைவேற்றவேண்டும்."

மந்திரி பண்டித மஹாசயர் மிக்க சாமர்த்தியமாகக் கோரிய இந்த வேண்டுகோளை மன்னன் மறுக்க முடியுமோ? அரசன் ஆணையை அவனே புறக்கணித்து விட்டால் மற்றையோர் மதிப்பாரோ?

[அதுமுதல் பத்மாவதி ஒட்டதேசத்து அரசன் புருஷோத்தமன் மனைவி ஆனாள். அதுமட்டுமல்ல; பட்டத்தரசியாகவும் ஆனாள். அவள் வயிற்றில் பிறந்த மகன் பிரதாபருத்திரனே தன் தந்தைக்குப் பிறகு, கி. பி. 1497-ஆம் ஆண்டில் ஸகல கலிங்காதிபதியாக முடிசூட்டப்பெற்றான்.]

எச்சிற் பாண்டம்

1

"என்னுடைய ஆயுட்காலத்தைத் தங்கள் அடிமை யாகவே - பணிப்பெண்ணுகவே - கழித்துவிடுகிறேன்" என்று கூறினுள் அவள்.

அவள் பேசிய பாஷை அங்குள்ளவர்களுக்கு நன்ருகப் புரியவில்லை. அது மேற்கத்திய ஹிந்தி, பார சீகம், அராபு ஆகிய மூன்றும் கலந்த கொச்சையாக இருந்தது. ஆயினும் அவளுடைய பணிவு, கண்களும் கைகளும் காட்டிய ஜாடை முதலியவற்ருல் அவள் கூறுவது என்ன என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். அன்றியும் அவள் கூறுவதை அறிந்து அவர்களுக்கு விளக்கிச் சொல்வதற்கு ஓர் அதிகாரியும் இருந்தான்.

அவளுடைய பதில் காலிபாவுக்குச் சிறிது நம்பிக் கையை உண்டுபண்ணியது.

"அதுதான்சரி. நான் உன்னை என் பிரதான பத்தினியாக, பட்ட மகிஷியாக, செய்துவிடுகிறேன். அந்தப் பதவியை ஏற்று என் அரண்மனையையே ஒளி பெறச் செய்வாய்" என்று வாய்மலர்ந்தருளினுன் காலிபா.

"தங்களுக்குத் தெரியாததல்ல. அப்படிப்பட்ட உன்னதமான பதவியை அடைவதற்கு இந்த அடிமை சிறிதும் தகுதி வாய்ந்தவள் அல்ல."

இந்தப் பதிலைக் கேட்டு யாரும் பேச முன்வரவில்லை. அங்கே கொஞ்சநேரம் நிச்சப்தம் நிலவியது.

'இப்பொழுது அப்படித்தான் சொல்லுவாள். எல்லாம் நாளாக ஆகச் சரிப்பட்டுப் போய்விடும். மன்னன் அன்பைப் பெற்று அரசாங்கத்தையே ஆட்டிவிடமாட்டாளா?' என்று எண்ணினர் சிலர்.

'அதிர்ஷ்டம் வந்தால் அதனை அனுபவிக்கத் தெரியவேண்டாமா?' என்று இரங்கினர் மற்றும் சிலர்.

ஆனால் அந்தப் பதில் காலிபாவுக்குக் கொஞ்சம் ஏமாற்றத்தை அளித்தது. அதற்கு அந்தப் பதிலே முக்கிய காரணம் என்றும் சொல்லமுடியாது. கம்பீரமாக நின்று சொன்ன அவளுடைய தோற்றமே அத்தகைய உணர்ச்சியை உண்டுபண்ணியது. அவளுடைய முகத்தில் தோன்றிய ஜொலிப்பு அவள் அவ்விதமே நிச்சயமாகக் கருதியிருந்தாள் என்பதைத் தெரிவித்தது.

காலிபா அவள் பதிலை வேறுவிதமாகவும் அர்த்தம் செய்துகொண்டான்.

"என்ன! அல்லாவின் பிரதிநிதி, இஸ்லாம் ஸாம்ராஜ்யத்தின் அதிபதி, நான் - அந்தப் பதவிக்கு நீ தகுதியுள்ளவளா இல்லையா என்பதை நிச்சயிக்கவேண்டிய நான் - இஷ்டப்பட்டுக் கொடுக்கிறேன். அதை மறுத்துக் கூறுவதற்கு யாருக்கு உரிமை உண்டு? தைரியம் உண்டு? என் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுப்பவரும் உண்டோ?" என்று கர்ஜித்தான் காலிபா.

"நான் அப்படிச் சொல்லவில்லை. தாங்கள் அருள் கூர்ந்து அளிக்கும் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே என் எண்ணம். ஆனால்...இந்த அடிமையின் உடல் அதற்குத் தக்க பாத்திரம் அன்று என்பதையே

விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்" என்று கூறிய அவள் பலபலவென்று கண்ணீர் உகுத்தாள்.

அவளுடைய துக்கம் அங்குள்ளவர்களையே ஆட்டி விட்டது. எல்லோரும் அதைப் பகிர்ந்து கொண்டனர் என்றே கூறவேண்டும்.

"ஏன், ஏன்? எதற்காக வருத்தப்படுகிறாய்?" என்று கேட்டுக்கொண்டே தன் ஆஸனத்தினின்றும் எழுந்திருந்தான் காலிபா.

அவன் எழுந்திருந்தது அவளுடைய கண்ணீரைத் துடைத்து அவளைத் தேற்றுவதற்காகவே என்று தோற்றியது.

"அப்படி ஒன்றும் செய்யக்கூடாது. இது ஓர் **எச்சிற் பாண்டம்**......ஒருவர் சுவைத்துப் பார்த்து எறிந்த சக்கை......தங்கள் சேனாபதி முகம்மது...... எங்கள் இருவரையும்......."

காலிபாவுக்குக் கோபம் ரௌத்ராகாரமாக வந்தது. அவள் அந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்யும் வரையில் கூட அவனால் காத்திருக்க முடியவில்லை.

"என்ன? அந்த அற்பப்பயல் தொட்டுக் கெடுத்து விட்டானா? அவனுக்கு அவ்வளவு துணிவா? கைப்பற்றியவுடன் அப்படியே இவ்விடம் அனுப்பவேண்டியிருக்க உன்னைக் கண்ணெடுத்துப்பார்க்கவும் அவனுக்கு அதிகாரம் ஏது?.......இதன் பலனை அவன் அனுபவிக்கிறானா, இல்லையா, பார்!"

காலிபாவின் கோபத்தைக் கண்டு அங்குள்ளவர்கள் நடுங்கிவிட்டனர்.

காலிபா அதனை உண்மையென்றே தீர்மானித்தான். அவளுடைய தோற்றமும் அதனையே அறிவித்தது. ஏன்

அவ்விதம் இருக்கமுடியாது? முகம்மது காளைப் பருவத்தினன், இருபது வயதுதான் ஆகிறது; நல்ல அழகு வாய்ந்தவன். பருவத்தின் இயற்கையை மாற்ற முடியுமா?

"அந்த அற்பனை உயிருடனே பிணமாகவோ உடனே இவ்விடம் கொணரவேண்டியது" என்று உத்தரவிட்டான் காலிபா.

2

இத்தகைய துரோகத்தை எதிர்பார்க்கவில்லை காலிபா. அது அவன் மனத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கியது; அவன் கண்ட கனவுகளையும் கொண்டிருந்த எண்ணங்களையும் சிதைத்து எறிந்தது. இதற்காகவா அவன் இவ்வளவு நாட்கள் - இரண்டு மாதகாலம் - காத்திருந்தான்?

காலிபா என்றைத் தினம் அவளை முதல் முதல் பார்த்தானே அது முதலே அவன் தன் மன அமைதியை இழந்துவிட்டான். அன்றைத்தினம் அவன் தர்பாரில் உட்கார்ந்திருந்தான். விசாலமான அறையில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நடுவில் உட்கார்ந்திருந்த காலிபாவுக்கு இருபுறமும் வஜீர், சேனபதி முதலிய உத்தியோகஸ்தர்கள் கூடியிருந்தனர். இடுப்பில் வாளுடன் கச்சை கட்டி ஒரு கையில் கேடயமும் மற்றொரு கையில் ஈட்டியும் தாங்கிய போர் வீரர்கள் காவல் புரிந்துவந்தனர்.

ஸிந்துப் பிரதேசத்தில் இஸ்லாம் மதத்தின் வெற்றிக் கொடியை நாட்டிய தளகர்த்தன், அவ்விடம் கொண்ட திறைப் பொருளைக் காணிக்கை அனுப்பி

யிருந்தான். அதனைக்கண்டு பெருமை கொண்டாடுவதற்காகவே கூடியிருந்தது அந்தத் தர்பார்.

அடிமைகள் கூட்டங்கூட்டமாகத் தாங்கள் சுமந்து வந்த மூட்டைகளைத் தர்பார் மண்டபத்தில் இறக்கிப் பிரித்துக் காணிக்கைப் பொருள்களைக் காலிபாவின் சமூகத்தின்முன் வைத்து ஒதுங்கி நின்றனர். அவர்களுடன் காவல் புரிந்துவந்த குதிரை வீரர்களும் முற்றத்தில் அணிவகுத்து நின்றனர். அவர்களுக்குத் தலைமை பூண்டு அதிகாரியாக விளங்கியவன் தர்பாருள் நுழைந்து மண்டியிட்டு வணங்கித் தான் கொணர்ந்திருந்த கடிதத்தைக் காலிபாவின் பாதத்தில் வைத்து மறுபடியும் வணங்கிப் பின்னடைந்தான்.

சபையினர் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றிய ஆபரணத்தை எடுத்துக் கண்டுகளித்து இச்சக வார்த்தைகளை மொழிந்து வைத்துச் சென்றனர். அவற்றைக் கணக்கு எடுத்துக் குறித்துக்கொண்டு கஜானுவில் சேர்க்கவேண்டிய அதிகாரியும் உடன் இருந்தான். பொன்னும் மணியும் ஆபரணங்களும் ஏராளமாகக் குவிந்திருந்தன.

காணிக்கையாக வந்த பொருள்களைப் போலவே அவற்றைத் தாங்கி வந்த அடிமைகளும் தளகர்த்தன் போரில் கைப்பற்றியவர்களே. அவர்களையும் தளகர்த்தன் காலிபாவுக்கு அர்ப்பணம் செய்திருந்தான். காலிபா அவர்களைத் தன் இஷ்டம்போல் உபயோகிக்கலாம்; ஜனுனுவில் சேர்த்துக்கொண்டு தனக்கும் மற்ற மஹிஷிகளுக்கும் பணிப்பெண்களாக வைத்துக்கொள்ளலாம்; அல்லது அவர்களைத் தன் உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கலாம். அதுவும் இஷ்டமில்லாவிட்டால் சந்தையில் ஆடுமாடுகளைப்போல ஏலம்போட்டு விற்று

விடலாம். இதனுள் ஏதோ ஒன்று அவரவர்களுடைய அழகுக்கும் அந்தஸ்துக்கும் தக்கபடி நடக்கும்,

காலிபா அந்த அடிமைப் பெண்களை ஒவ்வொருவ ராக ஏறிட்டுப் பார்த்துச் சோதனை போட்டான். அவர்கள் எல்லோரும் ஸிந்துதேசத்தின் உயர்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ; கண்டோரை மயக்கும் வசீகரம் வாய்ந்தவர்கள். அவர்களுக்கு நடுநாயகமாக விளங்கியவர் இருவர். அவ்விருவரும் மற்றவர்களைப் போலத் தங்கள் தலையை மட்டும் முட்டாக்குப் போட்டு மறைத்துக்கொள்ளாமல் முகம்மதியர்களைப் போலத் தங்கள் உடலின் எந்தப் பாகமும் வெளியில் தெரியாதபடி படுதாப்போட்டு மறைத்துக் கொண்டிருந்தனர். மற்றையோர் அவ்விருவருக்கும் காட்டிய மரியாதையைக் கவனித்தால் அவர்கள் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்பது நன்கு புலப்படும்.

அவர்கள் உண்மையில் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த வர்களே. அவ்விருவரும் ஸிந்து தேசத்தை ஆண்டுவந்த அரசனுன ராஜாதிராஜன் தாகர் என்பவனுடைய அருமைப் புதல்விகள். தாகரைப் போரில் வென்று நாட்டைச் சூறையாடிய தளகர்த்தன் இமாத் உத்தீன் முகம்மது அவ்விருவரையும் கைப்பற்றிக் காலிபாவின் ஐஞனுவுக்கு அனுப்பி வைத்தான். அவன் எழுதிய கடிதத்திலும் அதனேயே குறித்திருந்தான்.

தளகர்த்தனது கடிதத்தைப் படிக்கக் கேட்டான் காலிபா. ‘அந்த அரசிளங்குமரிகளுடைய அழகைப்பற்றி அவன் விவரித்திருப்பது உண்மைதாஞ ? ஸிந்துதேசத் தில் உள்ளவர்கள் மிகுந்த எழில் வாய்ந்தவர்கள் என்பது உண்மைதான். ஆயினும் அவ்விருவருக்கும் சமான

மாகக் கூறக்கூடியவர்களை அதுவரையில் தான் கண்ட தில்லை என்று முகம்மது கூறுவது வாஸ்தவமாக இருக்குமா ?' என்றெல்லாம் மயங்கினான்.

காலிபா தன் போர்வீரன் ஒருவனைக் கூப்பிட்டு அந்தப் பெண்கள் போர்த்திருந்த போர்வையை எடுக்கும்படி உத்தரவிட்டான். அவ்வளவுதான். தான் காண்பது கனவா நனவா என்பதையே உணரமாட்டாதவனாகத் தவித்தான் காலிபா. அவ்விருவரும் ஜகஜ்ஜோதியாக ஜ்வலித்தனர். அப்பொழுதே, அவர்களை எப்படியாவது தன் மனைவிகளாக ஆக்கிக்கொண்டுவிடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான்.

அவர்களை உடனே அடைய விரும்பவில்லை காலிபா. 'இவர்கள் மனத்துள் தந்தை போரில் இறந்து ராஜ்யத்தைத் துறந்த துக்கம் நிரம்பியிருக்கும். அன்றி, வழி நடந்த களைப்பு வேறு இவர்களை வாட்டிவரும். ஆதலின் இவர்கள் போகும்வழியே கொஞ்சகாலம் விட்டுவிட வேண்டும். இவர்களை ஜனுனாவில் சேர்த்துவிட்டால், சில நாட்களுக்கெல்லாம் இவர்கள் மனத்துயரம் நீங்கி விடும். களைப்பு நீங்கி முன்போலவே சந்தோஷமாக இருந்துவரத் தலைப்படுவர். அதற்குப் பிறகு இதனைப் பற்றி யோசிக்கலாம்' என்று முடிவுசெய்தான் காலிபா.

3

ஆனால் அவர்களோ தங்களுக்கு நேர்ந்த கதியை எளிதில் மறக்கவில்லை. அதனை மறக்கவும் முடியுமோ?

அவர்கள் தந்தைமீது காலிபா போர் தொடுப்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லை.

அது இன்றைக்குச் சுமார் ஆயிரத்திருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அக்காலத்தில்

அராபு முதலிய தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் கடல் மார்க்கமாக வியாபாரம் நடந்து வந்தது. இலங்கையரசன் வருஷவாரியில் காலிபாவுக்குக் காணிக்கை அனுப்பிவந்தான். இலங்கைத்தீவில் வசித்துவந்த முகம்மதியர்கள் எகிப்து அராபிதேசம் முதலிய இடங்களில் உள்ள தங்கள் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்துவந்தனர்.

அந்த வருஷம் அவ்விதமே சென்ற கப்பல் ஒன்று ஸிந்துநதியின் முகத்துவாரத்திற்கு அருகில் கடற்கொள்ளைக்காரர்கள் சிலரால் கொள்ளையடிக்கப்பட்டது. அது கடலில் மூழ்கிவிட்டது. அதில் இருந்த பிரயாணிகளுள் கொஞ்சம் பேர்களே தப்பினர். விலையுயர்ந்த பொருள்கள் பல நஷ்டமாயின.

அக்காலத்திலே அராபிதேசத்துக்குக் கிழக்கேயுள்ள முகம்மதியப் பிரதேசங்கள் எல்லாம் இராக்கில் மண்டலாதிபதியாக இருந்த ஹஜ்ஜாஜ் என்பவன் ஆதிக்கியத்தின்கீழ் இருந்தன. இந்த நிகழ்ச்சியைக் கேட்ட அவன் ஸிந்துதேசத்து அரசனை தாகருக்குக் கடிதம் எழுதி அனுப்பினான். 'புண்ணிய க்ஷேத்திர யாத்திரைக்காக வந்த முஸ்லீம்களைக் கொள்ளையிட்டு அவர்கள் ஏறியிருந்த கப்பலை மூழ்கடித்தது பெருந் தவறு; மகா பாதகமான செயல். அதற்கு உடனே பரிகாரம் செய்வதுடன் இனி அவ்விதம் நேராவண்ணம் அதற்குப் பொறுப்பாளிகளைப் பிடித்து எங்கள்வசம் ஒப்பிக்கவேண்டும்' என்று கண்டிருந்தது அந்தக் கடிதத்தில்.

தாகர் என்ன செய்யக்கூடும்? கடற்கொள்ளைக்காரர்கள் அவனுக்கு அடங்கியவர்கள் அல்லர். பக்கத்து ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். அந்த அரசனோ தாகரை

விடப் பலம் வாய்ந்தவன். ஆதலின் அவன் தன்னுடைய சக்தியற்ற நிலைமையை ஹஜ்ஜாஜுக்குத் தெரிவித்து விட்டான்.

ஹஜ்ஜாஜ் அதனை நம்பவில்லை. குற்றவாளிகளைத் தப்புவிக்கவேண்டியே தாகர் அவ்விதம் எழுதியுள்ளான் என்று எண்ணினான். அதனால் அவன் மிகுந்த பிரயாசை கொண்டு காலிபாவின் உத்தரவைப் பெற்றுப் பெரும் படை ஒன்றைத் தயாரித்து ஸிந்து தேசத்தின் மீது அனுப்பினான்.

அதுவும், அதேபோல மறுவருஷம் அனுப்பப்பட்ட மற்றொரு படையும் போரில் சின்னபின்னம் ஆக்கப் பட்டன. சேனைத்தலைவர்கள் போர்க்களத்திலே உயிர் துறந்தனர். அவற்றைக் கண்ட ஹஜ்ஜாஜ் அவமானம் பொறுக்கமுடியாமல் பழிக்குப்பழிவாங்க எண்ணித் தன் மருமகனான முகம்மதையே தளகர்த்தனாக நியமித்து அவன் வசம் ஒரு பெரும்படையை அனுப்பினான்.

அதிகம் கூறுவானேன்? (கி. பி. 712-ஆம் வருஷம் ஜூன் மாதம் 12-ஆம் தேதி) தாகர் போர்க்களத்திலே உயிர் துறந்தான். தலைவனை இழந்த ஸிந்துதேசப் படை சிதற அடிக்கப்பட்டது. முகம்மது வெற்றி பெற்றான். நாட்டைக் கொள்ளையிட்டு ஏராளமான பொன்னைக் கைக்கொண்டான். அழகிய பெண்கள் பலரைச் சிறை பிடித்தான். அவர்களுள் முன்னே கூறியபடி தாக ருடைய பெண்கள் இருவரும் இருந்தனர்.

4

காலிபாவின் அந்தப்புரத்தில் ஸிந்துதேச ராஜ குமாரிகள் நடத்திய வாழ்க்கையை நாம் விவரிக்க முடியாது. அவர்களுக்கோ அராபி பாஷை தெரியாது.

அங்குள்ளவர்களுக்கோ ஹிந்தி தெரியாது. பிராம்மண குலத்தைச் சேர்ந்த அவர்கள் அங்கே வாழ்வதற்கு ஒருப் படவில்லை. எப்படியாவது வெளியேறவேண்டும் அல்லது உயிர் துறக்கவேண்டுமென்று எண்ணிச் சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அலிகள் அவ்விருவரையும் காவல் காத்து வந்தமையால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

அவர்கள் ஜனனாவில் புகுந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. வேனிற் காலமும் வந்தது. ஒரு நாள் இரவு சந்திரன் தன் வெண்ணிலவை வீசிக்கொண்டிருந்தான். காலிபா அன்று இரவை உல்லாஸமாகக் கழிக்க விரும்பினான். இடைவிடாமல் ஸ்மரித்து வரும் ஸிந்து தேச ராஜகுமாரிகளின்மீது சென்றது அவனது மோகம். உடனே அவர்களில் ஒருத்தியைத் தன்னுடைய பள்ளியறைக்கு அழைத்துவருமாறு அலிகளுக்கு உத்தரவிட்டான்.

அவ்விரு பெண்களும் இணைபிரியாமல் வாழ்ந்து வந்தனர். இருவரும் நல்ல அழகுள்ளவர்கள். அவர்களில் யாரை அழைத்துச் செல்வது என்பது புரியவில்லை அந்த அடிமைகளுக்கு. ராஜகுமாரிகளிலும் ஒருத்தியும் தனியாகச் செல்ல விரும்பவில்லை. இருவரும் சேர்ந்தே காலிபாவின் பள்ளியறையை அடைந்தனர். மொழி பெயர்ப்பாளர்கள் பக்கத்தில் இருந்தனர்.

அவர்களுடைய வனப்பில் ஈடுபட்ட காலிபா, "பேஷ்" என்று வாய்விட்டுச் சிரித்தான். அவர்களும் காலிபாவை மயக்கும் வண்ணமே தங்களைச் சிங்காரித்துக் கொண்டிருந்தனர்.

"உங்கள் பெயர் என்ன ?"

"இந்த அடிமையின் பெயர் சூர்யதேவி. இவள் பெயர் பத்மதேவி" என்றாள் அவர்களுள் ஒருத்தி.

அவர்களுள் சூர்யதேவி மூத்தவள்.

"சரி, சூர்யதேவி இவ்விடமே இருக்கட்டும். பத்மதேவியை அழைத்துச் செல்லுங்கள். நாளைத்தினம் பார்த்துக்கொள்ளலாம்" என்று குறிப்பாகத் தெரிவித்தான் காலிபா.

அப்பொழுதுதான் சூர்யதேவி மேலே சொன்னபடி காலிபாவின் கனவுலகைத் தகர்த்தெறிந்தாள்.

5

காலிபா தன் தளகர்த்தனுக்கு விதித்த தண்டனையை ஒருவரும் நிறைவேற்ற விரும்பவில்லை. அந்தக் காரியத்தைச் செய்துவிட்டால் ஏகாதிபத்தியத்தின் முக்கியமான காரியம் கெட்டுவிடும்; பூலோகம் எங்கும் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் வேலை தடைப்பட்டுவிடும்; புதிதாகக் கைக்கொண்டுள்ள ஸிந்துப் பிரதேசம் கையை விட்டு நழுவிவிடும்.

எனினும் அந்த உத்தரவை அலட்சியம் செய்யவும் அவர்களுக்குச் சக்தி இல்லை. அதனை உடனே முடிக்காவிட்டால் தங்கள் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயந்தனர்.

அதனைக் குறிப்பாக அறிந்த காலீபா தன் கையாலேயே உத்தரவை எழுதி முகம்மதுக்கு அனுப்பினான். "இந்தக் கடிதம் கண்டவுடனே புறப்பட்டு டமாஸ்கஸ் வந்து சேரவேண்டியது" என்பது அதன் சாராம்சம். ஆனால் அம்மட்டோடு நிற்கவில்லை; அவன் தன் உடலைக் கழுதையின் பச்சைத் தோலைக்கொண்டு போர்த்தித்

தைத்துக்கொண்டு வரவேண்டும் என்றும் கண்டிருந்தது அந்தக் கடிதத்தில்.

முகம்மது உண்மை ஊழியன்; அதிகாரிகள் கீறிய கோட்டைத் தாண்டமாட்டான். அப்படிப்பட்டவன் காலிபாவின் உத்தரவுக்குக் கீழ்ப்படியாமலா இருப்பான்?

உடனே அவ்விதமே தன் உடலைப் பச்சைத் தோலைக் கொண்டு போர்த்திச் சட்டையாகத் தைத்துக் கொண்டு காலிபாவின் தலைநகரான டமாஸ்கஸுக்குப் புறப்பட்டான். ஆசியாவின் மேலைக்கோடியில் ஸிரியாவில் உள்ள டமாஸ்கஸிலிருந்து இந்தியாவுக்குக் கடிதம் வந்து அவன் புறப்படுவதற்குள் வஸந்த காலம் மாறிக் கடுங்கோடை வந்துவிட்டது. கதிரவன் தன் கிரணங்களை அக்கினிப் பிழம்புகளேபோலக் கக்கிப் பச்சைப் புல்லையும் கறுக்கிப் பொசுக்கி வந்தான். உடலுடன் ஒட்டினாற் போலத் தைத்த பச்சைத் தோல் எவ்வளவு நாள் அப்படியே இருக்கும்? அது சுருங்கி இறுகி முகம்மதை வாட்டியது; மூச்சைத் திணற அடித்தது. அவனால் ஹிம்ஸையைப் பொறுக்க முடியவில்லை. காலிபாவின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்த அவன் மூன்றே தினங்களில் தன் ஆவியைத் துறந்தான். காலிபாவும் இஸ்லாம் ஸாம்ராஜ்யமும் உண்மை ஊழியன் ஒருவனை இழந்தார்கள்!

6

நாட்கள் சென்றன. முறைப்படி தளகர்த்தன் சடலமும் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டு டமாஸ்கஸ் நகரம் வந்துசேர்ந்தது. அதனைக் காலிபா மிகுந்த ஆடம்பரத்துடன் வரவேற்றான்.

பெட்டியைத் திறந்து தளகர்த்தன் சடலத்தைப் பார்க்கும்பொழுது ஸிந்து ராஜகுமாரிகளும் தன்னுடன் இருக்கவேண்டும் என்று விரும்பினான் காலிபா. தன்னுடைய ஆணை எவ்விதம் நிறைவேற்றப்படுகிறது என்பதை அவர்களுக்குக் காட்டி அச்சுறுத்தித் தற்பெருமை கொள்ளவே போலும், அவ்விதம் நினைத்தான் அவன்.

ராஜகுமாரிகளும் வந்தனர். பெட்டியும் திறக்கப் பட்டது. முகம்மதின் உடலை வெளியில் எடுத்தனர் அடிமைகள்.

'ஆம், இவன்தான்; நம் தந்தை போர்க்களத்தில் இறப்பதற்குக் காரண பூதனாக இருந்தவன் இந்தப் பாதகன் தான்' என்று ஏக காலத்தில் எண்ணினர் அவ்விருவரும்.

"இப்பொழுது பார்த்தீர்களா, என்னுடைய ஆணையை எப்படி உடனே நிறைவேற்றுகிறார்கள் என்பதை?"

ராஜகுமாரிகள் இருவரும் வாய்விட்டுப் பலமாகச் சிரித்தனர். அவர்கள் சிரிப்பில் வெறுப்பும் பரிகாசமும் கலந்திருந்தன.

"ஹ ஹா! நன்மை எது, தீமை எது என்பதைக் கண்டறிய முடியாத மந்த புத்தியை உடைய தாங்கள் எப்படி இவ்வளவு பரந்த ராஜ்யத்தை ஆண்டு வருகிறீர்கள் என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையில் உங்களுடைய க்ஷேமத்தைக் கருதி நடந்து வரும் உத்தியோகஸ்தர்கள் யார் யார் என்பதை உங்களால் நிர்ணயிக்க முடியவில்லையே! உங்கள் தளகர்த்தன் முகம்மது பரிசுத்தம் வாய்ந்தவன். எங்களை அவன் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவன்மீது

நாங்கள் அபாண்டமாகக் கூறிய பழியைக் கேட்டு அவனைக் கொன்றுவிட்டீர்களே! உங்கள் சாம்ராஜ்யம் அவனால் மிகுந்த பயனை அடையவேண்டி யிருக்க அநியாயமாக அவனை இழந்துவிட்டது. எங்கள் தந்தையைக் கொன்ற அவனைப் பழிக்குப் பழி வாங்க எண்ணினோம். எங்கள் விருப்பம் நிறைவேறிவிட்டது. இனி எங்களை நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்; கவலையில்லை. நாங்கள் எண்ணிய காரியத்தை முடித்து விட்டோம்" என்று கூறினாள் சூர்யதேவி.

காலிபாவுக்கு அதனைக் கேட்கச் சகிக்கவில்லை. பொறுமையை இழந்தான். அசாத்தியமான கோபம் வந்தது. ஆயினும் என்ன செய்வது? இறந்தவன் பிழைப்பானா? அதற்குக் காரணமான தன்னையே நொந்துகொண்டான்.

இவ்வளவு தூரம் சென்ற பிறகு காலிபாவால் அவர்களைக் காதலிக்க முடியுமா? அவர்கள்மீது அவன் கொண்ட காதல் கொடூரமான துவேஷமாக மாறுவது இயல்புதானே? அவர்கள் அதற்குத் தப்பி உயிர் வாழ முடியுமா?

அவ்விருவரையும் குதிரை வாலில் கட்டி டமாஸ்கஸ் நகர வீதிகளில் துரத்தி அடித்தான் காலிபா. உண்மையை அறிந்த நகர மக்கள் அவர்கள்மீது கல் எறிந்தனர். குதிரைகள் வேறு உதைத்தன. வீதியில் மோதி மோதி அவர்கள் உடம்பின் தோல் வழண்டு ரத்தப் பெருக்கு எடுத்தது. சித்திரவதை போன்ற கஷ்டத்தை அனுபவித்து அவர்கள் உயிர் துறந்தனர். அவர்களுடைய பிணங்களை நரியும் கழுகும் பிடுங்கித் தின்னும்படி நகர்ப்புறத்தே எறிந்தான் காலிபா.

முற்பகல் செய்யின் -

1

அரசன் படுத்த படுக்கையாகக் கிடந்தான். பல சமயங்களில் உணர்வையும் இழந்துவந்தான். இனிப் பிழைக்கமாட்டான். மரணப்படுக்கைதான். அரண்மனை வைத்தியர்களும் கைவிட்டு விட்டார்கள். அரசன் தேகஸ்திதியையே எல்லோரும் கவனித்து வந்தார்கள். அரண்மனையில் உள்ளவர்களுக்கு, எவ்விதமான மாறுதல்கள் உண்டாகுமோ, என்ன குழப்பம் உண்டாகுமோ என்ற கவலை. நாட்டு மக்களுக்கோ, நாட்டின் நலத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டவனும் தங்கள் அன்புக்கு உரியவனுமான இளவரசன் அரசபாரத்தை மேற்கொள்ளுவானு என்ற சந்தேகம் இருந்தது.

அரசனுக்கு உணர்வு வந்தது. மந்திரியுடன் பேச விரும்பினுன். நாட்டின் பிரதான உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் தலைநகரிலே காத்துக்கிடந்தார்கள். மந்திரி அரண்மனையிலேயே இருந்து வந்தார். அரசன் தம்முடன் பேச விரும்புகிருன் என்பதை அறிந்த அவர் ஓடோடியும் வந்தார். மன்னன் உணர்வுடன் இருக்கும் பொழுதே கண்டு அவன் விருப்பத்தை அறிந்து அதனை நிறைவேற்றிவைக்க விரும்பினுர். அந்திய காலத்தில் ஒருவன் விரும்புவதைச் செய்து முடிக்க எவரும் பின் வாங்க மாட்டார்களே! தெய்வம், அரசியல், நாடு ஆகியவற்றின் சேவையையே தம் வாழ்நாளின் லட்சியமாகக் கொண்டு அரசனுடைய நிழலைப்போல விளங்கிவந்த

மந்திரிக்கு அதைக் காட்டிலும் வேறு வேலையும் உண்டோ ?

மந்திரி அரசன் சமுகத்தை அடைந்தார். அவரைக் கண்டதும் மன்னன் படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்றான் ; ஆனால் முடியவில்லை. பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் அரசனை அலத்திக் கொள்ளாதிருக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். அவன் படுத்தபடியே மந்திரியைப் பக்கத்தில் வந்து உட்காருமாறு ஜாடை செய்தான். மந்திரி அரசன் படுக்கையை அணுகி ஒருமுறை மண்டியிட்டு வணங்கி அவன் பக்கத்தில் ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். மன்னன் மந்திரியின் இருகைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, கெஞ்சும் பாவனையுடன் அவர் முகத்தைப் பார்த்தான், பேசுவதற்கு நா எழவில்லை, பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து மிரள மிரள விழித்தான். மந்திரி நிலைமையை வெகு சீக்கிரம் உணர்ந்து கொண்டார். அரசன் தம்முடன் ரகசியமாக ஏதோ ஒன்றைக் கூற விரும்புகிறான் என்பதை அறிந்த மந்திரி, பக்கத்தில் உள்ளவர்களை வெளியில் செல்லுமாறு சொல்லி அனுப்பிவிட்டு அரசன் ஆணையை எதிர்பார்த்திருந்தார்.

மன்னன் தன் மனத்தை ஒருவாறு திடம் செய்து கொண்டான். மிகவும் தாழ்ந்த குரலில் மந்திரியைக் கூப்பிட்டு, " திம்மாஜி, எனக்கு மரணம் கிட்டிவிட்டது. இனி அதிக நாழிகை ஜீவித்திருக்க மாட்டேன். நான் இறந்து போவதைக் குறித்து வருந்தவில்லை.............. எனக்குப் பிற்காலம் ராஜ்யம் என்னவாகும் என்பதை எண்ணும் பொழுதுதான் எனக்கு இறப்பதற்குத் தைரியம் உண்டாகவில்லை.........குழந்தை சிறுவனாக

இருக்கிறான்......தம்பி கிருஷ்ணனே நான் எப்பொழுது கண்ணை மூடப்போகிறேன் என்று காத்துக்கொண்டிருக்கிறான்.......ராஜ்யத்தை நான் உன்வசம் ஒப்பித்து விட்டேன். எனக்குப் பிற்காலம் என் பிள்ளைக்கு முடிசூட்டி வைப்பது உன் பொறுப்பு......" என்று கூறினான்.

அதற்குமேல் சிறிது நேரம் அப்படியே படுக்கையில் சாய்ந்திருந்தான். திடீரென்று வெறி கொண்டவன் போல ஒருமுறை உடலைக் குலுக்கி மந்திரியைப் பார்த்து, "கிருஷ்ணனுக்கு ஆசாபங்கம் ஏற்பட்டால் தான் இது கைகூடும்......அதற்கு ஒரே வழிதான் உண்டு........அவன் பார்வை இழந்து அந்தகனாக ஆகிவிடவேண்டும்.......கிருஷ்ணன் கபோதியாக வேண்டும். இல்லாவிடில் என் பிள்ளை சிங்காதனம் ஏற முடியாது. கிருஷ்ணன் கண்ணை உடனே இங்கே கொண்டுவர வேண்டும். அது உன்னால்தான் ஆகும். அதைப் பார்த்த பிறகுதான் என் ஆவி உடலை விட்டு நீங்கும்" என்று கூறினான். அவ்வளவுதான்; மன்னனுக்கு அதற்குமேல் பேச முடியவில்லை. களைப்பு மேலிட்டு விட்டது. அப்படியே மூர்ச்சையுற்றுப் படுக்கையில் சாய்ந்தான்.

இவ்விதம் நேரும் என்று மந்திரி எதிர் பார்க்கவில்லை. ஏதோ விபரீதம் நடக்கும் என்பது மாத்திரம் அவருக்குத் தெரியும். ஆனால் அது இவ்வளவுதூரம் செல்லும் என்பதை அவர் கனவிலும் கருதவில்லை. இதைக் கேட்டதும் மந்திரியின் உணர்ச்சி முழுவதும் போய்விட்டது. ஸப்தநாடிகளும் ஒடுங்கின. முகத்தில் பொலிவு நீங்கி உயிர் இழந்த மனிதரைப் போலவே விளங்கினார். தலை கிறுகிறுத்தது. அவரால் அவ்விடம்

உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. மன்னனுக்கு மறு படியும் உணர்வு வருவதற்கு முன்பு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணததோடு, என்ன செய்கிறோம் என்பதையும் அறியாதவராகி வெளியே போய்விட்டார்.

2

இவ்விதம் கட்டளை யிட்டவன், சுமார் நானூறு வருஷங்களுக்கு முன் விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த புஜபல மகாராயன் என்னும் துளுவ அரசனான மகாராஜாதிராஜ ராஜபரமேசுவர தக்ஷிண பஸ்சிம ஸமுத்திராதிபதி ஸ்ரீவீரப்பிரதாப வீரநரஸிம்ஹ ராய மஹாராயன் ஆவன். அவன் தன் தம்பியான கிருஷ்ணதேவராயனுடைய கண்களைப் பிடுங்கிவிடுமாறு தான் கட்டளையிட்டான்! கிருஷ்ணனுக்கு அப்பொழுது ஏறத்தாழ இருபத்திரண்டு வயதிருக்கும். நாட்டுமக்கள் அவனைத் தெய்வமாகவே மதித்துப் போற்றிவந்தார்கள். அவன் சிங்காதனம் ஏறி விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஆளும் காலம் எப்பொழுது வரும் என்றே ஏங்கியிருந்த னர்.

கிருஷ்ணன் மிகுந்த சாமார்த்தியம் வாய்ந்தவன். இந்திய நாட்டிலே உதித்த உத்தம அரசர்களுள் தலை சிறந்து விளங்குபவன். நாட்டின் நலத்தையே முக்கிய மாகக் கருதியவன்.

மந்திரி திம்மாஜி என்ன செய்வார்! அவர் கிருஷ்ண னைத் தம்முடைய இரண்டு பிள்ளைகளுடன் சேர்த்து மூன்றும் பிள்ளையாகக் கருதி வந்தார். அப்படிச் சொல்வதுகூடப் பிழை: அவருக்குக் கிருஷ்ணனே மூத்த பிள்ளை! மற்றிருவரும் அவனுக்கு இளையவர்

களே. பிறந்தது முதல் கிருஷ்ணதேவனைத் திம்மாஜியே தூக்கி வளர்த்தார்.

தம் கண்ணின் கருவிழிபோன்று வளர்த்துவந்த கிருஷ்ணனுடைய விழிகளைப் பிடுங்கிக் கொணருமாறு அரசன் உத்தரவிட்டது அவருக்கு இடிவிழுந்ததுபோல இருந்தது. ஆயினும் அவர் என்ன செய்வார்! அரசன் ஆணை; அதிலும் மரணப்படுக்கையில் இருப்பவனுடைய உத்தரவு.

அரண்மனையினின்றும் வெளிவந்த திம்மாஜி 'எவ்விடம் செல்கிறோம்' என்பதையே அறியாமல் நடந்தார். அவருடைய கால்கள் தாமாகவே கிருஷ்ணன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றன. அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாயினும், கிருஷ்ணதேவன் சுயேச்சை உடையவனாக இல்லை. வீரநரஸிம்மன் தன் தம்பியின் உயர்ந்த குணத்தையும் நாட்டு மக்கள் அவனிடம் வைத்திருந்த பிரீதியையும் நன்கு அறிந்திருந்தான். ஆதலின் அவன் குடிகளுடன் அதிகமாகப் பழகுவதை மன்னன் விரும்பவில்லை. ஆகவே தன் தம்பியை-வயதுவந்த இளவரசனை-சிறையிலிட்டதுபோல் ஒரு கட்டிடத்தில் வைத்து வெளியில் செல்ல முடியாதபடி காவல் புரிந்துவந்தான்.

மந்திரி திம்மாஜி கிருஷ்ணனைக் கண்டார். அரசன் ஆணையை அவனிடம் அறிவிப்பதற்கு அவருக்கு நாக்கு எழவில்லை. அவனைக் கண்டவுடன், அவருடைய துக்கம் பீரிட்டுக்கொண்டு வெளிக்கிளம்பியது. அவனைக் கட்டிக்கொண்டு ஓவென்று அழுதார். இளவரசனுக்கு ஒன்றும் புரியவில்லை; அப்படியே ஸ்தம்பித்துவிட்டான்.

கிருஷ்ணன் திம்மாஜியைத் தன் தந்தையாகவே பாவித்து வந்தான். அவர் எதிரில் உட்காரமாட்டான். பரமவேதாந்தியான மந்திரி, உலகப்பற்றை விடுத்து

ஸாம்ராஜ்யத்தின் க்ஷேமத்தையே முக்கியமாகக் கொண்டு தம் பதவியை வகித்து வருபவர், இவ்விதம் அழுவதைக் கண்டு அவனுக்குப் பொறுக்கவில்லை. சிறிது சிறிதாகவே அவரைத் தேற்றி விஷயத்தைத் தெரிவிக்குமாறு வேண்டிக்கொண்டான்.

மந்திரியால் சமாசாரம் முழுவதையும் தெரிவிக்க முடியவில்லை. இங்கொன்றும், அங்கொன்றுமாகத் தேம்பிக்கொண்டே கூறினார். கிருஷ்ணன் நிலைமையை அறிந்துகொண்டான். அவன் மிகுந்த திடசித்தம் வாய்ந்தவன் ; உண்மை வீரன் அன்றோ ?

" அப்பாஜி, இதற்காகவா வருத்தப்படுகிறீர்கள் ? இந்த ஸாம்ராஜ்யத்தை ஆளும் சக்கரவர்த்திப் பதவியில் எனக்கு மோகம் இருந்தால் அல்லவோ இதைப்பற்றி யோசிக்க வேண்டும்? தாங்கள் ஆதியில் எனக்கு உபதேசித்த வேதாந்தசாரம் என்ன? இந்த மாய உலகத் தில் எல்லாம் பொய்யே யன்றோ? எனக்கு இந்த ராஜ் யத்தில் சிறிதும் ஆசையில்லை. உலக பந்தத்தை அறுத் தெறிந்து, முக்திமார்க்கத்தையே கைக்கொள்ள விரும்பு கிறேன். அதற்கு நான் முக்கியமாகத் தங்களுடைய ஆசீர்வாதத்தையும் உத்தரவையுமே எதிர்பார்த்து நிற்கிறேன். உத்தரவு கொடுங்கள். இப்பொழுதே துறவறம் மேற்கொண்டு வெளியே போய்விடுகிறேன் " என்று கூறினான்.

மந்திரி ஒருவாறு ஆறுதலுற்றார். கிருஷ்ணனை அணைத்துத் தடவிக்கொண்டே, "குழந்தாய், நல்ல காரியம் செய்யப்பார்க்கிறாய் ! அதற்கு ஒருகாலும் நான் இடங்கொடேன். நாடு உன்னையே எதிர்பார்த்து நிற்கின்றது. உன்னால் ஆகவேண்டிய காரியங்கள் பல

உள. இந்த ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்வதற்கு நீதான் தகுதிவாய்ந்தவன்" என்று கூறினர்.

மந்திரி அவ்விடம் அதிகநேரம் தாமதிக்கும் நிலையில் இல்லை; உடனே அரண்மனைக்குத் திரும்பவேண்டும். இல்லாவிடில் அரசன் வேறு யாரையாவது மறுபடியும் அனுப்பக்கூடும். அப்படி நேர்ந்து விட்டால், இளவரசன், மந்திரி ஆகிய இருவருக்கும் ஆபத்துத்தான். புத்தி தடுமாற்றத்தை அடைந்தவனுதலால், அரசன் எதைச் செய்யவும் பின்வாங்கமாட்டான்.

சுய உணர்வு இல்லாத அரசனைத் திருப்தி செய்விக்க மந்திரி ஒரு தந்திரத்தைச் செய்ய நினைத்தார். ஆட்டின் விழி மனிதனுடைய விழியைப் போலவே இருக்கும். அதனால் ஓர் ஆட்டின் விழியைப் பிடுங்கிக் கொண்டுபோய் மன்னனுக்குக் காட்டிவிடலாம் என்று எண்ணினர். மரணப் படுக்கையிலிருக்கும் அரசன் அவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை அறியப் போகிறுனு?

மந்திரி வேலையாட்களைக் கொண்டு தாம் எண்ணியபடியே செய்து முடித்தார். வீரநரஸிம்மன் தன் பிள்ளைக்கே சிங்காதனம் நிச்சயமாயிற்று என்று எண்ணிச் சாந்தியுடன் உயிர்விட்டான்.

திம்மாஜி உயிருடன் இருக்கும்பொழுது, வீரநரஸிம்மனுக்குப் பிறகு யார் பட்டம் கட்டப்பெற்றுன் என்பதைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? ஏழு வயதுச் சிறுவனுல் என்ன செய்யமுடியும்? அந்தக் காலத்தில் ஸாம்ராஜ்யத்துக்கு மிகவும் சாமார்த்தியம் வாய்ந்த ஒரு சக்கரவர்த்தியே தேவை. கிருஷ்ணனையன்றி வேறு யாராவது உளரோ? கிருஷ்ணதேவராயனே அரசனுக முடிசூட்டப் பெற்றுன்.

3

மேலே கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த பின் பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. மறுபடியும் விஜயநகரத்தில் மகுடாபிஷேக மஹோத்ஸவம் நடக்கிறது. அந்த விழாவையும் மந்திரி சாளுவ திம்மாஜியே உடன் இருந்து நடத்திவைக்கிறார். அரசனாக முடிசூட்டப் பெறுபவன் கிருஷ்ணதேவனுடைய மகனான திருமலைத் தேவராயன் என்னும் சிறுவனே.

அரசிளங் குமரனுக்கு முடிசூட்டப் பெறுவதால் அதற்கு முன்பு நாட்டை ஆண்டுவந்த கிருஷ்ணதேவ ராயனுடைய காலம் முடிந்துவிட்டது என்று நினைத்து விடவேண்டாம். ராஜ்யம் தனக்கு வேண்டாம் என்று அவனே தன் மகனுக்குக் கொடுத்து, முடியும் சூட்டி வைக்கிறான்.

கிருஷ்ணதேவனுக்கு இளம்பிராயத்திலிருந்தே உலகம் அநித்தியம் என்னும் வேதாந்த சிந்தனை உண்டு. முன்னம் தன் தமையன் தன்னைக் கொல்லச் சதி செய்த காலத்திலும், கிருஷ்ணதேவன் உலகத்தைத் துறந்து, காஷாயம் தரித்துச் சந்நியாசியாகவே விரும்பினான். இப்பொழுதோ, பரகதியடைவதற்கு இந்த உலகப் பற்றை விடுவதே உத்தமமான மார்க்கம் என்ற பழைய எண்ணத்தினால் அவன் நாட்டைத் துறக்கவில்லை.

பழைய காலத்தில் பாரதநாட்டு மன்னர்கள் தங்கள் குமரர்களில் மூத்தவன் உரிய வயதை அடைந்தும் தங்களுக்கு மூப்பு மேலிட்டும் விட்டால் அவர்கள் தங்கள் மூத்த பிள்ளைக்கு மகுடாபிஷேகம் செய்து வானப்பிரஸ்தர்களாக மாறித் தவம் செய்யச் செல்வார்கள். கிருஷ்ணதேவன் அவ்விதம் செல்ல உத்தேசிக்கவில்லை. அவனுக்கு இப்பொழுது வயது நாற்பதுதான்

இருக்கும். நல்ல உடல் வலிமைபெற்றுச் சக்திவந்தனுக விளங்கி வந்தான். அன்றி, அவன் மகனே மிகவும் சிறியவன்; ஏழு வயதேயுள்ளவன்.

திருமலைத் தேவராயன் யுவராஜனுக முடிசூட்டப் பெறவில்லை; அவன் விஜயநகர ஸாம்ராஜ்யத்துக்கே சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெறுகிருன். கிருஷ்ண தேவன் தன் பட்டம் பதவி யாவற்றையும் துறந்து நாட்டுக் குடிகளுள் ஒருவனுக ஆகிவிட்டான். குழந்தை முடிசூட்டப் பெற்றவுடன், தன் மகனே யாயினும், அவன் நாட்டின் அதிபதியானமையின், கிருஷ்ணதேவன் அவன் முன் மண்டியிட்டு ராஜவிசுவாசப் பிரமாணம் செய்தான். அவன் அவ்விதம் பிரமாணம் செய்ய வேண்டியதற்கு மற்ருெரு காரணமும் உண்டு. ராஜ குமாரன் தக்க வயதை அடைந்து ராஜாங்கக் காரியத்தைத் தானே நேரில் கவனிக்கக்கூடிய நிலைமைக்கு வரும் வரையில் கிருஷ்ணதேவனே அவனுடைய காரிய கர்த்தாவாக இருந்து ராஜாங்க வேலைகளைக் கவனிக்கப் போகிருன்.

கிருஷ்ணதேவன் இப்படியெல்லாம் செய்தது எதற்காக?

முன்னம் அவன் பட்டத்துக்கு வருங்காலத்தில் நடந்த சம்பவங்கள் அவன் மனத்தை அலைத்துக்கொண்டிருந்தன. தனக்குப் பிற்காலம் யார் அரசனுக முடிசூட்டப் பெறுவான் என்னும் சந்தேகமே அவன் உள்ளத்தில் ஊசலாடியது. அவனுக்கு அச்சுதன் என்ற தம்பி ஒருவன் இருந்தான். அவன் இக்காலத்தில் உரிய பருவத்தை அடைந்து ராஜீய விஷயங்களில் கலந்துகொண்டிருந்தான். குழந்தையோ சிறுவயதினன். திடீரென்று தான் இறந்துவிட்டால், ராஜ்யம் தன்

பிள்ளைக்குக் கிடைக்காமல், அச்சுதன் கைவசம் ஆகி விட்டால் என்ன செய்வது? நிச்சயமாகத் தன் பிள்ளை தான் ராஜா என்பதை ஸ்தாபிக்க எண்ணினான் மன்னன். அதற்காகத்தான் தன் ஜீவிய காலத்திலேயே திருமலைத் தேவராயனுக்கு முடிசூட்டிவிட்டான். ஆசைகளை வெறுத்துத் துறவியாக விரும்பியவன் செய்கைகளா இவை!

4

நகர் எங்கும் ஒரே பரபரப்பு. செய்தியைக் கேட்டவர்கள் உண்மையாக இருக்குமா என்றே ஐயுற்றனர். உண்மையறிந்தவர்கள் கலி முடிந்து பிரளய காலந்தான் தோன்றிவிட்டதோ என்று எண்ணினார்கள். வேறே எந்த விதமாக இருக்கக்கூடும்?

கிருஷ்ணதேவ ராயனே, தன் தந்தையைக் காட்டிலும் அதிகமாக மதித்துப் போற்றிவந்த மந்திரி சாளுவ திம்மாஜியைக் கைது செய்துவிட்டான். அவ்விதம் செய்வதற்கு அவனுக்குத் தைரியம் உண்டாயிற்று? உடல் நடுக்கமுறவில்லையா?

சாளுவ திம்மாஜி கிருஷ்ணதேவ ராயனுக்கு முன்பு மூன்று அரசர்களுக்கு மந்திரியாக இருந்திருக்கிறார். கிருஷ்ணதேவனுக்கும் பதினாறு வருஷங்கள் சேவை புரிந்திருக்கிறார். நாட்டில் அரசனுக்கு அடுத்தபடியாகச் செல்வாக்குப் பெற்றவர் அவர். பிரதம மந்திரி உத்தியோகத்தைத் தவிர ஒரு மண்டலாதிபதியாகவும், சேனாதிபதியாகவும் இருக்கும் அவர், தர்ம சாஸ்திரங்களைக் கரை கண்டவர். வடமொழி நூல் விற்பன்னர். பல நூல்களையும், பழைய நூல்களுக்கு வியாக்கியானங்களையும் எழுதியவர்; பழுத்த கிழவர்.

அப்படிப்பட்டவரைக் கைது செய்தால் நாடு முழுவதும் தனக்கு விரோதமாகக் கிளம்பும் என்பதைக் கிருஷ்ணதேவன் நன்கு அறிவான். அன்றி, தன்னிடம் உள்ள ஊழியர்களுள் எவரும் இச்செய்கையை நிறைவேற்றத் துணியமாட்டார்கள் என்பதையும் அறிவான்.

மந்திரியைச் சிறைசெய்ய, அவரை வெறுத்துவந்தவர்களாகிய வைதிகமத விரோதிகளே துணிவார்கள். இதனை அறிந்த மன்னன், அக்காலத்தில் கோபகா பட்டணத்தில் (இப்பொழுது போர்த்துக்கீசிய இந்தியாவின் தலைநகராக விளங்கும் கோவா என்னுமிடத்தில்) வசித்துவந்த பறங்கிக்காரர்களின் உதவியை நாடினன். அவர்களுடைய குதிரைப் படைகள் முதலியவற்றின் உதவியாலேயே திம்மாஜி சிறை செய்யப்பட்டார்.

இவ்விதம் நடந்தது எதனல்? மன்னனுக்குச் சித்த சுவாதீனம் இல்லையா? ஆம். உண்மைதான். அரசன் பைத்தியம் பிடித்தவன்போலவேதான் நடந்து வந்தான்.

கிருஷ்ணதேவன் தன் உயிருக்கு உயிராக மதித்துத் தனக்குப் பிற்காலத்தில் நீடூழி காலம் நாட்டை ஆண்டு வர வேண்டுமென்று நினைத்துத் தான் முடியைத் துறந்து பட்டாபிஷேகம் செய்துவைத்த அவன் பிள்ளை திருமலைத்தேவ ராயன், மகுடாபிஷேகம் ஆகிப் பத்து மாதங்களில் இறந்துவிட்டான். மன்னனுக்கு அது பெரிய ஏக்கத்தை உண்டுபண்ணியது. தன் மகன் எப்படி இறந்தான் என்பதை அறியவேண்டுமென்பதே கவலையாக இருந்தது. அரசகுமாரன் விஷமிட்டுக் கொல்லப்பட்டான் என்று யாரோ அவன் காதில் போட்டுவிட்டார்கள். நாளடைவில் அதுவே ஊர்ஜிதமாகிவிட்டது.

மகுடாபிஷேகத்திற்குப் பிறகு கிருஷ்ணதேவன் தன் குமாரனை மந்திரி திம்மாஜியிடம் ஒப்பித்திருந்தான். அரசகுமாரனை ராஜாங்க வியவகாரங்களிற் பயிற்றுவிப்பதற்கு அவரைக்காட்டிலும் தகுதியுள்ளவர் யாவர்? மந்திரி, திருமலைத்தேவ ராயனைத் தம் மகன் மாதவனிடம் ஒப்பித்தார். மாதவன் அல்பசொல்பமானவன் அல்ல; மிகவும் கெட்டிக்காரன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

இங்ஙனம் தக்க இடத்தில் வளர்ந்துவரும்பொழுது தன் குமாரனுக்கு யார் விஷமிடத் துணிந்தார்கள் என்பதே அரசன் மனத்தை உறுத்திவந்தது.

பழைய நிகழ்ச்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனக்கண் முன் தோன்றலாயின: தன் அண்ணன் பிற்காலம் தான் நாட்டை அடையக்கூடாது என்பதற்காகத் தன் கண்ணைப் பிடுங்க உத்தரவிட்டதும், மந்திரி அண்ணனை வஞ்சித்துத் தனக்கு முடி சூட்டியதும் அப்பொழுதுதான் நடந்தவைபோலத் தோன்றின. மந்திரி ஒருகால் தன்னையும் வஞ்சித்திருக்கக் கூடுமா? தனக்குப் பிற்காலம் அரசு தன் பிள்ளை திருமலைத தேவராயனுக்குப் போகக் கூடாது என்றும் அச்சுதனுக்கே போகவேண்டும் என்றும் மந்திரி திம்மாஜி செய்த சூழ்ச்சியாக இருக்குமா?

5

அரசன் கொலுவில் அமர்ந்திருந்தான். மந்திரி, பிரதானிகள் முதலியோர் பலரும் நாற்புறமும் சூழ்ந்திருந்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி ஆசனத்திலோ கம்பளத்தின்மீதோ அமர்ந்தும் நின்றுகொண்டும் இருந்தார்கள். ஆயினும் அவர்களுள் ஒருவர் முகத்திலாவது பொலிவு காணப்படவில்லை.

ஒவ்வொருவரும் பயத்தால் நடுக்கமுற்றவர் போலவே காணப்பட்டார்.

சபையின் முன்பாகத்தில் திம்மாஜியும், மஹா தண்ட நாயகர்களான அவர் குமாரர்கள் இருவரும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நிறுத்தப் பெற்றிருந்தார்கள்.

அரசனது முகம் கோபத்தாலும் ஆத்திரத்தாலும் ஜொலித்தது. கண்கள் சிவந்து திரண்டு பிதுங்கி விழுந்துவிடுவனபோல இருந்தன. மீசை படபடத்தது. புருவங்கள் நெற்றியில் ஏறிவிட்டன. அவன் பல்லை நறநறவென்று கடித்துப் பேச ஆரம்பித்தான். ஆயினும் வார்த்தைகள் சரளமாக வெளிவரவில்லை.

"மானிடப்பதரே! நான் உன்னைத் தந்தையினும் அதிகமாகப் பாவித்துவந்தேன்; என்ன பயன்! குட்டிச் சுவருக்கு ஆவதுபோல உனக்கு வயதாகி என்ன பிரயோஜனம்? உன்னைச் சொல்லி என்ன செய்வது?

"நான் அரசனாக முடிசூட்டப் பெற்றதற்கு நீ காரணமாக இருந்ததால், எந்தக் காரியத்தையும் நீ செய்வதற்குச் சுவாதீனம் உள்ளவன் என்று எண்ணி விடாதே.

"உன்னை நான் பதினாறு வருஷங்களுக்கு முன்பே தண்டித்திருத்தல் வேண்டும். என் தமயனாரும் எனக்கு முன்னால் அரசராக இருந்தவருமான நரஸிம்மதேவராயருடைய கட்டளையை மீறி அவருக்கு ஆட்டின் விழிகளை என்னுடைய விழிகள் என்று காண்பித்து ஏமாற்றிய குற்றத்துக்கு என்ன பதில் சொல்லப்போகிறாய்? ராஜத்துரோகியான உன்னை அப்பொழுது மன்னித்தது தவறாக முடிந்தது. இப்பொழுது அதற்குப் பிரதியுபகாரமாக மகாபாதகச் செயலைச் செய்துள்ளாய்."

இந்தவிதமாக அரசன் வெகுநேரம் யாது கூறுகிறோம் என்பதையும் கவனியாமல் பேசினான். சபை நிச்சப்தமாக இருந்தது. அங்கிருந்தோர் ஒவ்வொருவரும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவற்றைக் கேட்டதும் மந்திரி திம்மாஜிக்குத் தலை சுழன்றது. அவர் ஒன்றுமே பேசவில்லை. அவர் சார்பாகப் பேசுவோரும் இல்லாமல் இருந்தது அச்சபை. அங்ஙனம் யாராவது பேசியிருந்தாலும் அதனால் பயன் ஒன்றும் ஏற்பட்டிராது என்பது மட்டில் நிச்சயம்.

* * * *

இதற்குப் பிறகு நாம் கூறவேண்டியது அதிகம் இல்லை. முன்னம் தன் தமையன் தனக்கு எந்தத் தண்டனையை விதித்துத் திம்மாஜியால் அதனின்றும் காப்பாற்றப்பட்டானோ அதே தண்டனையை மன்னன் மந்திரிக்கு விதித்தான்.

தண்டநாயகர்கள் அதை உடனே நிறைவேற்றவில்லை. மன்னன் சிறிது காலத்தில் பச்சாத்தாபம் கொண்டு அவர்களை விடுதலை செய்துவிடுவான் என்று எண்ணினார்கள்போலும்! ஆயினும் அரசன் மனம் கரையவில்லை. சிறைவாழ்க்கையின் கொடுமையைச் சகியாமல் மந்திரியின் மகன் மாதவன் ஒரு நாள் தப்பி ஓடிவிட்டான். அவன் பிடிபட்டு வந்தவுடன்தான் தன் கட்டளைப்படி அவர்களுடைய கண்கள் பிடுங்கப்படவில்லை என்பதை மன்னன் உணர்ந்தான். கன்னெஞ்சனாகிய அவனே பக்கத்தில் இருந்து அவற்றைப் பிடுங்கச் செய்தான். மந்திரியும் அதோடு உலக வாழ்க்கையினின்றும் மறைந்துவிட்டார்.

மகோந்நத ஸ்திதியில் வாழ்ந்த மந்திரி திம்மாஜிக்கு நேர்ந்த கதியின் நேர்மையைப்பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. தெய்வமே அறியும். ஆயினும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது அவரது வாழ்க்கையினின்றும் உறுதிப்படுகின்றது.

மகாபத் கான்

1

அரசாங்க சபையில் அவன் இருப்பது ஓர் உறுத்தலாகவே இருந்தது. அவனுக்குச் சக்கரவர்த்தியிடம் இருந்த செல்வாக்கு மற்றவர்களுக்கு அச்சத்தையே விளைவித்தது. அவன் உயர்குடிப் பிறந்தவனா? காபுல் தேசத்தில் சாதாரணமான ஒரு குடியில் பிறந்த அவன், அரசாங்கத்தின் முக்கியஸ்தனாக விளங்குவதை அவர்கள் காணச் சகிப்பார்களா? பிழைப்புக்காக நாட்டைத் துறந்து ஹிந்துஸ்தானத்திற்கு வந்த அவன் செல்வாக்கை அவர்கள் பொறுப்பார்களா?

> "ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே"

என்னும் முதுமொழிக்கு இலக்காக விளங்கியது மொகலாய ஸாம்ராஜ்யம். ஹிந்துஸ்தானத்தை மொகலாயர்கள் ஆண்டுவந்த காலத்தில், பாரசீகம், காபுல் முதலிய தேசங்களைச் சேர்ந்தவர்களில் ஒருவன் வீரமும் சாமர்த்தியமும் உடையவனாக இருந்தால், அவன் எக்குடிப் பிறந்தவனாயினும் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று மேன்மையுடன் விளங்குவதற்குரிய சௌகரியங்கள் இருந்தன. ஆயினும் அவர்கள் இராஜாங்கத்திலேபொதுவாகக் காணப்படும் சூழ்ச்சிகளினின்றும் தப்பி அதிககாலம் அவ்விதமான பதவிகளை வகித்திருக்க முடியாது.

கீழ்க்குடியிற் பிறந்து உயர்ந்த பதவியை அடைந்த ஒருவனுக்கு இயற்கையாகவே சில அசௌகரியங்கள்

உண்டு. அவன் எளியவனாக இருக்குங்கால் பலபேர்களுக்கு அடங்கியவனாக வாழ்ந்து அவர்கள் தயையைப் பெற்றிருப்பான். அவன் உயர்ந்த பதவியை அடைந்த பிறகு பழைய வாழ்க்கையையே நடத்த முடியாது. கௌரவத்தை உத்தேசித்துப் பதவிக்குத் தக்க நிலையில் இருக்கவேண்டும். சில சமயங்களில் தனக்கு முன்னே உதவி செய்தவர்களைக் காட்டிலும் உயர்ந்த பதவியையும் அடையக்கூடும். அக்காலங்களில் அவன் தன்னைக் கைதூக்கி விட்டவர்களிடம் முன்போல் அடிமையாக இருக்கமுடியாது. அவ்விதம் அவன் இருப்பான் என்று அவர்கள் எண்ணவும் முடியாது. ஆனால் மனித இயற்கை அத்தகையது அன்று. "நாம் கைதூக்கி விட்டு முன்னுக்கு வந்த இந்த அற்பன் இப்பொழுது நம்மையே அலக்ஷியம் செய்கிறான்" என்று அவர்கள் கூறுவது சகஜம்.

முதலிலிருந்தே செல்வாக்கைப் பெற்றிருப்பவர்கள் நடுவில் தங்களுடன் சம அந்தஸ்தை அடைபவனைத் தங்கள் விரோதியாகவே கருதுவார்கள். உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்களோ அவனை ஒருவிதமான பயத்துடனேயே கவனித்து வருவார்கள். என்றைக்கு அவன் தங்களுக்குப் போட்டியாகக் கிளம்பித் தங்கள் ஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொள்கிறானோவென்று எண்ணுவார்கள். இவ்விதம் அவனுக்கு விரோதிகள் பலர் இருப்பர். இவ்விதமான நிலைமையில்தான் இருந்தான் மொகலாயச் சக்கரவர்த்தியான ஜஹாங்கீரின் காலத்தில் தளகர்த்தனாக விளங்கிய மகாபத் கான். அவன் சிறுவயதிலிருந்தே அரசாங்கத்தில் ஊழியம் செய்து வந்தான். முதல் முதலில் ஜஹாங்கீருக்குக்

குற்றேவல் செய்யும் படைவீரனுகச் சேர்ந்த அவன் சிறிது சிறிதாக உன்னத பதவியை அடைந்தான்.

அவன் உயரிய குணம் வாய்ந்தவன்; கபடமற்றவன்; தயாள குணம் உடையவன்; அஞ்சா நெஞ்சம் படைத்தவன்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வழக்கத்தை அறியாதவன். அவனுடைய நிமிர்ந்த நடையைக் கண்ணுற்றவர்கள் அவன் செருக்குற்றுப் பெருமிதமாக நடப்பவன் என்று எண்ணுவர். அது அங்ஙனம் இல்லை, அவன் தன் மதிப்பு அதிகம் உடையவனே. அவன் மன்னனுக்கு மிகவும் வேண்டியவன். அவனுடைய நேரிய நடத்தையை அறிந்த மன்னன் அவனுக்கு எல்லாவித உரிமைகளையும் வழங்கியிருந்தான். பிறர் மன்னனிடம் கூறுவதற்குப் பயப்படும் செய்திகளை அவன் மன்னன் மனம் நோகாவண்ணம் எடுத்துரைக்கும் சாமர்த்தியம் வாய்ந்தவன்.

அம்மட்டிலோ! போர்க்களத்தில் அவன் முன் வைத்த காலைப் பின்வைக்க மாட்டான். படையை ஒழுங்காக நடத்தி வெற்றியையே அடையும் சாமர்த்தியமுடையவன். ராஜபுத்திரர்களும் அவனுடைய போர்த்திறனைக் கண்டு மெச்சி, அப்படிப்பட்ட தளகர்த்தனது படையில் போர் செய்வதை ஒரு பாக்கியம் என்றே கருதி அவன் படையில் சேர்ந்தனர். அவன் ஒரு காபூலி; ஆயினும் ராஜபுத்திரர்கள் அவனைத் தங்களுள் ஒருவனுகவே மதித்துவந்தனர்.

அக்காலத்தில் ஜஹாங்கீருக்கு உடல் தளர்ந்துவிட்டது. அவன் தானுக ஒரு காரியத்தைச் செய்வதற்கு வேண்டிய மனவலியை இழந்துவிட்டான். 'எடுப்பார் கைப்பிள்ளை'யாக இருந்தான். அரண்மனையை மட்டுமன்றி, அரசாங்கத்தையும் பேகம் நூர்ஜஹானே

நிர்வகித்து வந்தாள். அரசியின் ஆணையில்லாது ஒரு காரியமும் நடைபெறுது. அரசாங்கத்தின் முக்கியமான பதவிகள் எல்லாவற்றையும் அவளுடைய உறவினரே வகித்து வந்தனர். இது உயர்குடிப் பிறந்தோர் பலருக்கு அதிருப்தியைக் கொடுத்தது.

நூர்ஜஹானின் உறவினர் தங்கள் செல்வாக்கின் பலத்தால் பல காரியங்களைச் செய்துவந்தனர், நாட்டு மக்கள் அவற்றை வெறுப்பார்களே என்று சிறிதும் கவலைப்படவில்லை. இச் செய்கைகளை மக்களால் பொறுக்க முடியவில்லை, உத்தியோகஸ்தர்களில் ஒரு பகுதியினர் இவற்றை வெறுத்து வந்தனர். மகாபத் கான் அவர்களுள் முக்கியமானவனுக விளங்கினுன். நாளடைவில் இந்தப் பிளவு அதிகப்பட்டுக் கடைசியில் இரண்டு கட்சிகளை அமைத்தது. ஒன்று ராணி நூர்ஜஹான் கட்சி; மற்ஞென்று மகாபத் கான் கட்சி.

மகாபத் கானுக்கு மன்னனிடம் எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும், எப்பொழுதும் மன்னனின் பக்கத்திலே இருப்பவள் நூர்ஜஹான்தான். எறும்பு ஊரக் கல்லும் தேயுமன்ருே? அரசி கொஞ்சம் கொஞ்சமாக மன்னனுக்கு மகாபத் கானிடம் துவேஷ புத்தியை உண்டுபண்ணி விட்டாள். மகாபத் கான் தனக்கு விரோதமாக நடக்கமாட்டான் என்று ஜஹாங்கீர் நம்பி வந்தானுயினும் அரசியின் வேண்டுகோளுக்கு இணங்க வேண்டியதாயிற்று. மகாபத் கான் அரச சபையை விட்டு மாகாணத்துக்கு அனுப்பப்பட்டான்.

2

அரசிக்கு அவனிடம் இருந்த விரோதம் நீங்கவில்லை. அவனை அவமானப்படுத்தி உயர்ந்த பதவியி

னின்றும் கீழே தள்ளிவிடச் சமயம் பார்த்திருந்தாள். அதற்குத் தகுந்த சமயமும் வாய்த்தது.

மகாபத் கான் தன்னுடைய பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தான். அப்பெண் பர்க்குர்தார் என்பவனுக்குக் கடைசியில் மணம் செய்து கொடுக்கப்பட்டாள். அரசாங்கத்தில் உன்னத பதவி வகிப்பவர்கள் தங்கள் குடும்பங்களில் நடக்கும் கல்யாணங்களைப் பற்றி முதலில் மன்னனுக்கு அறிவித்து, அவனுக்கு வழக்கப்படி செலுத்தவேண்டிய நாஜரைச் செலுத்தி உத்தரவு பெற்றே அவற்றை நடத்தவேண்டும், அதுதான் முறை; ஸம்பிரதாயம். மகாபத் கான் அவ்விதம் செய்யவில்லை. கல்யாணத்தைச் சீக்கிரமாக முடிக்கவேண்டி யிருந்த தால் மன்னனுக்கு அறிவிக்காமல் நடத்திவிட்டான்.

அரசியும் அவளைச் சார்ந்தவர்களும் மன்னனிடம் இதைப் பற்றிப் புகார் செய்தார்கள். மகாபத் கான் கர்வங்கொண்டு மன்னனையும் அலக்ஷ்யம் செய்யத் தலைப்பட்டுவிட்டான் என்று உபதேசித்தார்கள். அவனுக்குப் புத்தி புகட்டவேண்டும் என்று வேண்டினார்கள்.

ஆனால் என்ன செய்வது? கானோ தலைநகரில் இல்லை; எங்கேயோ மாகாணத்தில் இருந்தான். அவன் மீது குற்றம் கண்டுபிடிக்க வேண்டுமே, ஏதாவது ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொள்ளுவதற்கு. அவன் ஜாகீர்தார்களிடமும், சிற்றரசர்களிடமும் லஞ்சம் வாங்கிக் கொள்ளையடித்து விட்டான் என்ற பழியைச் சுமத்தினார்கள். அம்மட்டிலோ? அந்தப் பணத்தைக் கொண்டுதான் அவன் தன் பெண்ணுக்கு ஏராளமான சீர்வகைகளைச் செய்தான் என்றும் சொன்னார்கள்.

கான் அவ்விடம் இல்லை. ஆயினும் அவன் தீயவழி களில் சம்பாதித்த பொருளைத் தன் மனைவியின் சீதன மாகப் பெற்ற பர்க்குர்தார் அங்கே இருந்தான். மாப் பிள்ளையைப் பிடித்துக் கசக்கி அவன் பெற்றிருந்த வரிசைகளைப் பறிமுதல் செய்துவிட்டால் மாமனார் தானாகவே வழிக்கு வந்துவிடுவான் என்றும் உபதேசித் தார்கள்.

மேலே கேட்கவேண்டுமா ?

'ராஜ சபைக்கு உடனே அழைத்து வரவேண்டும் என்ற அரசன் ஆணை பிறந்திருக்கிறது' என்று கூறிச் சேவகர்கள் பர்க்குர்தாரை ராஜசமுகத்திற்குக் கொணர்ந் தார்கள். அவ்விடத்தில் அவன் கைகளைக் கழுத்தில் கோத்துக் கட்டிக் கசையடி கொடுத்தார்கள். அவன் தலையை முண்டனம் செய்து சிறையிலிட்டார்கள். மகாபத் கானின் பெண்ணுக்குக் கொடுத்திருந்த வரிசைகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

ஒரு பாவத்தையும் அறியாத தன் மாப்பிள்ளையைத் தண்டித்ததைக் காண மகாபத் கானுக்குப் பொறுக்க முடியவில்லை. அது மட்டுமன்றி. அவன் வங்காளத்தி லும் பீஹாரிலும் பெற்றனவாகக் கருதிய யானை களையும் பொன்னையும் மணிகளையும் அரசாங்கத்திற்கு ஒப்பித்துவிட வேண்டும் என்றும், அவன் ஜாகீர்தார் களிடம் வாங்கிய பணத்துக்குக் கணக்கு ஒப்பிக்க ராஜ சபைக்கு வரவேண்டும் என்றும் உத்தரவு வந்தது. யானைகளையும் பொன்னையும் பெற்றுக்கொள்ள எமகிங்கரர்கள் போன்ற காரியாதிகாரிகளும் வந்தனர்.

இவ்வளவு சூழ்ச்சிகளுக்கும் அரசியே காரணம் என்பதை மகாபத் கான் நன்கு அறிவான். அவள் தன் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதுடன், தான்

அரசாங்கப் பணத்தைக் கையாடியதாகக் குற்றம் சாட்டித் தன்னை வேருடன் களைந்து அவமானப் படுத்தவே அங்ஙனம் செய்துள்ளாள் என்பதை உணர்ந் தான். மன்னன் தன்மேல் விசுவாசம் உள்ளவனு யினும் தன்னைக் காப்பதற்கு அரசிக்கு விரோதமாக ஒன்றும் செய்ய இயலாதவன் என்பதையும் தெரிந்து கொண்டான். இந்தப் பேராபத்தினின்றும் எப்படித் தப்புவது என்பதே பெரும் கவலையாகி விட்டது, மகாபத் கானுக்கு.

3

அவன் கோழை யல்ல, அவர்களுக்குப் பணிந்து விடுவதற்கு. தன் உயிரைக் கொடுத்தாயினும் மானத் தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினுன். 'அரசன் ஒரு பொம்மைபோன்று இருக்கிருன், நூர் ஜஹான் அவனை ஆட்டி வருகிருள். ஏன் நாமே மன்னனைக் கைக்கொண்டு அரசிக்குப் பதிலாக அவனை ஆட்டிவரக் கூடாது?' - இவ்விதம் எல்லாம் சென்றது மகாபத் கானுடைய எண்ணம்.

அரசன் உத்தரவுப்படி தர்பாருக்குப் போகப் புறப் பட்டான். அவன் தனியாகச் செல்லவில்லை. தன்வசம் இருந்த ஐயாயிரம் ராஜபுத்திர வீரர்கள் கொண்ட படையையும் யுத்த சன்னத்தராக உடன் அழைத்துச் சென்ருன்.

அவன் அரசன் சமுகத்தை அடைந்தபொழுது மன்னன் லாஹோரில் ஜீலம் நதியின் இடது கரையில் பாடி இறங்கியிருந்தான். அவன் அப்பொழுது காபூ லுக்குச் சென்றுகொண்டிருந்தான்.

மகாபத் கான் ராஜபுத்திரப் படையுடன் வருவது அரசனுடன் இருந்தவர்களுக்கு அச்சத்தை விளை

வித்தது. ஆயினும் அவனை யண்டிப் படையை விடுத்துத் தனிமையில் வருமாறு தெரிவிப்பதற்கு அவர்களுள் ஒருவருக்கும் தைரியம் இல்லை. எனினும் மன்னனைக் காண்பதற்கு அவனை அனுமதிக்கவில்லை அவர்கள். அவன் வந்திருக்கும் செய்தி பாதுஷாவுக்கு அறிவிக்கப்படும் என்றும், 'ஷாஹான்ஷா' அனுமதித்த பிறகே அவன் மன்னன் சமுகத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் கூறிவிட்டார்கள்.

அவர்கள் மகாபத் கானை உடன் அழைத்துச் சென்று அவன் வலி குன்றியிருக்கும் சமயம் பார்த்துச் சிறை செய்யவேண்டும் என்று எண்ணியிருந்தார்கள். அதனால் அவர்கள் எல்லோரும் மறுநாட் காலையில் ஜீலம் நதியைக் கடந்து தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டு நடத்த ஏற்பாடு செய்தார்கள். அதே போல மறுநாள் காலையில் பிரயாணமும் ஆரம்பமாயிற்று.

முதலில் அரசனுடைய சேனையும் பரிவாரங்களும் ஆற்றைக் கடந்து அதன் வலது கரையை அடைந்தன. மன்னனுடன், நூர் ஜஹானும் மற்றும் சில முக்கியமான வேலையாட்களுமே இடது கரையில் தங்கி இருந்தனர். இந்தச் சமயத்தைத்தான் மகாபத் கான் எதிர்நோக்கி யிருந்தான். இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைவிடக் கூடாது என்று சீக்கிரமாகத் தன் காரியங்களைச் செய்யத் தொடங்கினன்.

தன் படை வீரர்களில் இரண்டாயிரம் பேரை ஆற்றைக் கடக்கும் பாலத்துக்கு அனுப்பி அதைக் காத்துவர ஏற்பாடு செய்தான்; வலது கரையிலிருந்து ஒருவரும் ஆற்றைக் கடந்து தான் தங்கியிருக்கும் இடது கரைக்கு வராதபடி அவர்கள் பாதுகாக்க

வேண்டுமென்றும், அவர்கள் அதை மறுத்துப் போர் செய்வதாகத் தோன்றினால் பாலத்தைக் கொளுத்திவிட வேண்டுமென்றும் திட்டம் செய்தான்.

தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நூறு வீரர்களுடன் மன்னன் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி அவன் சென்றான். அங்கிருந்த வேலையாட்கள் அவன் வருகையைத் தடுக்க முயன்றார்கள். ஆனால் கூடவில்லை. மகாபத் கான் கூடாரத்தின் வாசலில் குதிரையினின்றும் இறங்கிச் சபா மண்டபத்தை அடைந்தான். அவனுடன் வந்த ராஜபுத்திர வீரர்கள் அவ்விடத்தில் உள்ளவர்களைச் சிறை செய்ததுபோலக் கூடாரத்தை வளைத்துக் கொண்டுவிட்டனர். இதனை அறிந்த மன்னன் ஒன்றும் பேசவில்லை. அன்றி, தனக்குத் தெரிந்ததாகவும் காட்டிக் கொள்ளாமல் வழக்கம்போல் இருப்பதாகப் பாவித்து, கூடாரத்தை விட்டு வெளியில் வந்து தனக்காகக் காத்திருந்த பல்லக்கில் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

மகாபத் கான் பல்லக்குச் சுமப்பவர்களை அதனைத் தூக்கக்கூடாது என்று தடுத்து அரசனை நெருங்கினான். தான் சிறைப்பட்டிருப்பது தெரிந்தவுடன் அரசனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று.

மகாபத் கானிடம் எவ்வளவு அன்பு இருந்தாலும் இதனை மன்னனால் பொறுக்கமுடியவில்லை ; அவனைக் கொன்றுவிடுவதென்று இரண்டு தடவை வாளை உருவ முயன்றான். ஆனால் மெய்காவலன் நிலைமையை அறிந்தவனாய் மன்னனைக் காப்பாற்றவேண்டி மகாபத் கானுக்குத் தெரியாத பாரசீக பாஷையில். "அரசே, இப்பொழுது நாம் கோபித்துக்கொள்வதில் பயனில்லை. பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று அறிவித்தான்.

கான் மன்னனை வணங்கிப் பல்லக்கினின்றும் வெளிவந்து, தான் கொணர்ந்துள்ள குதிரையின் மேலேறி வழக்கமாகச் சவாரி செய்வதுபோல வெளியில் உலவப்போய் வரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டான். அங்ஙனம் மன்னன் செய்யவேண்டிய காரணத்தை அவன் பச்சையாக வாய்விட்டும் கூறிவிட்டான், “இந்த அடிமை தங்களுடன் கூடவே வந்தால், நாட்டு மக்கள் விகற்பமாக ஒன்றும் நினைத்துக்கொள்ள மாட்டார்கள். தங்களுடைய விருப்பத்தின்படியே நான் தங்களை அடைந்திருக்கிறேன் என்று எண்ணுவார்கள்” என்று சொன்னான்.

மன்னன் அந்த வேண்டுகோளை-அந்த உத்தரவை-மறுக்க முடியாத நிலையில் இருந்தான். எனினும் அவன் கொண்டுவந்த குதிரையின்மீது ஏற விரும்பவில்லை. அதனால் அரசாங்கத்துக் குதிரையைக் கொணரச் செய்து அதன்மீது ஆரோகணித்துப் பவனி சென்றான்.

‘மன்னன் தன்னுடன் ஸகஜமாகப் பேசிக்கொண்டு செல்வதை மக்கள் நன்றாகக் கண்டு தங்கள் சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும்; அதற்குக் குதிரையைவிட யானையின்மீது மன்னன் உட்கார்ந்து செல்வதே நல்லது’ என்று நினைத்துத் தன் யானையைக் கொணர்ந்தான் மகாபத் கான். அரசனும் வேறுவழியில்லாமல் யானைமீதேறி, மகாபத் கான் உடன்வர, வழி நடந்து கான் தங்கியிருந்த இடத்தை அடைந்தான்.

இவ்விதம் மன்னனை அழைத்துச்சென்றது மகாபத் கானுக்குப் பெரிய உதவியாக இருந்தது. மன்னன் தன் பிடியிலிருக்கும் வரையில் அவனுக்குத் தன் உயிரைப் பற்றிய பயம் இல்லை. மகாபத் கானுக்கு நேரும் ஆபத்து உடனே மன்னனுக்கும் நேர்ந்துவிடுமென்பதை

நூர் ஜஹானைச் சேர்ந்தவர்கள் அறிவார்கள். அதனால் வழியில் ஒருவிதமான இடைஞ்சலும் இன்றித் தன் இருப்பிடத்தை அடைந்தான்.

அவ்விடத்தில் மன்னனை உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி அவனடியில் மண்டியிட்டு வணங்கி, "அரசே, என்னை மன்னிக்கவேண்டும். வஜீர் ஆஷப்கான் (நூர் ஜஹான் சகோதரன்) என்னை ஒழித்துவிடுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான். அவன் வலையி னின்றும் தப்புவதற்காகத் தங்கள் விருப்பத்திற்கு மாறாக இந்தவிதம் நடந்துகொள்ள நேர்ந்தது; இந்த அடிமை யின் உயிரைக காப்பாற்றத் தங்கள் உடலை ஒரு கேடய மாக உபயோகிக்க நேர்ந்தது ; என்மேல் சாட்டப்படும் குற்றங்களைத் தாங்கள் நம்பி என்னைத் தண்டிக்க வேண் டும் என்று நினைத்தால் தாங்களே இப்பொழுது என்னைத் தண்டித்துவிடுங்கள் ; உயிரை இழக்கவும் சித்தமாக இருக்கிறேன்" என்று வேண்டிக்கொண்டு தன் கத்தியை உருவி மன்னனிடம் கொடுத்தான். மன் னன் யாது செய்வான்? அவனைத் தேற்றி அபயம் அளித்தான். தன் உயிருள்ளவரையில் அவன் பயப்பட வேண்டியதில்லை என்று உறுதி கூறினான்.

4

புரு பறந்தோடிப் போயிற்று; ஜஹாங்கீரை ஆட்டுவித்த சூத்திரதாரியான நூர்ஜஹான் மாறு வேஷம் அணிந்து தப்பி ஓடிவிட்டாள். ஆற்றின் வலது கரையிலிருந்து இடது கரைக்கு ஒருவரையும் வரவிடக் கூடாது என்பதே மகாபத் கான் உத்தரவு. இடதுகரை யினின்றும் வெளியே போவதைத் தடுக்கத் தளகர்த்தன் உத்தரவு இல்லை என்று பாலத்தைக் காத்துவந்தவன் அரசியை வெளியே விட்டுவிட்டான். அவன் நேராகத்

தன் சகோதரன் வஜீர் (முதன்மந்திரி) இருக்குமிடத்திற்குச் சென்று நடந்ததைத் தெரிவித்து அவனைக் கோபித்துக் கொண்டாள். கான் விஷயத்தில் அவன் முன் ஜாக்கிரதையுடன் இருந்திருந்தால் இவ்விதம் நிகழ்ந்திராது என்று கூறிப் பழியை அவன்மீது போட்டாள், சிறைப்பட்டுள்ள மன்னனை மீட்டுவிடப் பாடு பட்டாள். தன்னிடம் உள்ள படையைத் திரட்டிப்போர் தொடுக்கப் பார்த்தாள். மகாபத் கானோ பாலத்தைக் கொளுத்திவிட்டான். ஆற்றிலோ பிரவாகம்; ஆற்றைக் கடக்க முயன்றதில் பலர் இறந்தனர். மன்னனும் படையெடுத்து வரவேண்டாம் என்று செய்தி அனுப்பினான். தான் சொல்லி அனுப்பியதை அவர்கள் நம்பவேண்டுமே; அதற்காகத் தன் முத்திரை மோதிரத்தையும் அடையாளமாக அனுப்பினான்.

நூர்ஜஹானுக்கு ஜஹாங்கீரிடம் அளவற்ற காதல். அவனைப் பிரிந்து அவளால் ஒரு க்ஷணமும் வாழமுடியாது. ஆதலால் அவள் வேறுவழியில்லாமல் சமாதானம் பேசவந்தாள். ராஜி செய்துகொண்டு அவளும் கடைசியாக ஆற்றைக் கடந்து மன்னனைச் சேர்ந்தாள்.

அதற்குப் பிறகு சுமார் மூன்றுமாத காலம் மகாபத் கானே ஸர்வாதிகாரியாக விளங்கினான்.

வெகுமதி

1

நகர் எங்கும் ஒரே பரபரப்பு. ஓர் அதிசயமான ஊர்வலம் வருவதைப் பார்க்க எல்லோரும் திரண்டு ஓடினர். ஒரு கழுதையின்மேல் மற்ெருரு கழுதை ஏறிச் சவாரி செய்துகொண்டிருந்தது. அதுமட்டுமன்று; மற்ெருரு கழுதையின்மேல் ஓர் எருமைக்கடா சவாரி. அவை ஊர்வலத்தைக் சரியாகச் செய்துவரப் படை வீரர்கள் காவல். இப்படிப்பட்ட ஆச்சரியத்தைப் பார்க்க யார்தாம் ஆசைப்பட மாட்டார்கள்? குழந்தை முதல் பெரியோர் வரையில் சென்றனர்.

அந்த ஊர்வலம் நகரின் எல்லாத் தெருக்களுக்கும் வருமா என்பது தெரியவில்லை. அதனுல் முக்கியமான வீதிகளில் எல்லாம் ஒரே கூட்டம். அதனை எதிர்பார்த்துக்கொண்டு ஜனங்கள் நிறைந்திருந்தனர். மரக்கிளைகள், வீட்டுக் கூரைகள் ஆகிய ஒன்றும் பாக்கியில்லாமல் மக்கள் ஏறி உட்கார்ந்திருந்தார்கள்.

இரண்டு கழுதைகளின் மேலும் மற்ற இரண்டும் வால் புறத்தை நோக்கி உட்கார்ந்திருந்தன. அதனுல் ஊர்வலத்தை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஆரோகணித்து வருபவற்றின் முதுகுப்புறங்களே தென்பட்டன. சவாரி செய்யும் கழுதையின் காதுகள் அப்படியே நிமிர்ந்து நின்றன. அவ்வாறே எருமைக் கடாவின் கொம்புகள் விளங்கின; காதுகள் மட்டும் படிந்து கிடந்தன.

ஊர்வலம் சமீபத்தில் வந்தவுடன், 'கழுதைச்சவாரி செய்யும் உருவங்கள் மிருகங்கள் அல்ல; மிருகங்களின் தோலைப் போர்த்திருக்கும் மனிதர்களே' என்பது வெளியாயிற்று. ஒருவன் கழுதைத்தோலை ஆடையாகக் கொண்டிருந்தான்; மற்றொருவனுடைய உடை எருமைக் கடாவின் தோல். இவ்வித அலங்கோலத் துடன் அவர்கள் கழுதைச் சவாரி செய்துவரு வானேன்? அவர்கள் யார்? என்ன குற்றம் செய் தார்கள்?

2

இன்றைக்குச் சுமார் முந்நூற்று முப்பது வருஷங் களுக்கு முன்பு வடநாட்டில் மொகலாய ஸாம்ராஜ் யத்தை ஜஹாங்கீர் ஆண்டுவந்தான். அவன் கி. பி. 1605-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில் சிங்காதனம் ஏறினன். அப்பொழுது அவனுக்கு வயது முப்பத் தெட்டு.

ஜஹாங்கீருக்குக் குஸ்ரூ என்ற பிள்ளை ஒருவன் இருந்தான். அவனுக்கு வயது பதினெட்டு. அவன் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டவன். அவன் பாட்டனை அக்பருக்கு அவன்மேல் உயிர். குஸ்ரூ எப்பொழுதும் அக்பர் பக்கத்திலேயே இருக்க வேண்டும்.

சிறுவயதிலேயே குஸ்ரூ மிகுந்த கெட்டிக்காரனுக விளங்கினன். அரசகுடும்பத்துக் குழந்தைகள் எவ்வித மாக விளையாடினுலும் அது நன்கு கொண்டாடப்படும்; பிள்ளைப் பருவத்திலேயே பிற்கால வாழ்க்கை பிரதி பலிக்கிறது என்று கூறுவார்கள். குஸ்ரூவுக்கோ அவ்விதம் அல்ல. அவன் உண்மையிலேயே சாமர்த்

தியம் வாய்ந்தவன். தாய்வழியில் அவன் ராஜ புத்திர வம்சத்தைச் சேர்ந்தவன். அவனும் ஒரு ராஜ புத்திரனுகவே வளர்க்கப்பட்டான். அவர்களுக்குரிய வீரத்தையும் பெற்றிருந்தான். இதனுல் அவன் பாட்டனின் உள்ளத்தைக் கவர்ந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லே.

அக்பர் தனக்குப் பிறகு தன் பேரன் குஸ்ரூவே சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெறவேண்டும் என்று விரும்பினுன். இதன் பயனுகத் தந்தைக்கும் மகனுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. இவ்விதமான மனத் தாங்கலுடன் அவர்கள் எவ்வளவு நாள் ஒற்றுமையாக வாழ முடியும்?

அக்பர் இறந்து ஜஹாங்கீர் முடிசூட்டிக் கொண்ட பிறகு குஸ்ரூவின் வாழ்க்கை வெறிச்சென்று ஆகி விட்டது. அவனுக்குத் தந்தையினிடத்து ஒருவிதமான பயம் உண்டாகியது. முன்னமே பாட்டன் தன்னிடம் கொண்டிருந்த பிரியத்தை மனத்தில் வைத்துக்கொண்டு தனக்குக் கெடுதல் செய்வானே என்று பயப்பட்டான். அது வீண் பயமுமன்று. ஜஹாங்கீர் தன் மகனேக் கூப்பிட்டு அவனுக்குப் பலவிதமான உபதேசங்கள் செய்தான். அவை யாவும் சும்மா வெளிக்கு; உள்ளூறக் குரோதந்தான் இருந்தது. தன் பிள்ளேக்குத் தெரியாமல் அவனுக்குக் காவல் ஏற்படுத்தினுன். 'அவன் என்ன செய்கிருன்; எவ்விடம் போகிருன்; யாருடன் பேசுகிருன்' என்பனவற்றை யெல்லாம் கவனித்து வந்து தனக்கு அறிவிக்க ஒற்றர்களே அமர்த்தினுன்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். அதேபோல மன்னனுடைய சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்தது. குஸ்ரூ தனக்கு விரோதமாகக்

கலகம் செய்து ராஜ்யத்தைக் கைப்பற்றிவிடுவானோ என்ற பயம் அவன் மனத்தில் குடிகொண்டது. தான் அக்பருக்கு விரோதமாக முன்பு கலகம் செய்தானல்லவா? அதேபோல் தன் மகனும் தனக்கு விரோதமாகக் கிளம்புவான் என்று எண்ணினான் போலும்! கெட்டவன் தன்னைப் போலவே மற்றவர்களும் நடப்பார்கள் என்று நினைப்பது சகஜந்தானே?

அதனால் குஸ்ருவுக்குக் கட்டுக்காவல் அதிகமாயிற்று. அவன் தன் இஷ்டப்படி வெளியில் செல்ல முடியாது. கோட்டையை விட்டு வெளியே போவதற்கு மன்னனுடைய உத்தரவு வேண்டும். எவ்வளவு நாள்தான் குஸ்ரு சிறைவாசம் செய்வதுபோன்ற அந்த வாழ்க்கையை நடத்தமுடியும்?

3

ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்து ஆறுமாத காலம் கூட ஆகவில்லை. ஏப்ரல் மாதம்; கடுங்கோடை. ஒரு நாள் இரவு தென்றல் வெகு ஸுகமாக வீசிக்கொண்டிருந்தது. அஸ்தமித்து இரண்டு நாழிகைப் பொழுதிருக்கும். ஒருவன் குதிரைமீது ஏறிக்கொண்டு ஆக்ரா நகரத்தின் கோட்டை வாயிலைக் கடந்து வெளியே போகப் பார்த்தான்.

கோட்டைக் காவலாளி அவனை விட்டுவிடலாமா? யாராக இருந்தால் என்ன? அவனை மீறி வெளியே போகமுடியுமோ? தடுத்துவிட்டான்.

"நான் யார், தெரியவில்லையா?"

காவலாளி நெருங்கிவந்து பார்த்தான். ராஜகுமாரன் குஸ்ரு என்பதை அறிந்துகொண்டான்.

ஆயினும் என்ன செய்யமுடியும்? ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களை, அவர்களிலும் முக்கியமாகக்

குஸ்ருவை, இரவுக் காலங்களில், அதிகாரியின் உத்தர வில்லாமல் வெளியில் விடக்கூடாது என்பது அவ னுக்குக் கிடைத்த ஆணை. அதை அவன் மீறிவிட்டால் தலைக்கே வந்துவிடும் ஆபத்து. என்ன செய்வான்?

"ஹுஸூர், மன்னிக்கவேண்டும்......"

ராஜகுமாரன் அதைச் செவியில் ஏற்றுக்கொள்ள வில்லை.

மிகவும் சாந்தமாக, "என் பாட்டன் அக்பர் பாதுஷா அடக்கம் செய்யப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று அந்தச் சமாதியை வணங்கி வரப்போகிறேன்" என்று தெரிவித்தான்.

கோட்டைக் காவற்காரனால் பதில் பேசமுடிய வில்லை. இளவரசன் அக்பர் பாதுஷாவுக்குப் பிரியமான பேரன். பேரனுக்கும் பாட்டன்மீது அதிக இஷ்டம். இறந்த சக்கரவர்த்தியின் ஆத்மா சாந்தியடைவதற்கு இளவரசன், சமாதிக்குப் போய் வணங்கி ஆண்டவனைப் பிரார்த்திக்க வேண்டாமா? ஆயினும் இளவரசனைக் கோட்டைக்கு வெளியில் விடக்கூடாது என்பது மன்னன் ஆணை, இவ்விரண்டுக்கும் மத்தியில் அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவன் ஒருவித மான தீர்மானத்துக்கு வருவதற்குள் இளவரசன் குதிரையைத் தட்டிவிட்டு வெகுதூரம் போய்விட்டான்.

நகரத்தைத் தாண்டிக் கொஞ்சதூரம் சென்றதும் முந்நூற்றைம்பது குதிரை வீரர்கள் இளவரசனோடு சேர்ந்துகொண்டார்கள். அவர்கள் இவ்விதம் வந்து சேர்ந்துகொள்ள வேண்டும் என்று முன்னமேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் குஸ்ருவை இளவரசனாகக் கொள்ளவில்லை; மொகலாய ஸாம்ராஜ் யத்தின் சக்கரவர்த்தியாகவே மதித்து வணங்கினார்கள்.

சக்கரவர்த்திக்கு உரிய சகல மரியாதைகளையும் செலுத்தித் தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

பதவிக்கேற்ப ராஜ்யம் வேண்டுமே! தலைமுறை வழியாக வந்த பழக்கப்படி ஸாம்ராஜ்யத்தின் பகுதிகளைக் கைப்பற்றிக்கொள்வது என்று தீர்மானித்தார்கள்.

எந்தப் பகுதியை முதலில் கைக்கொள்ளுவது? ஜஹாங்கீர் ஆக்ராவில் வசித்துவந்தமையால், ஸாம்ராஜ்யத்தின் எல்லைப்புற மாகாணங்களான லாஹோரையும் காபூலையும் முதலில் கைப்பற்றுவது என்று தீர்மானித்திருந்தார்கள். அவ்விதமே அவர்கள் லாஹோரை நோக்கி வடக்கே சென்றார்கள்.

குஸ்ரூ லாஹோரை நோக்கிப் படையெடுத்துச் செல்வதை அறிந்த போர்வீரர்கள் நாலு திசைகளிலிருந்தும் அவனை அண்டி அவன் படையில் சேர்ந்துகொண்டார்கள். 'அவன் வெற்றிகொண்டு சக்கரவர்த்தியானால் தங்களுக்கு உயர்ந்த பதவிகள் கிடைக்கும்; அல்லது தோற்றுப்போனாலும், அதுவரையில் சம்பளமும், நாட்டைக் சூறையாடுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமும் அதனால் கிடைக்கும். இதர வரும்படிகளும் உண்டு' என்று எண்ணினார்கள். இவ்விதம் வெகு சீக்கிரம் அவனுடைய படை பன்னீராயிரம் ஆட்கள் கொண்டதாக ஆயிற்று.

அந்தச் சமயத்தில் லாஹோரில் அப்துர் ரஹீம் என்பவன் ஸுபாதா (கவர்ன)ராக இருந்தான். அவனைப்போல் காபூலில் ஹுஸேன் பேக் என்பவன் இருந்தான். அந்தக் காலத்தில் ஸுபாதார்கள் வருஷத்திற்கு ஒருமுறை தாங்கள் செலுத்த வேண்டிய திறைப் பணத்துடன் பாதுஷாவின் தர்பாருக்கு வந்து வணங்கி

நாஜர் செலுத்திவிட்டுப் போகவேண்டும். அந்த வழக்கப்படி அவ்விருவரும் தனித்தனியே ஆக்ராவை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

இளவரசன் அவர்களைச் சந்தித்தான். ஆசை வார்த்தை காட்டியும் பயமுறுத்தியும் அவர்களைத் தனக்கு உதவியாகப் போர் புரிய வேண்டிக் கொண்டான். உலகத்திலே பணத்துக்கும் பதவிக்கும் இச்சை கொள்ளாதவர்கள் மிகவும் குறைவு, அந்தக் காலத்தின் நிலைமைக் கேற்ப அவர்களுக்குச் சபலபுத்தி ஏற்பட்டதைக் குறைகூறக் கூடாது. அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பது புரியாமல் கொஞ்சம் தவித்தனர். 'இளவரசனுடன் சேர்ந்து போர்புரிந்து வெற்றி கொண்டால் பெரிய பதவி நிச்சயம். தோற்ருலோ சக்கரவர்த்தி விதிக்கும் தண்டனை சமயத்தைப் பொறுத்தது. அப்படிக் கிடைத்தாலும் அது உடனே இல்லை: போரில் தோற்றுப் பிடிபட்ட பிறகுதான். ஆனல், இன்று இளவரசனுடன் சேர மறுத்தால், இப்பொழுதே அவனுடன் சண்டையிட வேண்டும். நடுவழியில் மாட்டிக்கொண்டதால் தற்காப்புக்கே போதிய படை வீரர்கள் இல்லை.' இவ்விதம் எண்ணி அவர்கள் கடைசியாகக் குஸ்ருவின் பக்கம் சேர்ந்துகொண்டார்கள்.

ஹுஸேன் பேக் சக்கரவர்த்திக்குச் செலுத்துவதற்காக லக்ஷ ரூபாய் கொண்டுவந்திருந்தான். குஸ்ரு அந்தப் பணம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டான். ஆனல் அதை அவன் தனக்கே எடுத்துக் கொள்ளவில்லை. படை வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டான். பணத்துக்கு ஆசைப்பட்டுத் தானே அவர்கள் அவன் கட்சியில் சேர்ந்துகொண்டு போர்புரிகிருர்

கள்? அவர்கள் அவனுடைய ஆணைக்கு அடங்கி நடக்கவேண்டாமா?

4

பறவை கூட்டைவிட்டு ஓடிப்போய்விட்டது என்பதை ஜஹாங்கீர் உடனே அறிந்துகொண்டான். குஸ்ரு தனக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகம் விளைவித்துச் சிங்காதனத்தைக் கைப்பற்ற முயல்கிறான் என்பதை அறிந்த பிறகும் அவனால் சும்மா இருக்க முடியுமா? முன்பு தன் தந்தையின் காலத்தில் தான் செய்த சூழ்ச்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவன் ஞாபகத்துக்கு வந்தன.

அவனுக்கு இரவு முழுவதும் தூக்கம் கொள்ளவில்லை. மந்திராலோசனைதான். வஜீர்களையும் தானைத் தலைவர்களையும் அழைத்துவரச் செய்தான். மேலே செய்யவேண்டியது என்ன என்பதைப்பற்றி யோசனை செய்தான். 'உடனே இளவரசனைப் பின்தொடர்ந்து சென்று பிடித்துவிடவேண்டும்; அவன் மேற்கொண்டு கலகம் விளைவிக்க முடியாதபடி செய்துவிடவேண்டும்' என்று முடிவு செய்தான். அரசன் ஆணையிட்டால் அதற்குப் பிறகு காலதாமதம் உண்டா? இளவரசனைத் துரத்திச் சென்று வழிமறித்துக் கைது செய்ய ஒரு பெரும் படை புறப்பட்டுச் சென்றது.

ஆயிரக்கணக்கான படைவீரர்கள் வழிநடந்து செல்லக் காலம் பிடிக்கும். அவர்கள் வேகமாகச் சென்றால் பின்பு போர்செய்வதற்கு வேண்டிய வலிமை அவர்களுக்கு இராது. அதனால் அவர்கள் போய்ச் சேர்வதற்கு முன்பு இச்செய்தியை நாட்டின் அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டும். அவர்கள் இளவரசன் கட்சியில் சேராமல் சக்கரவர்த்தியின் பக்கத்திலேயே

நின்று அவனுக்கு உதவி செய்யவேண்டும். சபலபுத்தி கொண்ட அதிகாரிகளுக்கு அச்சுறுத்தி அவர்களைச் சக்கரவர்த்தியின் கட்சியில் சேர்க்கவேண்டும். அதற்காகத் தூதுவர் குதிரைமீது ஏறி நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று முக்கியமான அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்கள்.

இளவரசன் குஸ்ரூ லாஹோரை அணுகுவதற்கு முன்பே இச்செய்தி லாஹோருக்கு வந்துவிட்டது. அம்மட்டிலோ? இளவரசனைத் துரத்திக்கொண்டு சக்கரவர்த்தியின் சேனை ஒன்று வருவதையும் அவர்கள் அறிந்தனர். ஆதலின் அவர்கள் கோட்டை வாயிலை மூடிக் குஸ்ரூ உள்ளே நுழைய முடியாதபடி தடுத்து விட்டனர்.

அதிகமாகக் கூறவேண்டியதில்லை. குஸ்ரூவும் அவனைச் சேர்ந்தவர்களும் கடைசியில் பிடிபட்டார்கள். இளவரசன் குஸ்ரூவை ஓர் அதிகாரி வந்து வணங்கிக் கைகளில் 'வெல்வெட்' வைத்துத் தைத்த விலங்கை மாட்டிச் சிறைசெய்தான், கைது செய்து விலங்கிட்டாலும் அவன் ராஜகுமாரன்தானே? மற்றவர்களும் முறைப்படி விலங்கிடப்பட்டனர். எல்லோரும் சக்கரவர்த்தியின் சமுகத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

5

அவர்கள் அனைவரும் பிடிபட்ட செய்தியைக் கேட்ட அன்று இரவுமுழுவதும் ஜஹாங்கீர் தூங்கவேயில்லை. கோபத்தாலும் தாபத்தாலும் அவன் ரத்தம் கொதித்தது. இளவரசன் தப்பி ஓடிவிட்டான் என்றதைக் கேட்டபொழுது இருந்ததைவிட அவனைப் பிடித்த செய்தியைக் கேட்டபொழுதுதான் அதிகமான

கோபம் உண்டாயிற்று. மன்னன் கோபம் இளவரசனை விட்டு அவனுக்குத் துணையாக இருந்தவர்கள் மேலே திரும்பியது. அவர்கள் அவனுக்குத் துர்ப்போதனை செய்து உதவியாக இராவிட்டால், தன் மகன் இப்படிக் கலகம் செய்திருக்கமாட்டான் அல்லவா என்று எண்ணினன். என்ன இருந்தாலும் ரத்தபாசம் விடுமா?

சிறைப்பட்ட போர்வீரர்கள் எல்லோரும் லாஹோருக்குச் செல்லும் பாதையின் இருபுறங்களிலும் கழுவேற்றப்பட்டனர். சேனைத் தலைவர்கள் யாவரும் இளவரசன் ஸுபாதார்கள் இருவருடன்கூட லாஹோருக்கு வெளியே மன்னன் தங்கியிருந்த கூடாரத்துக்கு அழைத்துவரப் பட்டனர். அவர்களைக் கண்டவுடன் ஜஹாங்கீரின் கோபம் அளவுகடந்து சென்றது. அவர்களைத் தன் கைவாளாலேயே குத்திக் கிழித்து விடலாமா என்றும் எண்ணினன். ஆயினும் அவர்கள் அரசன் கையால் வீழ்த்தப்படக் கூடிய அத்தகைய பெருமையை அடைவதற்குத் தகுதி அற்றவர்கள் என்றே அவர்களைச் சித்திரவதை செய்து துன்பத்தை அனுபவிக்க விடவேண்டும் என்றே எண்ணித் தன் விருப்பத்தை அடக்கிக்கொண்டான்.

அந்தத் தலைவர்களுக்கோ பாதுஷாவின் முன்னல் நிற்கவே முடியவில்லை. கைகால்களில் பூட்டப்பட்ட விலங்குகளும் அவற்றின் இரும்புச்சங்கிலிகளும் மிகவும் கனமாக அவர்களைக் கீழே இழுத்தன. சக்கரவர்த்தியின் முன்னிலையில் அவர்கள் உட்காரலாமா? தூக்கமாட்டாமல் அவற்றைச் சுமந்து நின்றார்கள்.

மன்னன் அவர்களைப் பார்த்துப் பரிகாசக் குறிப்போடு சிரித்தான். அவர்களை நோக்கி, "பலே பேஷ்! நல்ல காரியம் செய்தீர்கள். நாம் உங்களிடம் ஒப்படைத்

ததைச் சரிவர நிறைவேற்றி விட்டீர்கள். முன்னம் நமக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் எங்கே போயின? ஆமாம். நீங்கள் புதிய அரசனைத்தான் தேடினீர்களே. போயும் போயும் இவனைத்தானா பிடிக்க வேண்டும்? வேறு ராஜகுமாரர்கள் உங்களுக்குக் கிடைக்கவில்லையா?" என்றெல்லாம் பரிகாசமாகப் பேசினான்.

தன் பக்கத்திலிருந்த வேலையாளுக்கு உத்தர விட்டான். அவன் உடனே ஒரு கழுதையையும் எருமைக் கடாவையும் உயிருடன் உரித்து அவற்றின் பச்சைத் தோலைக் கொணர்ந்தான். அப்துர் ரஹீமை நிர்வாண மாக்கி அவனுக்குத் கழுதைத்தோலைப் போர்த்தி உடலுடன் ஒட்டினாற்போலத் தைத்தான். அதே போல ஹுஸேன் பேக்கை எருமைக்கடாவின் தோலில் தைத்தான். அவ்விருவரையே அரசாங்கச் சேவகர்கள் லாஹோரில் மேலே சொன்னபடி ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

ஹுஸேன் பேக் அக்பர் சக்கரவர்த்தி காலத்தில் ஸாம்ராஜ்யத்துக்கு அரிய சேவை செய்திருக்கிறான். அவன் தன் ஆயுள் முழுவதையும் அரச குடும்பத்துக்கு உழைப்பதிலேயே செலவிட்டவன். அவனே தனக்கு விரோதமாகக் கிளம்பியது மன்னனை மிகவும் வாட்டியது.

பச்சையாக உரிக்கப்பட்ட தோல் நேரம் செல்லச் செல்ல உலர்ந்து சுருங்கியது. அது உடலுடன் ஒட்டி னாற்போலத் தைக்கப்பட்டிருந்ததால், சுருங்க ஆரம் பித்தவுடன் உடலை நெருக்கி மூச்சுவிட முடியாமல் திணற அடித்தது. எருமைக்கடாவின் தோல் தடியான தால் சீக்கிரம் சுருங்கியது. அன்றி, அது மிகவும்

முரடானதால் நன்கு அமுக்கி ஹுஸேன் பேக்கை வதைத்தது. நான்கு ஜாமப் பொழுதிற்குள் அவன் உயிர் துறந்தான்.

மன்னன் அப்துர் ரஹீமிடத்து இரக்கம் கொண்டான். அதனால் அவனுக்கு மற்றொரு வரத்தையும் அளித்தான்; தோலை உலரவிடாமல் அடிக்கடி அதன் மீது தண்ணீரை ஊற்றிவர உத்தரவு கொடுத்தான்.

எனினும் எவ்வளவு காலந்தான் பச்சைத்தோலை உடுத்திருக்க முடியும்? கொஞ்சகாலம் சென்றதும் அது அழுக ஆரம்பித்துவிட்டது. துர் நாற்றம் பக்கத்தில் எவரையும் அணுகவொட்டவில்லை, தண்ணீர் கொடுக்கும் வேலையாளும் மூக்கை இறுகப்பிடித்துக்கொண்டே பக்கத்தில் வந்து தண்ணீர்ச்செம்பை வைத்துவிட்டு ஓடிவிடுவான். ஈக்களும் கொசுக்களும் அந்தத் தோலை மொய்க்க ஆரம்பித்துவிட்டன. அவன் தன் கையால் ஓர் ஈயைப் பிடித்து விரல்களுக்கிடையில் நசுக்கிக் கொன்றால் சொர்க்கபதவியை அடைந்த ஆனந்தத்தைப் பெறுவான் என்றால் அவன் இருந்த நிலைமை விளங்கும்.

அப்துர் ரஹீம் இவ்வித ஸ்திதியில் மூன்றுநாட்கள் இருந்தான். அதற்குப்பிறகு அவன் மன்னனுக்கு மூன்று லக்ஷ ரூபாய்கள் அபராதம் செலுத்தித் தன் பிழையை மன்னிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டதன் பேரில் விடுவிக்கப்பட்டான். மன்னனும் அவனை மன்னித்தான் ; அன்றி அவனுக்கு ஒரு வெகுமதியும் அளித்தான். 'கர்' என்ற பட்டத்தைச் சேர்த்து அவன் பெயரை அப்துர் ரஹீம் கர் என்று திருத்தியமைத்தான். **கர்** என்றால் பாரசிக பாஷையில் கழுதைஎன்று பொருள் படும். அவன் செய்த கழுதைச் சவாரியை எல்லோருக்கும் ஞாபகமூட்டவே அந்தப் பட்டம் அளிக்கப்பட்டது போலும் !

நைவேத்தியம்

"நான் உள்ள வரையில் அதற்குச் சம்மதியேன்."

"என்ன ?"

"மகாராஜா அவர்கள் மன்னிக்கவேண்டும் ; நான் உள்ளவரையில் அதற்குச் சம்மதியேன்."

"ஓஹோ! அப்படியா! உமக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டதா, என்னையே மறுக்கும்படி ?"

"நான் மறுபடியும் வேண்டிக் கொள்ளுகிறேன் ; இது நம் தர்மத்திற்கு ஏற்றதல்ல."

"உம்மை அதையெல்லாம் யார் கேட்டது ? நான் கூறுகிறபடி செய்யவேண்டியவர்தாமே. நீர் ? அதனல் ஏற்படும் பலனுக்கு நானல்லவா பொறுப்பாளி ?"

"உண்மைதான். ஆயினும் மந்திரித்தொழில் செய்பவர்கள் பின்னல் ஏற்படக்கூடிய நிலைமையை அறிந்து அரசனுக்கு அறிவிக்கவேண்டிய கடமை உடையவர்கள். அன்றியும், அரசன் காரியம் தர்ம சாஸ்திரத்துக்கு விரோதமாக இருக்குமானல் பல வழிகளிலும் முயன்று அதைத் தடுக்கவேண்டியவர்கள் ; ஆகவேதான் நான் அவ்விதம் சொன்னேன."

மந்திரி இவ்விதம் கூறியதைக் கேட்டதும் அரசனுக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. பற்களை நறநறவென்று கடித்தான். மீசைகள் துடித்தன. கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்துவிட்டன. அவன் ஒருவாறு கோபத்தை அடக்கிக்கொண்டு மந்திரியைப் பார்த்து, "ஏது, உம்முடைய நிலையை நீர் இன்னம்

அறியவில்லைபோல் இருக்கிறதே! இவ்விடம் அரசனாக இருப்பது நானா, நீர்தாமா? கொஞ்சம் அடக்கியே பேசும்; இவ்விதம் வேறு எவனாவது கூறியிருந்தால் அவன் இவ்வளவு நேரம் யமபுரத்தை அடைந்திருப்பான்; என் அருமைத் தந்தையார் உம்மிடம் வைத்திருந்த பிரியத்துக்காக உம்மை மன்னித்தேன்" என்று சொன்னான்.

ஆனால் மந்திரியோ அதற்கும் அசைவதாக இல்லை.

"அரசே, நான் தங்கள் தந்தைக்கு அளித்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். அவர் உங்களை என் குழந்தையைப்போலப் பாதுகாத்து வரவேண்டும் என்று சொல்லிச் சென்றிருக்கின்றார். என் பிள்ளை ஒருவன் இக்காரியத்தைச் செய்ய முன்வந்தால் அதை நான் என் உயிரைக் கொடுத்தாவது தடுப்பேன். தாங்கள் இதைக் கைவிடவேண்டும். இந்த எண்ணத்தைத் தங்கள் தாயார் தமையனார் முதலியவர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்."

"நான் உமக்கு எத்தனை தடவை சொல்லுவது, அந்த அடங்காப்பிடாரியையும் அவன் தாயையும் பற்றி என்னிடம் பேசாதேயும் என்று? தந்தைக்கு விரோதமாகக் கிளம்பிய அந்த அற்பனுக்கு உதவியாக நிற்கும் அவன் தாய், தர்மத்தை அதிகமாக அறிந்தவள் தான்! அந்தத் தறுதலையை நீர்தாம் மெச்சிக்கொள்ள வேண்டும்!"

மந்திரிக்கு ஒன்றும் புரியவில்லை. அரசன் தன் அண்ணனை மதித்துப் போற்றவில்லை யென்பதையும் அவர்களுக்குள் ஐக்கிய பாவம் இல்லை என்பதையும் அவர் அறிவார். ஆயினும் மன்னன் தன் தமையனை இவ்வளவு தூரம் இழிவாகப் பேசுவான் என்று கன

விலும் கருதவில்லை. மனம் கலக்கமுற்றது. அதனால் மந்திரி மன்னனைப் பார்த்து, "மகாராஜா, என் மனம் இன்னும் சாந்தியை அடையவில்லை; கலங்கியே நிற்கின்றது. இன்றைக்கு ஒரு நாள் அவகாசம் கொடுங்கள். இந்த விஷயத்தை நாளைத்தினம் பார்த்துக்கொள்ளலாம். இந்த ஒரு வேண்டுகோளைக் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

2

மந்திரி ரகுநாத நாராயண ஹநுமந்தேக்கு அன்றிரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. அவர் மனம் மிகுந்த சஞ்சலத்தை அடைந்து குமுறிக்கொண்டே இருந்தது.

ஹநுமந்தே ஒரு பிராமணர். மிகவும் வயதானவர். அவர் இளம் வயதில் ராஜாங்க வேலையை மேற்கொள்ளவில்லை; சாஸ்திரம் வாசித்து, நியாயம் வேதாந்தம் இரண்டிலும் நல்ல பாண்டித்தியத்தை அடைந்தார். அவருடைய வாக்கு வன்மையையும் சாதுர்யத்தையும் கண்ட மகாராஷ்டிரத்தலைவன் ஷாஜி அவரைத் தனக்கு மந்திரியாக அமர்த்திக்கொண்டான்.

ஷாஜி தன் மந்திரியை மிக்க மரியாதையுடன் நடத்திவந்தான். எந்தக் காரியத்தையும் அவரைக் கலந்து ஆலோசிக்காமல் செய்யமாட்டான். ஷாஜி தன் காலம் முழுவதையும் படை திரட்டுவதிலும், போர் புரிவதிலும் செலவழித்தமையால், ராஜ்யாதிகாரத்தை அவரே நடத்திவந்தார் என்று சொல்லலாம்.

ஷாஜி இறந்துபோனபொழுது தன்னுடைய ஜாகீரான பங்களூர்ச்சீமை முழுவதையும் தன் இரண்டாவது பிள்ளை வெங்காஜிக்குக் கொடுத்து, அவனையும்

ஜாகிரையும் ஹநுமந்தேயிடம் ஒப்பித்துச் சென்ருன். மந்திரியும் வெங்காஜியைத் தம் பிள்ளையைப் போலவே நடத்திவந்தார்.

ஆயினும் வெங்காஜி தஞ்சையில் வசிக்க ஆரம்பித்த காலம் முதல் அவன் நடத்தையில் ஒரு வித்தியாசம் தோன்றியது. ஹநுமந்தேயை அவன் முன்போல மரியாதையாக நடத்தவில்லை. பதவிக்கு ஆசைப்பட்டு எல்லா அதிகாரங்களையும் அவர் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிருர் என்று எண்ணினன். ராஜ்ய பாரத்தில் தனக்கே சர்வதிகாரம் உண்டு என்றும் நினைத்தான். அதனுல் தன் எண்ணத்தை அவர் ஒப்புக் கொள்ளாத காலங்களிலெல்லாம் அவர்மீது சீறிவிழுந்து வந்தான்.

மன்னன் நடத்தை மந்திரியின் மனத்தைச் சிறிது சிறிதாக அலைக்கத் தொடங்கியது. அவருக்கு வெறுப்புத் தட்டிக்கொண்டே வந்தது. அன்றைத் தினம் அவன் பேசியது அவர் மனத்தை ஒரு முடிவுக்குக் கொணர்ந்தது. தம்முடைய மனச்சாட்சியுடன் இனிமேல் வெங்காஜிக்கு மந்திரியாக இருக்கமுடியாது என்பதை அவர் உணர்ந்தார்.

உத்தியோகத்தை உதறித் தள்ளுவதைப் பற்றி அவர் வருத்தப்படவில்லை. அரசன் தம்முடைய சொத்து முழுவதையுமே பறிமுதல் செய்தாலும் அவருடைய ஜீவனோபாயத்துக்குக் கஷ்டமில்லை. அதைப்பற்றி அவர் கவலைப்படவும் இல்லை. அவருக்கு இரண்டு சாஸ்திரங்கள் நன்ருக வரும். எங்கே போனுலும் நான்கு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தாவது வயிற்றைக் கழுவிவிடலாம்.

அவருடைய கவலையெல்லாம் அரசன் கொண்டுள்ள எண்ணத்தை எப்படி மாற்றுவது என்பது பற்றியே யாகும். அரசன் பணத்தாசை கொண்டு அலைந்து வந்தான். அவன் அக்கிரமமாகத் தஞ்சையைக் கைப்பற்றி மன்னனாக முடிசூட்டிக்கொண்டவன். அதைக் கண்டு நாட்டு மக்கள் தன்னை வெறுக்காமல் இருப்பதற்காக அவன் தனக்கு முன்பு அரசனாக இருந்த விஜயராகவ நாயக்கர் கஜானாவில் சேர்த்துவைத்திருந்த பொக்கிஷம் பூராவையும் செலவு செய்துவிட்டான். அதற்குப் பிறகு நான்கு பக்கங்களிலும் விரோதிகள், பகை அரசர்கள் ஏற்பட்டு விட்டார்கள். அவர்களுடன் ஓயாமல் போர்புரிவதற்குப் பெரும்படை வேண்டியிருந்தது. பணம் இல்லாமல் படைகளைத் திரட்ட முடியுமா ? நாட்டிலோ பஞ்சம்; குடிகளிடம் அதிகமாக வரி வசூலிக்கவும் முடியவில்லை.

பணமுடை அதிகமாகிவிட்டது. அவன் எதைக் கைப்பற்றினால் பொருள் கிடைக்கும் என்பதைப்பற்றிக் குருட்டு ஆலோசனைகள் செய்துவந்தான். கடைசியாகக் கோயில்களின்மீது கை வைக்க எண்ணங்கொண்டான். 'சிவசொத்து குலநாசம்' என்பதை அறவே மறந்தான். கோயில் கஜானாப் பணத்தையும் எம்பெருமான் திருமேனியை அலங்கரிக்கும் திருவாபரணங்களையும் கொள்ளை கொள்ள விரும்பினான். அம்மட்டிலோ ! விக்கிரகங்களையும் உருக்கிப் பொன்னாக்க நினைத்தான்.

இதைக் கேட்டால் யாருக்குத்தான் மனம் பொறுக்கும்? வைதிக தர்மத்தை அநுஷ்டித்த மந்திரிக்கு இதைக் கண்டு மனம் பொறுக்கவில்லை. 'எப்படியாவது இதை நிறுத்தவேண்டும். அதற்குத் தகுந்த மார்க்கம்

நாம் உடனே நாட்டைவிட்டு வெளியேறிவிடுவதுதான்' என்னும் முடிவுக்கு வந்தார்.

ஆனுல் அப்போது இருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு வெளியேறுவது சுலபமான காரியமா? அன்றி வெளியிலிருந்து மன்னன் இஷ்டப்படிச் செய்வதைத் தடுப்பதுதான் முடியுமா?

3

பொழுது விடிந்ததுதான் தாமதம்; மந்திரி தம்முடைய நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு மன்னனைக் காணச் சென்ருர். அரசனை முறைப்படி ஆசீர்வாதம் செய்துவிட்டுப் பின்வருமாறு வேண்டிக்கொண்டார்:

"மகாராஜா, என்னை மன்னிக்கவேண்டும். நேற்று இரவு முழுவதும் ஆலோசித்துப் பார்த்தேன். தாங்கள் சொல்வதை ஒப்புக்கொள்ள என்மனம் இடம் கொடுக்க வில்லை. அபிப்பிராயபேதம் கொண்டு நான் இவ்விடம் இருப்பானேன்? எனக்கும் வயதாகிவிட்டது. இனிமேல் போகிறவழிக்கு ஏதாவது பார்த்துக்கொள்ளவேண்டும். நான் தீர்த்தாடனம் செய்யப்போகலாம் என்று எண்ணி யிருக்கிறேன். காசியைப் பார்க்கப் புறப்பட்டுப் போக விரும்புகிறேன். எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்."

'விட்டது சனியன்' என்று நினைத்தான் அரசன். மந்திரி வேண்டியபடியே உத்தரவும் அளித்துப் பல வெகுமதிகளையும் கொடுத்து வழியனுப்பினுன்.

ஹநுமந்தே காசியை நோக்கிப் புறப்பட்டார். பிரயாணம் ஓட்டமும் நடையுமாகச்சென்றது. எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகத் தஞ்சா வூர்ச் சீமையின் எல்லையைத் தாண்ட விரும்பினுர். அரசன் புத்தி எந்தச் சமயத்திலும் மாறக்கூடும்; ஒரு

கால் தம்மைத் தடுத்துவிட்டால் என்ன செய்வது என்ற யோசனைதான் காரணம்.

ஆகவே அவர் தமிழ் நாட்டு எல்லையைக் கடந்த வுடன் வேகம் குறைந்துவிட்டது. காசிக்குப் போவ தாகச் சொல்லிப் புறப்பட்டாலும் அவருக்குக் காசிக்குப் போகும் உத்தேசம் இல்லை. அவர் தம்முடைய இள மைப் பொழுதை இனிமையுடன் போக்கிய மகாராஷ் டிரத்தை அடைய விரும்பினார்.

வெங்காஜியின் அண்ணன் சிவாஜி மகாராஷ் டிரத்தை ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து ஆண்டு வந்தான். ஹநுமந்தே, சிவாஜியை நேரில் கண்டு வெங்காஜியின் நடத்தையைக் கூறி அதை மாற்று வதற்கு உபாயம் தேட எண்ணினார்.

சிவாஜியோ, வெங்காஜிக்கு நேர்மாறான குணங் களையுடையவன். ஹிந்துக்கள் அவனை அவதார புருஷ னாகவே மதித்து வந்தார்கள். ஹிந்து மதம் அவனால் புனிதத்தன்மை அடையப்போகிறது என்று நிச்சயமாக நம்பினார்கள்.

ஹநுமந்தே தாம் போகுமிடங்களில் எல்லாம் தம்முடைய வாக்கு வன்மையைப் பிரகாசப்படுத்திக் கொண்டே போனார். கோல்கொண்டா மன்னன் அடில்ஷாவின் மந்திரிகளான அக்கண்ணா, மதண்ணா ஆகியவர்களையும் வசப்படுத்தினார். அவர்களுடைய உதவியால் கடைசியில் சிவாஜியைக் கண்டு ஸல்லாபம் செய்தார். தென்னாட்டில் அவன் தம்பி வெங்காஜி செய்துவரும் அநீதிகளை எடுத்துரைத்து அவற்றைத் தவிர்ப்பதற்கு வழிதேடும்படி வேண்டிக்கொண்டார்.

4

இதற்கிடையில் தஞ்சையில் நிலைமை மோசமாகி வந்தது. திடையாக நின்ற ஹநுமந்தேதான் இல்லையே! கோயில் சொத்துக்களையெல்லாம் அரசாங்கத்துக்குப் பறிமுதல் செய்யும்படி அரசன் கட்டளையிட்டான். பல நூற்றாண்டுகளாகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த தர்ம சொத்துக்கள் யாவும் போய்விட்டன. கோயில்களின் நித்திய பூஜைக்கே முட்டுப்பாடு உண்டாயிற்று. அந்த ஸ்திதியில் விசேஷ உற்சவாதிகள் எப்படி நடக்கும்? பல கோயில்கள் மூடப்பட்டன. சுவாமி தரிசனம் செய்யாமல், உணவு கொள்வதில்லை என்ற வைராக்கியம் கொண்டவர்கள் பலர் பட்டினி கிடக்கவும் நேரிட்டது.

வைதிக தர்மத்தை அனுஷ்டிக்கும் மந்திரிகளையுடைய மன்னனிடம் தூதுசென்று தங்கள் குறைகளைக் கூறிக்கொண்டால் மந்திரிகள் அவற்றை நிவர்த்திக்க வழி தேடுவார்கள் என்று குடிகள் நினைத்தார்கள். ஆனால் தந்தையின் ஸ்தானத்தில் இருந்த ரகுநாத நாராயண ஹநுமந்தேயின் செல்வாக்கே செல்லாத இடத்தில் மற்ற மந்திரிகளின் உபதேசம் எவ்வளவு தூரம் ஏறும்? கங்காதர மகி, அவர் மகன் திரியம்பக மகி முதலிய உத்தியோகஸ்தர்கள் யாக யக்ஞங்களைச் செய்தவர்களே. கடவுள் தரிசனம் செய்யாமல் உண்ண மாட்டார்கள். ஆயினும் அவர்கள் என்ன செய்யக் கூடும்?

ஜனங்களில் பெரியதனக்காரர்களும், பண்டிதர்களும் ஒன்றுதிரண்டு தஞ்சைக்குச் சென்றார்கள். மந்திரிகளையும் மன்னனையும் பேட்டி கண்டார்கள். கோயில் சொத்துக்களையும் நிலங்களையும் அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டுவிட்டபடியால், பூஜை நைவேத்தியம்

முதலியன செய்ய முடியவில்லை. அதனால், பல கோயில்கள் பூட்டிக் கிடக்கின்றன' என்பதைப் பல விதமான நியாயங்களுடன் எடுத்துக் காட்டி அந்தச் சொத்துக்களைத் திரும்பிக் கொடுத்து விடும்படி வேண்டிக்கொண்டார்கள்.

வெங்காஜி இவற்றிற்கெல்லாம் அசைந்து கொடுக்க வில்லை. வந்திருப்பவர்களுடன் தர்க்க சாஸ்திர ரீதியாக வாதம் செய்யலானான் :—

"சுவாமியை நாம் மறக்கக்கூடாதுதான். அவரை நாம் தினமும் வணங்கவேண்டியது நம் கடமை. கடவுள் உங்களிடம் சோறு துணி முதலியவற்றைக் கேட்கிறாரா? நீங்கள் பலவிதமான ஆகாரங்களைச் செய்து நைவேத்தி யம் செய்கிறீர்கள். அவற்றைக் கடவுள் உண்கிறாரா? சுவாமிக்கென்று நைவேத்தியத்திற்கும், ஆடை ஆப ரணத்திற்கும் செலவு செய்யும் பணம் வீண்தானே? அவற்றை உண்மையில் நீங்கள்தாமே அடைகிறீர்கள்? மானஸிக பூஜைதான் சிறந்த முறை. அது போதா தென்றால், பிம்பங்களை நிர்மாணித்துத் தெள்ளிய நீரால் அபிஷேகம் செய்து இனிய நறுமலர்களைக் கொண்டு அருச்சனை புரியுங்கள். அதைச் செய்வதற்கு உங்களுக்கு என்ன செலவு?"

இவ்விதம் மன்னன் பலவிதமாக வீண்வாதம் செய்து அவர்களை அனுப்பிவிட்டான். குடிமக்களும் மனம் உடைந்து திரும்பினார்கள். அதனுடன் அவர்கள் நின்று விடுவார்களோ? தங்கள் மதம் அழிந்து போவதைக் காணச் சகிப்பார்களோ?

குடிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்தார்கள். அரசன் கட்டளையைமீறுவது என்று தீர்மானித்தார்கள். அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பினார்கள்.

கோயில் சொத்துக்களில் கிராமங்களில் எஞ்சியிருப்ப வற்றைக் கொடுக்க மறுத்தார்கள். கோயில் நிலங்களில் மாசூல்களைக் கிராமத்தார்களே அறுவடை செய்து, அரசாங்கத்துக்குக் கொடுக்க முடியாது என்று கூறி எடுத்துக்கொண்டார்கள். அரசாங்க அதிகாரிகளும் கண்டும் காணுமலும் சும்மா இருந்துவிட்டார்கள்.

5

நாடு இவ்விதம் அலங்கோலப்பட்டுக் கிடந்தது. அந்தச் சமயத்தில் மன்னனுக்கு விரோதமாக வெளியி லிருந்து ஒரு விரோதியும் வந்து சேர்ந்தான்; சிவாஜி ஒரு பெரும் படையுடன் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் வரும் வழியில் உள்ள கோட்டைகளைப் பிடித்துக் கைவசப்படுத்திக்கொண்டு, கடைசியாகக் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள திருமழபாடியில் வந்து பாடியிறங்கினுன்.

பிதுரார்ஜித சொத்தில் தனக்கு உள்ள பாகத்தைத் தன் வசம் ஒப்பித்துவிடும்படி சிவாஜி தன் தம்பிக்குச் சொல்லி அனுப்பினுன். தகப்பனுரது ஜாகீரைத் தம்பியே பதினைந்து வருஷங்களாக அனுபவித்து வந்ததை, சிவாஜி அதுவரையில் ஆட்சேபித்ததே இல்லை. அந்த ஜாகீரின் ஒரு பாதியை இனித் தன்வசம் ஒப்பித்துவிடவும், இந்தத் தகராறைச் சண்டையில்லாமல் சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு வெங்காஜி மூன்று பிரதிநிதி களைத் தன்னிருப்பிடத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டான்.

உண்மையில் சிவாஜி ஜாகிரின் பாகத்தை விரும்பவில்லை. தன் தம்பிக்கு நற்புத்தி கற்பிக்க எண்ணியே தென்னுட்டுக்கு வந்தான். சிவாஜியுடன் மந்திரி ஹநுமந்தேயும் வந்திருந்தார் என்பதை நாம் கவனித்தால் போதாதா? வெங்காஜி அண்ணனுக்குக் கீழ்ப்படிவதைக் கௌரவக்குறைவாக முதலில் நினைத்தான். எனினும் கடைசியாக, சிவாஜி தங்கியிருக்கு மிடத்திற்குத் தானே நேரில் சென்றுன். தமையனும் தம்பியை மிக்க மரியாதையுடன் வரவேற்றுன். அவ்விடத்திலேயே தம்பி சுமார் இருபது நாட்கள் தங்கியிருந்தான். தமையன் தம்பிக்குப் பலவிதமான நல்லுபதேசங்கள் செய்தான். என்ன போதனை செய்தும் அவனிடமிருந்து ஒரு பதிலையும் எதிர்பார்க்க முடியவில்லை. கடைசியில் தன்னை ஏதாவது பலாத்காரம் செய்து அவர்களுக்கு இணங்கச் செய்துவிடுவார்களோ என்று பயந்து வெங்காஜி திருட்டுத்தனமாகத் தஞ்சைக்கு ஓடிவந்துவிட்டான்.

உண்மையில் அவன் மனம் குழம்பியிருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் அவஸ்தைப்பட்டான். அவனுக்கு உதவியாக ஒருவரும் இல்லை. ஜனங்களின் மனக்கொதிப்பும் அதிகமாகவே இருந்தது. ராஜ்யமே தன் கையிலிருந்து எங்கே நழுவிவிடுமோ என்றும் பயந்தான். பழைய ராஜ குடும்பமான நாயக்க வமிசத்தைச் சேர்ந்த செங்கமலதாஸன் வேறு சமயம் பார்த்திருந்தான். தனக்குப் பதவி இல்லாமல் போனுலும் போகட்டும், ராஜ்யம் நழுவாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை கொண்டான். அதனுல்

கடைசியாக ஓர் ஏற்பாடு செய்தான்; 'தான் ராஜ்யத்தினின்றும் விலகிக்கொண்டு விடுவது. தன் மூத்தபிள்ளையான ஸஹாஜிக்கு முடிசூட்டித் தேர்ந்த மந்திரிகளைக் கொண்டு ராஜாங்கத்தை நிர்வகிப்பது' என்று ஒப்புக்கொண்டான்.

அரசன் பறிமுதல் செய்த கோயில் சொத்துக்கள் யாவும் திருப்பிக்கொடுக்கப்பட்டன. அதன் பலனாகக் கோயில்களில் பூஜை நைவேத்தியங்கள் முன்பிருந்தவற்றைவிட அதிகமாகவே நடைபெற்றன வென்பதை நாம் கூறவேண்டியதில்லை.

அடிமைப் பெண்

1

பொழுது விடியுந் தருணம். காலை இளங்காற்று 'ஜில்'லென்று வீசிக்கொண்டிருந்தது. இரவு முழுவதும் சிறைச்சாலை வெப்பத்தில் அவதிப்பட்ட அவன், காலைக் காற்றையாவது சிறிது அனுபவிக்கலாமென்று ஜன்னல் புறம் வந்து உட்கார்ந்தான்.

படுக்கையினின்றும் கிளம்பி ஜன்னலுக்கு வருவதே கஷ்டமாகப் போய்விட்டது அவனுக்கு. கண்களைப் பறிகொடுத்தவன் எப்படித் தாராளமாக நடக்க முடியும்? சுவரைப் பிடித்துக்கொண்டே தடவிச் செல்ல வேண்டியவன் தானே?

அவன் வாழ்க்கையில் அன்றைத்தினம் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அது பின்னால் தீராத மாறுதலாகவே முடிந்தது. தினமும் அவன் விழித்துக்கொள்ளும் முன்னதாகவே எழுந்திருந்து அவனுக்கு வேண்டியவற்றைச் செய்யத் தயாராகக் காத்துக்கொண்டிருப்பவளை அன்றைத் தினம் காணவில்லை. அவள் எங்கே போய் விட்டாள்? அவள் அவ்விதம் போகமாட்டாளே. ஒரு கால் அவன்மீது கோபித்துக்கொண்டு விட்டாளோ? அவன் வெகுநேரம் இவ்வித மனக்கலக்கத்துடன் உட்கார்ந்திருக்கவில்லை. ஆயினும், மனம் மட்டில் எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தது.

" ஹூஸூர் !"

சிறைக் காவலாளி தன்னை இவ்விதம் கூப்பிடு வதைக் கேட்டுத் திடுக்கிட்டு உறக்கத்தினின்றும் எழுந் தான். காவலாளி எவ்வளவு நேரமாகத் தன்னைக் கூப்பிடுகிறான் என்பதை அறியக்கூடவில்லை. ஆயினும் அவன் தழுதழுத்த குரலில் மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக உரத்துக் கூப்பிடுவதைக் கவனித்தால், அவன் அதற்கு முன்பு நாலைந்து தடவைகளாவது கூப்பிட்டிருக்க வேண்டும் என்பது தெரியும்.

கைதி இவற்றை யெல்லாம் கவனிக்கவில்லை. காவலாளியின் குரலில் காணப்பட்ட நடுக்கம் அவன் மனத்தில் ஊடுருவிச் சென்று ஒருவித உணர்ச்சியை உண்டாக்கியது. ஏதோ கெட்ட செய்தி ஒன்று வரப் போகிறது என்பதை உணர்ந்தான். ஆயினும் இடி விழுந்ததுபோல இப்படி இருக்கும் என்று உணரவில்லை.

அவனுக்கு உதவி செய்து வந்தவள் பிணமாகச் சிறைச்சாலையின் வாசலிலே கிடக்கிறாள் என்ற செய்தி யைத்தான் காவலாளி தெரிவித்தான். இதை முதலில் கைதி நம்பவில்லை. காவலாளியின் உதவியால் அந்தப் பிணத்தை உள்ளே கொணர்ந்தான். ஒவ்வோர் அங்க மாகத் தொட்டுப் பார்த்தான். சந்தேகமில்லை. அவள் தான். நிச்சயமாயிற்று. அது அவன் மனத்தில் மற்றொரு குழப்பத்தை உண்டாக்கியது.

'அவள் ஏன் இறந்தாள்? எவ்விதம் இறந்தாள்? சுயேச்சையை இழந்து கண்களைப் பறிகொடுத்த பாவி யாகிய தனக்கு இந்தச் சிறிது சுகமும் கூடாது என்று அவர்கள் கருதிவிட்டார்களா? அல்லது அவள்தான் தற்கொலை செய்துகொண்டாளா?' என்றெல்லாம் யோசித்தான்.

முதல் நாள் தான் அவளிடம் கோபமாக நடந்து கொண்டதைக் குறித்து வருத்தப்பட்டான். அவன் அவ்விதம் நடந்திருக்க வேண்டியதில்லை. அவள் என்னதான் செய்துவிட்டாள்? எல்லாம் அவனுடைய நன்மைக்காகவே தானே சொன்னாள்?

"வலிய வரும் சீதேவியை உதைத்துத் தள்ள லாகாது." இதே பல்லவியை அவள் திருப்பித் திருப்பி அவன் காதில் உரைத்துவந்தாள். அவனோ விடாப் பிடியாக 'மாட்டேன்' என்று மறுத்துவந்தான்.

இச்சம்பவத்துக்கு முதல் நாள் அவள் மறுபடியும் அவனை வேண்டிக்கொண்டாள்.

"சரி என்று ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள். மேலே ஆகவேண்டிய காரியங்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று கூறினாள்.

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "அதைப் பற்றி என்னிடம் கூறாதே. என் ஆயுள் உள்ளவரையில் அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்" என்று நிச்சய மாகச் சொல்லிவிட்டான்.

அவளா விடுபவள்!

"நான் உள்ளவரையில் நீங்கள் இப்படித்தான் இருப்பீர்கள்; நான் இறந்துவிட்டால் நீங்கள் கட்டாயம் அவர்கள் சொல்லுகிறபடி செய்வீர்கள் அல்லவா?" என்று கேட்டாள்.

இவ்வளவுதான்.

"நீ கூட எனக்கு விரோதியாக ஆகிவிட்டாயா?" என்று கேட்டுவிட்டான்.

இதனை அவன் கூறும்பொழுது ஒளியிழந்த அவன் கண்களில் ஒரு விறுவிறுப்பும், அவனிடம் ஒரு வீரா வேசமும் தோன்றின. அது இயற்கைதான். அவன்

உடலில் ராஜபுத்திர ரத்தம் ஓடிக்கொண்டிருக்க வில்லையா? அவன் மனத்திற்கு வெறுப்பை அளிக்கக் கூடிய ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால் அவ னுக்கு ஆத்திரம் உண்டாகாதா?

2

இவ்வித நிலையில் இருந்தவன் இன்றைக்குச் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் பெரும் பகுதியையும், இந்தியாவின் எல்லைப்புறங்களையும் ஒரு குடையின் கீழ் ஆண்டுவந்த மொகலாய ஸாம்ராஜ்ய சக்கரவர்த்தி ஜஹாங்கீரின் மகன் குஸ்ரூ என்பவன் ஆவன். இவ்விதமான உயர் பிறப்பை யுடையவன் கண்களை இழந்து கபோதியாகிச் சிறையில் கிடந்தான்.

அவனுக்குக் குற்றேவல் செய்பவள் ஓர் அடிமை அல்ல; அவள் காதற்கிழத்தி. அவள் உயர் குடியில் பிறந்தவள் அல்ல; வேசைத் தொழில் புரிபவள். ஆயி னும் அவர்களுக்கிடையே உண்மையான காதல் வளர்ந் தது. குஸ்ரூ சிறைப்பட்டும் அவள் அவனை விடவில்லை. அவனைத் தொடர்ந்தே அவளும் சிறைசென்றாள். 'மயிர் நீப்பின் வாழாக் கவரி மான்' போல அவள் தன் காதலனைப் பிரிந்து வாழமுடியாதவள். அவள் தன் சுகத்தைச் சிறிதும் கவனிக்கவில்லை. தன் காதலன் சந்தோஷமாக இருக்கவேண்டு மென்பதே அவள் கோரிக்கை.

குஸ்ரூ சிறை நீங்கித் தனக்கு உரிய ஸ்தானத்தை அடைந்தால், அவளால் முன்போல அவனுடன் வாழ முடியாது என்பதை நன்கு அறிவாள். அவன் அரச பதவியைப் பெற்றானாகில் தான் அரசி ஆகமுடியாது என்பதையும் அவள் அறிவாள். ஆம்; அவள் பழைய படி, பணிப் பெண்ணாகவே வேண்டும். அரசபோகத்தி

லிருக்கும் அவனுடன் ஒரு நாள்கூடச் சேர்ந்து வாழ முடியாது. எனினும் தன் காதலன் அன்பு உள்ள வரையில் எந்த நிலையில் எப்படி யிருந்தால் என்ன என்றே அவள் நினைத்தாள்.

தான் அப்போது காதலனிடம் யாசிப்பது நிறை வேறினால் அது பிறகு தனக்கே தீங்கை விளைவிக்கும் என்பதை அறிந்தே அவள் வேண்டினாள். அவள் வேண்டியதுதான் என்ன? குஸ்ரு தன் தகப்பன் ஜஹாங்கீர் - இல்லை. அவனை ஆட்டுவித்த பேகம் நூர் ஜஹான் - பார்த்து நிச்சயம் செய்த பெண்ணை, அரசிளங்குமரியை மணக்கவேண்டு மென்பதேயாகும். ராஜகுமாரனோ அதற்குச் சிறிதும் செவிசாய்க்கவில்லை. தன் காதற்கிழத்தி, பணிப்பெண் ஒருத்தியே போதும் என்று எண்ணினான். இதனால் அவனுக்கும் அரண் மனையில் உள்ளவர்களுக்கும் நேர்ந்த கெடுதல்கள் கொஞ்சம் அல்ல.

ஜஹாங்கீர் திடசித்தம் வாய்ந்தவன் அல்ல; எடுப் பார் கைப்பிள்ளையாகவே விளங்கினான். பட்டத்தரசி பேகம் நூர் ஜஹானே அவனை ஆட்டிவந்தாள். ராஜ்யத் தின் சர்வாதிகாரத்தையும் அவளே வகித்திருந்தாள். ஆடம்பரத்திலும் அதிகாரம் செய்வதிலும் மிகுந்த ஆசைகொண்டவள். நூர் ஜஹானைத் தன் வாழ்க்கை யின் பிற்பகுதியில் மணந்துகொண்ட ஜஹாங்கீரும் அவள் மையலில் மயங்கிக் கிடந்தான். அது மட்டு மன்று; சதா ஷர்பத்தையும், மதுவையும் உண்டு உண்மையிலேயே மயங்கிக் கிடந்தான். வயதும் ஆகி விட்டது. உடலிலும் ஓர் ஆட்டம் கண்டது. நூர் ஜஹானும் இதைக் கண்டு நடுக்குற்றாள். அவளை அதிகாரப்பேய் நன்கு கைப்பற்றி யிருந்தது. நூர்

ஜஹானுக்கு உடல் வலிமை சிறிதும் குன்றவில்லை. பிறரை மேய்த்து ஆளுவதிலேயே பழக்கப்பட்ட அவள் ஒரு சர்வாதிகாரியாகவே எப்பொழுதும் விளங்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அரசன் ஜஹாங்கீர் எந்த க்ஷணத்திலும் இறந்துவிடக் கூடும். அவன் அந்தியகாலத்திற்குப் பிறகு அவள் முன்போல ஆதிக்கம் செலுத்த முடியுமா? அவளுடைய ஆட்டம் எல்லாம் ஒடுங்கிப் போக வேண்டியதுதானே? அதைத்தான் அவள் விரும்பவில்லை, அவள் தன் ஆயுளில் அதிகாரத்தை இழக்கக்கூடாது என்றே தீர்மானித்தாள்.

அதற்குத் தகுந்த மார்க்கத்தைத் தேடினாள் அரசி. பாதுஷாவுக்குப் பிறகு அரசனாக வருபவன் அவளுக்கு அடங்கி நடப்பவனாக இருக்கவேண்டுமே! ஒன்று அவன் ஜஹாங்கீரைப்போலச் சபல புத்தியுள்ளவனாக இருக்கவேண்டும், அல்லது அவன் நூர் ஜஹானுக்கு ஏதோ ஒருவிதத்தில் கட்டுப்பட்டவனாக இருத்தல் வேண்டும்.

நூர் ஜஹான் கூரிய புத்தி வாய்ந்தவள். சபல புத்தியுள்ளவன் அரசனாக வந்தால் அவன் எப்பொழுதும் தனக்கு அடங்கியே நடப்பானா என்பதையும் சந்தேகித்தாள். அன்றி ஒரு ஸாம்ராஜ்யத்தைக் கட்டி ஆள மிக்க சாமர்த்தியம் வாய்ந்தவனே அப்போது தேவை என்று எண்ணினாள். அதற்குத் தகுந்தவன் யார்? அவனைத் தேடிப் பிடித்துத் தனக்குக் கட்டுப்பட்டவனாகச் செய்துகொள்ள நினைத்தாள்.

அவளுடைய நாட்டம் ஜஹாங்கீரின் மூத்த பிள்ளை குஸ்ரூவின்மீது விழுந்தது. அவன் ஸாம்ராஜ்யத்தின் அதிபதியாக வருவதற்குத் தக்க யோக்கியதை வாய்ந்தவன். ராஜபுத்திர வம்சத்து இளவரசி மான்பாய்

வயிற்றில் பிறந்த அவனும் அவர்களைப் போன்று பெரு வீரம் படைத்திருந்தான். குடிமக்களும் அவனைப் பெரிதும் போற்றிவந்தார்கள். அவனைத் தன் மாப்பிள்ளையாக அவள் வரித்தாள். தன் முதல் புருஷன் ஷேர் ஆப்கனுக்குத் தன்னிடம் பிறந்த பெண்ணை, லாடிலி பேகம் என்பவளை, அவனுக்கு மணம் செய்து கொடுக்க எண்ணினாள்.

ஆனால் இதற்கும் இடையூறு ஒன்று இருந்தது. ஜஹாங்கீர் குஸ்ருவை ஒருவாறு வெறுத்து வந்தான். அதற்குக் காரணம் அவளே. குஸ்ரு இளமைப் பருவத்தில் ஸாம்ராஜ்யாதிபதியாக ஆவதற்குத் தகுதி உடையவனாகவே வளர்க்கப்பட்டான். அவன் குழந்தை உள்ளத்தில் ராஜ்ய ஆசை நன்கு வேரூன்றிவிட்டது. அதனால் அவன் ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்தவுடனே கிளர்ச்சி செய்துபார்த்தான்; பலிக்கவில்லை. முடிவில் பிடித்துச் சிறையிலிடப்பட்டான்.

மொகலாயர்களுக்குள் இது பிரமாதமல்ல. ஜஹாங்கீரும் தன் தந்தை அக்பர் காலத்தில் இவ்விதம் அதிக்கிரமித்தவன்தான். ஆயினும் என்ன? தந்தையும் மகனும் பின்னால் கூடிவிடவில்லையா? அவ்வாறே குஸ்ருவும் சிறிது காலத்தில் விடுதலையடைந்து தந்தையுடன் கூடிவிடுவான் என்றே எல்லோரும் எண்ணினார்கள். அந்த எண்ணம் வீணாயிற்று. அரசன் அவ்விதம் செய்யாவண்ணம் நூர் ஜஹானே தடுத்துவந்தாள்.

அந்தக் காலத்தில் குஸ்ருவைக் கண்டால் அவளுக்கு நடுக்கம், எங்கே அவன் மன்னன் ஆதரவைப் பெற்றுத் தனக்குப் போட்டியாக வந்துவிடுவானோ என்று பயந்தாள். அதற்காகவே அவள் எப்பொழுதும் மன்னன் மனத்தைக் கலைத்துவந்தாள். அரசனும் தன் பிள்ளை

யைத் தன் ஜன்ம விரோதியாகவே, துரோகியாகவே, பாவித்தான்.

இது அதனோடு நின்றுவிடவில்லை; அந்தப்புரத்திற்குள்ளும் ஒரு பிளவை உண்டாக்கியது. அந்தப்புரத்தவர்கள் குஸ்ருவை விடுதலை செய்யும்படி மன்னனை வேண்டுவார்கள். சபலபுத்தியுள்ள மன்னன் அவர்கள் எதிரில் ஒப்புக்கொள்ளுவான். பினனுல் நூர் ஜஹானைக் கண்டதும் அது மாறிவிடும். பழையபடி கல்மனம் உடையவனாகத் திரும்பிவிடுவான். அதனால் அந்தப்புரத்தில் உள்ளவர்கள் நூர் ஜஹானை வெறுத்து வந்தார்கள்,

நூர் ஜஹான் தன்னுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றிப் பயப்படுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அவளுடைய சகோதரன் ஆஷப் கான்; அவளுடைய செய்கைகளுக்கும் உற்ற துணைவனாக இருந்தவன்; அவனுக்கும் சிங்காதனத்தின் மீது நாட்டம் விழுந்தது.

இவ்விதமான நிலையில் நான்கு புறங்களிலும் விரோதிகளால் சூழப்பட்டு நூர் ஜஹான் தத்தளித்தாள், தனக்கு உதவக்கூடியவன் குஸ்ரு ஒருவனே என்று நிச்சயித்தாள், ஆகவே எப்படியாவது அவனைத்திருப்திசெய்து விடுவதென்று தீர்மானித்தாள். அவனைச் சிறையில் சென்று பார்த்தாள்; ஆசை வார்த்தைகள் பல கூறினாள்.

“கண்ணே, நானே நேரில் வந்து உன்னிடம் யாசிக்கிறேனே; டில்லி பாதுஷாவின் பிரிய தேவி, மொகலாய ஸ்ாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி என்ற பதவிக்காக இல்லாவிடினும் உன் தாயார் என்பதற்காகவாவது நீ ஒப்புக்கொள்ள மாட்டாயா?”

" தாயே, தாங்கள் வேறு எதைச் செய்யச் சொன்னாலும் நான் முடித்துவைக்கச் சித்தமாக இருக்கிறேன். அதைமட்டும் தாங்கள் வற்புறுத்த வேண்டாம்."

அரசி அந்த மறுப்பைச் செவியில் ஏற்றுக்கொள்ளவில்லை. தன் அழகு, மையல், வசீகரணசக்தி முழுவதையும் காட்டி அவனைத் தன் வலையில் இழுக்க எண்ணினாள்.

சட்டென்று தான் போர்த்தியிருந்த மேல் போர்வையை எடுத்து அப்பால் எறிந்தாள். குஸ்ரூவின்முன் மண்டியிட்டு உட்கார்ந்தாள், அப்போது அவள் உண்மையில் தன் பெயருக்கேற்ப 'ஜகஜ்ஜோதி'யாகவே விளங்கினாள். அந்த ஒளியில் மயங்கித் தன் மனநிலையை இழக்காமல் முன்னம் தீர்மானித்தபடியே நடப்பதற்கு அசாதாரணமான திடசித்தம் வாய்ந்தவனால் அன்றி வேறு யாராலும் ஆகாது.

அவ்விருவரும் ஏறக்குறைய ஒரே வயதை உடையவர்கள் என்று சொல்லலாம். வனப்பிலும் தேகக்கட்டிலும் ஒருவருக்கொருவர் சளைத்தவரல்ல.

அவர்கள் இருந்த நிலையைப் பார்த்தவர்களுக்கு அவள் குஸ்ரூவிடம் யாசிப்பது தன் மகளை உத்தேசித்தா அல்லது தனக்காகவேதானோ என்ற ஸந்தேகங்கூட ஏற்பட்டிருக்கலாம். எவ்விதமாயினும் குஸ்ரூ தன் வலையில் சிக்கவேண்டும் என்பது ஒன்றே அவள் நோக்கம்.

குஸ்ரூ தான் சொன்னபடி கேட்பதானால், அவனை உடனே விடுதலைசெய்து தர்பாரில் வரவேற்க ஏற்பாடு செய்வதாகக் கூறினாள் நூர் ஜஹான். அதிகம் சொல்லுவானேன் ? அவனை இளவரசனாக்குவதாக வாக்குத்தத்தம் செய்தாள்.

ஆனால் குஸ்ரூவோ மறுத்துவிட்டான். லாடிலி பேகத்தை மணப்பது என்பதைக் கனவிலும் கருத

முடியாது என்று நிச்சயமாகக் கூறிவிட்டான். அவன் மொகலாயனுயினும் நூற்றுக்கணக்கான மனைவிகளை யும், காமக்கிழத்திகளையும் அந்தப்புரத்தில் வைத்திருக் கும் ராஜகுமாரர்கள் வகுப்பைச் சேர்ந்தவன் அல்லன். தன்னிடம் ஆழ்ந்த காதலைச் செலுத்தும் பணிப் பெண்ணைக் கைவிட அவன் இஷ்டப்படவில்லை. அவள் இல்லாவிடில் அவனுக்கு உலகம் ஒரு சூனியமே; வாழ்க்கை ரஸிக்காது; அவளுல் உயிர் வாழவும் முடியாது.

தன் விடுதலையை உத்தேசித்து நூர் ஜஹான் பெண்ணை அவன் மணக்கவும் இச்சை கொள்ளவில்லை. லாடிலி பேகத்தை மணந்தபிறகு அந்த அடிமைப் பெண்ணுடன் காதல் வாழ்க்கை நடத்துவது அசாத்தி யம் என்பதை அவன் நன்கு அறிவான்.

குஸ்ரூவின் உள்ளத்தை நூர் ஜஹான் உணர்ந்து கொண்டாள். அடிமைப்பெண் இருக்கும் வரையில் ராஜகுமாரன் அவள் பெண்ணை மணக்க இசையமாட் டான். அதற்குத் தகுந்த உபாயம் அந்த அடிமையை அப்புறப்படுத்திவிட வேண்டியதுதான். எப்படி? என்ன செய்வது? அதைச் சொல்லுவதற்கும் மனம் கூசுகிறது. அவளை இக்கர்ம பூமியினின்றும் போக பூமிக்கு அனுப்பிட வேண்டியது. ஆம்; அவளைக் கொன்று விடுவதுதான்.

நூர் ஜஹானின் இந்தச் சூழ்ச்சிகள் எல்லாம் குஸ்ரூவுக்குத் தெரியா. அவள் இவ்வளவு இழிவாக நடந்துகொள்ளுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அரண்மனை ரகசியங்களை எவ்வளவு நாள் மூடிவைக்க முடியும்? அவை கொஞ்சம் கொஞ்சமாகக்

காற்றுவாட்டத்தில் பறக்க ஆரம்பித்தன. சிறைச்சாலைக் கதவுகளையும் தாண்டி அவன் காதில் விழுந்தன.

அவ்வளவுதான். வேதாந்தத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்திருந்த அவனுக்கு உலகவாழ்க்கையிலிருந்த சிறிதளவு பந்தமும் அறுந்துவிட்டது. முகம்மதியனாயினும் குஸ்ரூ ஹிந்து தர்மத்தின் நோக்கங்களையே கொண்டவன். அவன் உபநிஷத்துக்கள், பகவத்கீதை முதலிய நூல்களை நன்றாகப் படித்து அனுபவித்தவன். உலக பந்தத்தையே வெறுத்துவந்த அவனுக்கு வேறு என்ன வேண்டியிருக்கிறது? முற்றும் துறந்த துறவியாகிவிட்டான். அவன் உடல் சிறைப் பட்டுத்தான் இருந்தது. எனினும் அவன் அதைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. வாழ்க்கையே ஒரு பாரமாகத்தான் இருந்தது அவனுக்கு.

குஸ்ரூ அதற்குப் பிறகு அதிக நாள் உயிர் வாழவில்லை. பின்னால் அரசு கட்டில் ஏறிய அவன் தம்பி ஷாஜஹான், அப்பொழுது குர்ரம் என்று அழைககப் பட்டவன், அவனைத் தக்ஷிணத்துக்கு இழுத்துச்சென்று தாய் தந்தையர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் கொலை செய்துவிட்டான்.

வெற்றி யாருக்கு?

"சக்கரவர்த்தி அவர்கள் முகம் என்னவோ போலிருக்கிறதே; ஏன்?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"இல்லை. முகத்தில் முன்னிருந்த பொலிவு காணப் படவில்லை."

"இப்பொழுதுதான் படுக்கையினின்றும் எழுந் தேன்; இன்னும் முகம் கழுவி உடம்பு குளிக்கவில்லை. அதனால் ஏதாவது அப்படித் தோன்றலாம்."

"சக்கரவர்த்தி அவர்கள் என்னை மன்னிக்கவேண் டும். நான் தங்களுடன் சென்ற ஆறு மாத காலமாகப் பழகிவருகிறேன். பல சமயங்களில் அகால வேளைகளி லும் தங்களுடன் தங்கியிருக்கிறேன். ஆயினும் தங்களை இப்படிப் பார்த்ததில்லை."

"ஏன், நான் எப்படி இருக்கிறேன்? எப்பொழுதும் போலத்தானே?"

"இல்லை, தங்கள் முகம் முன்போலச் சிவப்பாக இல்லை; வெளுத்திருக்கிறது."

"இயற்கையின் வேறுபாடுதான். இந்து தேசத்தில் சூரியன் உக்கிரமாகக் கொளுத்திவந்தான். அதற்குப் பழக்கப்படாத என்போன்றவர்களுக்கு, அது தாங்க வில்லை. இயற்கையாகவே சிவந்த உடம்பு, வெயில் தாங்காமல் கோவைப் பழம்போலச் சிவந்துவிட்டது. இந்துதேசத்தை விட்டு மலைப்பிரதேசத்திற்கு வந்து விட்டோம். பாரசீகத்துள் நுழையப்போகிறோம். மலைச்

சிகரங்களுக் கிடையில் வீசும் குளிர்ந்த காற்று உடம்பில் பட்டு, ஓர் இன்பத்தை உண்டாக்கி வருகின்றது. அதனால் இந்தச் சிவப்பு மாறிவருகிறது. இதுதானே? என்னவோ பிரமாதபடுத்துகிருயே ?"

"வைத்தியத் தொழில் நான் இன்று நேற்றுச் செய்பவனல்ல. எங்கள் வமிசத்தவர்கள் தலைமுறை தலைமுறையாக வைத்தியம் செய்பவர்களே. எனக்கு இப்பொழுது அறுபது வயதாகிறது. சென்ற நாற்பது வருஷங்களாக நானும் வைத்தியம் செய்துவருகிறேன். ஒருவர் முகத்தைப் பார்த்தே அவருக்கு வைத்தியம் செய்வதில் நாங்கள் பெயர் பெற்றவர்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள்."

"சரி, அப்படியானல் நீதான் சொல். எனக்கு என்ன செய்கிறது என்று, என்னை ஏன் கேட்கிருய் ?"

"உங்கள் கண்ணில் ஒரு சுழல் தோன்றுகிறது. அதைச் சுற்றிலும் சிறு கோடுகளும் காணப்படுகின்றன. ராத்திரி நீங்கள் சரியாகத் தூங்கவில்லை."

இதைக் கேட்டதும் மன்னன் 'ஹா ஹா' என்று உரக்கச் சிரித்தான்.

"ராத்திரி பிணம்போலத் தூங்கினேன். படுக்கையில் படுத்துக் கண்களை மூடியதுதான் தெரியும். அதற்குப் பிறகு இப்பொழுதுதான் எழுந்திருந்தேன். இதற்கு மத்தியில் என்மீது யானையை விரட்டியிருந்தாலும் நான் விழித்திருக்கமாட்டேன்."

வைத்தியன் சிறிது நேரம் யோசித்தான்.

"தாங்கள் ராத்திரி எப்பொழுது படுக்கைக்குச் சென்றீர்கள் ?"

"ஏன் ? இரண்டாம் ஜாம முடிவில்."

"அதுதான் காரணம். தாங்கள் இரவு முற்பகுதி முழுவதும் கண் விழித்திருந்தீர்கள். அத்துடன்......... மதுபானமும்......ஸ்திரீ சல்லாபமும்......இருந்திருக்க வேண்டும்........."

"சீ! வாயை மூடு ; அதிகம் பேசாதே."

"என்னை மன்னிக்கவேண்டும். ராஜ வைத்திய னுடைய கடமைகளுள் இதுவும் ஒன்று. அதனாலே தான் தங்களுக்குத் தெரிவிக்கிறேன்..............அது தங்களுக்கு அயர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அந்த அயர்ச்சியாலேதான் தலை கால் தெரியாமல் நித்திரை செய்திருக்கவேண்டும் ; தங்கள் உடலில் ஒருவிதத் தளர்ச்சியும் இப்பொழுது தென்படுகிறது......."

சக்கரவர்த்திக்குப் பெருங்கோபம் வந்துவிட்டது. கண்களில் தீக்கனல் பறந்தது. பற்களை நறநறவென்று கடித்தான். பேசுவதற்கு நா எழவில்லை.

அவன் வைத்தியனைச் சிறிது நேரம் விழித்துப் பார்த்தான். அவ்வளவுதான். அவனுக்குத் தலை சுற்றி யது. ஒன்றும் புரியவில்லை. உடல் தளர்ந்திருந்த நிலையில் பிரமாதமாக உண்டான கோபத்தால், அவனுடைய ரத்தம் கொதிப்பை அடைந்தது. மூளை குழம்பியது. எதையும் செய்யச் சக்தியற்றவனாகப் படுக்கையில் சாய்ந்தான்.

ஏவலாளர்கள் ஓடோடியும் வந்தனர், அவனை ஆச் வாசப்படுத்த. ஒருவன் அவனைத் தூக்கி உட்கார வைத்தான் ; மற்றவன் பக்கத்தில் பல தலையணைகளை முட்டுக்கொடுத்துத் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

வைத்தியனுக்கு முதலில் உடல் 'வெலவெல'த்து விட்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து தன் கூடாரத்துக்கு ஓட்டமாக ஓடினான். இரண்டு

கிண்ணங்களில் ஏதோ மருந்தை ஊற்றிக்கொண்டு திரும்பிவந்தான்.

அப்பொழுதும் ஏவலாளர்கள் சக்கரவர்த்திக்குச் சைத்தியோபசாரங்கள் செய்து கொண்டிருந்தார்கள். அவனுடைய மயக்கம் தீரவில்லை. குளிர்ந்த தண்ணீரை வாரி முகத்தில் அடித்து விசிறிக்கொண்டிருந்தார்கள்.

வைத்தியன் சக்கரவர்த்தியின் தாவாய்க் கட்டையைத் தன் இடது கையால் பிடித்து அமுக்கிப் பற்களை நீக்கி, தான் கொண்டுவந்திருந்த கிண்ணத்தை அந்த இடுக்கில் கொடுத்தான். அதிலிருந்த பானதத்தைப் பருகும்படி மன்னனைக் கெஞ்சும் குரலில் வேண்டிக் கொண்டான்.

மருந்தில் கொஞ்சம் உள்ளே சென்றதும் மன்னன் களை தீர்ந்தது. சிறிது கண் விழித்துப் பார்த்தான். உரத்த குரலில், "கொண்டா சாராயத்தை" என்று உத்தரவிட்டான்.

வேலைக்காரன் ஒருவன் வெளியே போகத் திரும்பினான். ஆயினும் அவன் வைத்தியன் முகத்தைக் கண்டதும் அப்படியே நின்றுவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வெளியே நழுவிவிட்டான்.

வைத்தியன் சக்கரவர்த்தியைப் பலவிதமாகக் கெஞ்சினான், சாராயத்தைச் சாப்பிடவேண்டாம் என்று. "அதற்குப் பதிலாக இந்தப் பானகத்தைச் சாப்பிடுங்கள். இதிலும் மது கலந்திருக்கிறது. ஆயினும் அதில் உள்ள விஷம் எடுக்கப்பட்டுவிட்டது. ஹிமாலயத்தில் உள்ள பல மூலிகைகளைக்கொண்டு தங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. ஒருவேளை சாப்பிட்டாலே போதும். உங்கள்

O 7 3N5U5J
N46

உடலில் காணப்படும் தளர்ச்சி பறந்துவிடும்" என்றெல்லாம் வேண்டிக்கொண்டான்.

சக்கரவர்த்திக்கு அன்றைப் பகல் பொழுது முழுவதும் இருக்கையே கொள்ளவில்லை. ஜுரம் வந்துவிட்டது ; உடல் நெருப்புப் பறக்கச் சுட்டது. அதன் பயனாக உடலில் மிகுந்த தளர்ச்சியும் மனச்சோர்வும் உண்டாயின. எதிரில் வந்தவர்கள்மீது எல்லாம் எரிந்து விழுந்தான்.

அவன் பகற்பொழுது முழுவதையும் வைத்தியன் தயாரித்த பானகத்தையும் சாராயத்தையும் மாறிமாறிக் குடித்துக் கழித்தான். எப்பொழுது சூரியன் சாயப் போகிறான் என்பதை எதிர்பார்த்திருந்தான். அந்திப் பொழுதில் வீசும் குளிர்ந்த காற்று அவன் உடல் தாபத்தைத் தணிப்பதுடன் மனத்திற்கு ஒரு மாறுதலையும் உண்டுபண்ணுமன்றோ? அன்றி, தூர்த்தர்களும் பேயும் நடமாடும் இராக்காலத்தைக் கண்டால் காமாந்தகர்களுக்குக் கொண்டாட்டந்தானே ?

சக்கரவர்த்தி தன் காலம் முழுவதையும் மதுவையுண்டு மங்கையரிடம் இன்பம் நுகர்வதில் செலவிட்டவன். அவன் அங்ஙனம் இருந்தது கிரேக்க தேசத்தில் மட்டும் அல்ல ; வெற்றிகொள்ளப் படையெடுத்துச் சென்ற பாரசீகம், இந்தியா முதலிய தேசங்களிலும் அவன் வாழ்க்கை அவ்விதமே நடந்தேறியது. பாசறை என்ற வித்தியாசங்கூடக் கிடையாது.

வெற்றிகொண்ட தேசங்களின் பெண்மக்களில் அழகானவர்கள் எல்லாருடனும் கூடி அவன் தன் வேட்கையைத் தணித்துக்கொண்டான். அவர்கள் கற்பை அழித்தான். படைத்தலைவர்களையும் வீரர்களையும் சிறிதும் தடுக்கவில்லை. அவர்களும் 'மேய்வதை' ஒருவிதமாக

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 105233 EGMORE MADRAS

அங்கீகரித்து வந்தான். அவர்களுள் யாராவது, ஒரு பெண்ணைத் தன் மனைவியாக முறைப்படி ஏற்றுக் கொள்ள விரும்பினால், அவனுக்கு வேண்டிய ஸௌகரி யங்களை அளித்துவந்தான். கிழக்கும் மேற்கும் ஒன்று சேர விரும்பினன்போலும்!

பொழுது சாய்ந்தது. உலகத்தை இருள் கவ்விக் கொண்டது. அலெக்ஜாந்தர் மனத்தையும் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

அவன், முன்னர் இரவுப் பொழுதை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தானே அவ்வளவு தூரம் வெறுத்தான் இப்போது. பெண்களுடன் கூடி இன்பம் அனுபவிக்கவேண்டிய மனச் சந்துஷ்டியையும், உடல் வலிமையையும் இழந்த அவன் அதை வெறுப்பது இயற்கைதானே?

தேகத்தில் வலிமை குன்றி, தளர்ச்சி மேலிட்ட காலத்தில்தான் ஒவ்வொருவனும் தான் முன்பு செய்த பாப கிருத்தியங்களுக்காகப் பச்சாத்தாபப் படுவான். அப்பொழுதுதான் அவன் மனக்கண்ணுகிய திரையின் மீது அவனுடைய செய்கை ஒவ்வொன்றும் பளிச் சென்று தெரியும். அதேபோலத்தான் அலெக்ஜாந்தர் மனத்திலும், அன்றைத் தினம் பழைய நிகழ்ச்சிகள் யாவும் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றின.

ஆம். அவனுடைய தற்போதைய நிலைக்கு அவன் தான் பொறுப்பாளி. அவன் தன் குரு ஸாக்ரடீஸ் கூறிய புத்திமதிகளைப் பின்பற்றி நடந்திருந்தால், இவ்விதம் நேர்ந்திருக்காதே?

கிரேக்க தேசத்தின் அறிஞரான ஸாக்ரடீஸ் அலெக்ஜாந்தரைக் குழந்தைப் பருவமுதல் அறிவார்.

அவர்தாம் அரசகுமாரனைத் தந்தையின் ஸ்தானத்தி லிருந்து வளர்த்தவர். எப்பொழுதும் அவனுடைய க்ஷேமத்தையே கோரினவர்.

"குழந்தாய், நான் கூறியவற்றை நீ கட்டாயம் அனுஷ்டித்துத்தான் ஆகவேண்டும். அதில் சிறிதும் தவறக்கூடாது. அவற்றுள் முக்கியமாக ஹிந்துஸ்தானத் திலே நீ வெற்றிகொள்ளும் மன்னர்கள் காணிக்கையாக அளிக்கும் கன்னிகைகளை மட்டும் ஏற்றுக்கொள்ளாதே. அவர்களை ஏற்றுக்கொண்டாலும் ஒருகாலும் அவர்க ளுடன் இன்பம் அனுபவிக்காதே. ஆணையிட்டுக் கூறு கிறேன். அந்தப் பெண்களை நீ தொடக்கூடாது. இல்லை யேல், உன் ஆயுள் முடிவுகாலம் வந்துவிட்டது என்று எண்ணிக்கொள்."

அலெக்ஜாந்தர் தன்னுடைய திக்குவிஜய யாத் திரைக்குப் புறப்படுவதற்கு முன்னால் ஸாக்ரடீஸ் அவ னுக்கு இவ்விதம் பல உபதேசங்களைச் செய்தார்.

'ஸாக்ரடீஸ் கூறியபடி அவன், புருஷோத்தமன் காணிக்கை செலுத்திய அந்த ஸர்வாங்க ஸௌந்தரி, விஷகன்னிகையாக இருப்பாளா?'

இச்சந்தேகம் மன்னன் மனத்தை அலைக்க ஆரம் பித்துவிட்டது. அதனை உடனே தீர்த்துக்கொள்ள விரும்பினான்.

"அழைத்துவா அந்த வைத்தியனை" என்று ஒரு வேலையாளைக் கூப்பிட்டு உத்தரவிட்டான்.

வைத்தியனும் வந்தான். சக்கரவர்த்தி சக்தியிழந்து படுக்கையின்மீது விழுந்து கிடந்தான். தன் உடல் வலிமை எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து அதன் பலத்தால் எழுந்து உட்கார்ந்தான்.

"வைத்தியரே, உம்முடன் வந்த பெண்ணைப்பற்றி எல்லோரும் என்னவோ சொல்லுகிறார்களே, அது வாஸ்தவந்தானா ?"

வைத்தியன் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. திடீரென்று சக்கரவர்த்தி இவ்விதம் கேட்டதும் அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை. சற்று அப்படியே உட்கார்ந்திருந்தான் ; ஆனால் சும்மா இருக்கவில்லை. சக்கரவர்த்தியின் உடல்நிலையைக் கூர்ந்து கவனித்துவந்தான்.

விஷம் அதன் வேலையைச் செய்துவிட்டது. புருஷோத்தமன் காணிக்கை செலுத்திய பெண்ணுடன்கூடி இன்பம் அனுபவித்த சக்கரவர்த்தி, அவளிடமிருந்து இன்பத்துடன், விஷத்தையும் தன் உடலில் பெற்றுக் கொண்டான். அந்த விஷத்தின் சேஷ்டை வெளிக்குத் தெரியாதவாறு வைத்தியன் பக்கத்திலேயே இருந்து அடிக்கடி மாற்றுக்களைக் கொடுத்துவந்தான். இவ்வளவையும் சக்கரவர்த்தியோ மற்றவர்களோ அறியாதவாறு அவன் செய்து முடித்தான்.

இனி எந்த வைத்தியனும் ஒன்றும் செய்துவிட முடியாது.

"சக்கரவர்த்தி இப்படிக் கேட்டால் நான் மறைக்க முடியுமா ? நீங்கள் கேட்டது வாஸ்தவந்தான். அந்தப் பெண் விஷகன்னிகைதான்."

இதைக் கேட்டதும் அலெக்ஜாந்தருக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. வைத்தியனும் அதனை எளிதில் உணர்ந்து விட்டான் ; வேண்டுமென்றே அதைச் சிறிது சிறிதாக வளர்த்துவந்தான்.

" என்ன, வாஸ்தவமாகவா? உனக்கு எப்பொழுது முதல் இது தெரியும் ? "

" ஆதிநாளிலிருந்தே தெரியும். உண்மையைக் கூறப்போனல், அந்தப் பெண் உடலில் சிறுகச் சிறுக விஷத்தைச் செலுத்தியவனும் நான்தான். "

" உம்......... "

" அதனுல்தான் அந்த விஷத்தின் சேஷ்டை உங்கள் உடலில் தோன்ருதவாறு எனக்கு மாற்றுக்கொடுக்கச் சௌகரியமாக இருந்தது. "

" என்னைக் கொல்லவேண்டி விஷகன்னிகையைப் பரிசளித்த மன்னன் அதை மாற்ற வைத்தியனை அளிப்பானேன் ? "

" முதலிலேயே இந்தச் சந்தேகம் உண்டாகிவிட்டால் விஷத்தைச் சீக்கிரம் போக்கிவிடலாம். இப்பொழுதோ விஷம் உடலில் ஊறிவிட்டது. இனி எந்த வைத்தியனும் உதவ முடியாது. "

சக்கரவர்த்திக்குத் தலைசுழல ஆரம்பித்துவிட்டது. ஒன்றும் புரியவில்லை.

" என்ன ? "

" ஆம், தங்கள் ஆவி உடலிலிருந்து சிறிது நேரத்திற்கெல்லாம் பிரிந்துவிடும். தாங்கள் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்............

" இந்தச் சமயத்தில் நான் தங்களுக்கு ஒன்று ஞாபகமூட்ட விரும்புகிறேன். எங்கள் அரசன் புருஷோத்தமனை வஞ்சகமாக, இரவோடு இரவு ஆற்றைக் கடந்து பின்புறமாக வந்து தாக்கி நீங்கள் வெற்றிகொண்டீர்கள். புருஷோத்தமனும் வஞ்சகமாக இப்பொழுது

தங்களை வெற்றிகொண்டான். உங்களிருவரில் வெற்றி யாருக்கு ?''

சக்கரவர்த்திக்கு அதற்குமேல் கேட்கப் பொறுக்க வில்லை. கத்தியை உருவிக்கொண்டு வைத்தியனைக் கொன்று வீழ்த்த ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அதைச் செய்து முடிக்கவேண்டிய ஆற்றல் அவனிடம் இல்லை ; ஆத்திரத்தால் தள்ளாடிய அவன் அப்படியே குப்புற விழுந்தான். உயிரும் அவன் உடலை விட்டு நீங்கியது.

அநாதைப் பிணம்

1

பொழுது சரியாகப் புலரவில்லை. ஜன நடமாட்டம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆயினும் பிச்சைக்காரர்களுக்கு நேரம் ஆகிவிட்டது. குடுகுடுப்பைக்காரர்களும், பிச்சைக்காரர்களும், பக்கிரிகளும் அதற்கு முன்பே கிளம்பிவிட்டார்கள். அவர்கள் பொழுது புலர்வதற்கு ஒரு ஜாமத்திற்கு முன்பே எழுந்துவிட்டார்கள். தங்களைச் சிங்காரித்துக்கொண்டு வெளியே போக வேண்டாமா?

கோட்டைப் பக்கத்தில் ஏதோவொன்று பாயில் சுருட்டிப் போடப்பட்டிருந்தது. அது அவர்களுக்குப் புதிதல்ல: ஸகஜமான காட்சிதான். சிறைச்சாலையில் இறந்தவர்களுடைய பிரேதங்களை அவ்விதம் பாயில் சுருட்டி வெளியில் எறிந்துவிடுவதை அவர்கள் அறிவார்கள். அவற்றை உறவினர் கண்டு எடுத்துச் சென்று அடக்கம் செய்யும்வரையில் அவை அவ்விடத்திலே கிடக்கும். ஒருவரும் வந்து எடுத்துச்செல்லாத அனாதைப் பிரேதங்கள் அவ்விடத்திலேயே இரண்டு மூன்று நாட்கள் கிடக்கும். அவை நாற்றம் எடுக்க ஆரம்பித்தவுடன் சிறைச்சாலை அதிகாரிகள் அவற்றை எடுத்து அடக்கம் செய்துவிடுவார்கள்.

இந்தப் பாய் மூட்டையைக் கண்ணுற்ற பிச்சைக்காரர்கள் தங்கள் முகங்களை மறுபக்கமாகத் திருப்பிக் கொண்டு காறி உமிழ்ந்துவிட்டுச் சென்றார்கள்.

அவர்கள் அதை நின்று பார்க்கவும் மனங்கொள்ள வில்லை; வேகமாகப் போய்விட்டார்கள். எனினும், விடிந்து பொழுது ஏற ஏற அதற்குப் பக்கத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் சேர்ந்தது. பாயில் சுருட்டப்பட்டிருந்தது யாருடைய பிணம் என்பதை அறிய அவர்களுக்கு ஆவல் ஏற்பட்டது போலும். ஆயினும் யாரும் அதைத் தொட விரும்பவில்லை. அதிகாரிகள் வந்து அதை வெளியில் எடுத்து எல்லோரும் பார்க்கும்படி போடுவதற்காகக் காத்துக்கொண்டிருந் தார்கள்.

விடிந்து ஐந்து நாழிகை ஆயிற்று. நகரக் கொத்தவால் அவ்விடம் வந்து மூட்டையை அவிழ்த்து அந்தப் பிரேதத்தை எல்லோரும் காணும்படி வெளியில் எடுத்தான். அவ்வளவுதான்; அவ்விடத்தில் கூடியிருந் தவர்கள் யாவரும் திடுக்கிட்டனர். அவர்கள் கண்டது என்ன?

அவ்விடத்தில் கூடியிருந்தவர்கள் மிகுந்த ஆத்திரம் அடைந்தார்கள். 'அரசன் இதற்கும் துணிந்துவிட் டானா? அவனைச் சொல்லி என்ன பயன்? அவன் சிறுவன்தானே? இருபதுவயது நிறையாத இளைஞன். அவனை ஆட்டுவித்த மந்திரிகளைத்தானே கூறவேண்டும்? தங்களை முன்னுக்குக் கொணர்ந்தவனையே இவ்விதம் கொன்று எறிந்துவிடக்கூடிய பழிகாரர்களா அவர்கள்?' என்றெல்லாம் எண்ணினார்கள்.

அந்தப் பிணத்தின் உடம்பு முழுவதிலும் கத்திக் காயங்களும் வெட்டுக் காயங்களும் நிறைந்திருந்தன. ஆனால் அவன் அவற்றாலும் இறக்கவில்லை. முகம் கருகி யிருந்தது. அவனைக் கொன்றவர்கள் மர்மஸ்தானத்தை யும் நெஞ்சையும் அழுத்திப் பிசைந்து மூச்சுத் திணற

அடித்து உயிரைப் போக்கினுர்கள் என்பதை அது நன்கு உணர்த்தியது.

2

அவன் ஒரு கைதிதான். அவனைச் சிறை வைத்திருந்தவர்கள் அவனைத் தாங்களாகவே கொல்ல விரும்பவில்லை. அவன் தானுகவே இறந்துவிடவேண்டும் என்று வேண்டினுர்கள். ஆனுல் உலகத்தில் மனிதனுகப் பிறந்த ஒருவன் மற்றொருவன் விரும்பினவுடன் இறந்து விடமாட்டான். வெறும் எண்ணத்தால் முடியும் காரியம் அல்ல அது.

அவன் சிறைவைக்கப்பட்டிருந்த இடம் சாதாரணச் சிறைச்சாலைதான்; கொலை களவு முதலிய குற்றம் செய்தவர்களை அடைத்துவைக்கும் இடந்தான். ஒரு சிறிய அறை; சூரிய வெளிச்சம் கொஞ்சங்கூடப் புகாது; சாமான் ஒன்றும் இல்லை; துடைத்து வைக்கப்பட்ட இடம். கைதிக்குத் தினசரி வேண்டிய சோற்றைக் கொட்டிவைக்க ஓர் உடைந்த மண்சட்டி; கைகால் கழுவத் தண்ணீர்கொண்ட ஒரு மண்தோண்டி; தண்ணீர் குடிப்பதற்கு ஒரு தகரக் குவளை; இவையே அந்த அறையில் இருந்த பண்டங்கள். காவலோ கடுமையானது; பேசுவதற்குத் துணை இல்லை. காவலாளிகளும் அவனுடன் பேசமாட்டார்கள். உயிர் எல்லோருக்கும் வெல்லந்தானே? அவனுடன் பேசியதற்காகத் தன் உயிரை இழக்க எவன்தான் துணிவான்? அவன் அவ்விதம் நடத்தப்படுவதைக் காணக் காவற்காரர்களுக்கும் வருத்தந்தான். ஆயினும் அவர்கள் ரகசியமாகக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு என்ன செய்யக் கூடும்? அவனுக்குக் குர்ஆன் முழுவதும் மனப்பாடம்

உண்டு. அதைத் திருப்பித் திருப்பி ஒப்பித்துப் பாராயணம் செய்து பொழுதுபோக்கி வந்தான்.

சாதாரணக் கைதிகளுக்கு அளிக்கப்பட்ட கூழ் அவனுக்கும் அளிக்கப்பட்டது. அது அவனுக்கு ஒத்துக் கொள்ளவில்லை; சரியாக ஜீர்ணமாகவில்லை. அதனால் வயிற்றுப் போக்கு உண்டாகிவிட்டது. மனிதனுக்கு இயற்கையாக மலஜல பாதைகளைக் கழிப்பதற்கு வேண்டிய சௌகரியமும் இல்லை.

அந்த நிலையில் நாலைந்து நாட்களுக்குத் தண்ணீர் கொடுப்பதையும் நிறுத்திவிட்டார்கள் அவர்கள். அவன் என்ன செய்வான்? தன் உடையைக் கிழித்து உடலைச் சுத்தம் செய்துகொண்டான். இவ்விதம் அவன் துணிகளும் பாழாக்கப்பட்டன. உடல் சுத்தமாக இல்லாத நிலையில் அவன் புனிதமான குர்ஆனை எப்படிப் பாராயணம் செய்வது? ஏகாந்தச் சிறை வாசத்தில் இருந்த சிறு சௌகரியமும் இப்படிப் போய்விட்டது.

3

இவ்விதம் கேவலமாக நடத்தப்படுவதற்கு அவன் என்ன குற்றம் செய்தான்? ஒன்றுமில்லை; அரச குடும்பத்தில் பிறந்த குற்றந்தான்; இந்தியாவின் பெரும் பகுதியை ஏக சக்கராதிபதியாக ஆண்ட அவுரங்கஜேப் பின் கொள் பெயரனாக, பகதூர்ஷாவின் பெயரனாகப் பிறந்த குற்றமே.

முகம்மது பரூக்சியார் என்னும் அவன் இன்றைக்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு மொகலாய ஸாம்ராஜ்யத்தை ஆண்டுவந்தான். தடி எடுத்தவன் தண்டக்காரனாக விளங்கிய அந்தக் காலத்தில் அவன்

சிங்காதனம் ஏறுவதற்கு ஸய்யிது சகோதரர்கள் எனப் படும் இருவர் உதவி செய்தார்கள். அதற்கு வெகுமதி யாக அவர்களுள் அப்துல்கா கான் என்பவன் நவாப் குத்ப்-உல்-முல்க் என்னும் பட்டத்துடன் வஜீர் பதவி யையும், ஹுஸைன் அலி கான் என்னும் மற்றவன் அமீர் உல்-உமாரா என்னும் பட்டத்துடன் முதல்பக்ஷி பதவியையும் கைக்கொண்டனர்.

ஆயினும் மன்னனுக்கும் மந்திரிகளுக்கும் இடை யில் வெகு சீக்கிரம் பிளவு ஏற்பட்டது. ராஜ்யத்தின் ஸர்வாதிகாரமும் ஸய்யிது சகோதரர்கள் கையில் இருந் தது. மன்னனே தனக்கு வேண்டியவர்களுக்கும் முன் னம் தனக்கு உதவி செய்தவர்களுக்கும் எந்தப் பதவியும் அளிக்கச் சக்தி அற்றவனாக இருந்தான். இவ்விதம் வெறும் அலங்காரமாக, ஸய்யிது சகோதரர்கள் சூழ்ச்சிக்கு முத்திரையிடும் பொம்மையாக இருப்பதை அவன் விரும்பவில்லை.

மன்னனுக்கும் மந்திரிகளுக்கும் இடையில் ஏற் பட்ட விரோதம் முற்றியது. பரூக்சியார் ஆறு வருஷங் களே அரசாண்டான். அந்த ஆறு வருஷங்களும் ஆறு யுகங்களாக இருந்தன அவனுக்கு. சிறிது நேரமும் மனம் நிம்மதியற்றவனாக இருந்தான். கடைசியில் அவன் பயந்தபடியே நேர்ந்துவிட்டது.

அரண்மனை வேலையாட்கள் எல்லோரும் வஜீரின் ஆட்கள். மன்னனுக்கு வேண்டியவன் ஒருவனும் இல்லை. அரசன் அரண்மனையிலேயே சிறைப்பட்டவன் போல வாழ்ந்துவந்தான். இந்தப் பொம்மைவாழ்க் கையையும் மந்திரிகள் விரும்பவில்லை. தங்களுக்கு இணங்கி நடக்கக்கூடிய ஒரு சிறுவனைச் சிங்காதனத்தில் அமர்த்த அவர்கள் தீர்மானித்தார்கள்.

1719-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 28-ஆந் தேதி. அன்றைத் தினம் மன்னன் இச்செய்தியை அறிந்தான். வெறிபிடித்தவன்போல ஆடினன். "உலகம் முழுவதையும் வென்று அடக்கிய தைமூரின் ரத்தம் என் உடம்பில் ஓடும்வரையில் இந்தத் துரோகிகளை விடப்போவதில்லை" என்று கர்ஜித்தான். ஆனால் அவன் கட்சியை ஆதரிப்பவர் ஒருவரும் இல்லை. ஸர்வாதிகாரங்களும் ஸய்யிது சகோதரர்கள் வசம் இருந்தன. சிங்காதனம், கிரீடம், பேர் ஆகிய மூன்றுமே மன்னனுக்கு எஞ்சியவை. கடைசியில் ஒன்றும் முடியாமல் அன்று இரவு முழுவதையும் அந்தப்புரத்தில் கழித்தான் மன்னன்.

மன்னன் அந்தப்புரத்தில் சிறைப்பட்டிருந்ததை அரச குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் முக்கிய அதிகாரிகளும் அறிவார்கள். அவனுக்கு உதவி புரியச் செல்வதற்கு யாருக்கும் தைரியமில்லை. ஸய்யிது சகோதரர்கள் யாரை மன்னனாக முடி சூட்டப்போகிறார்கள் என்பதைப்பற்றிய கவலையே அவர்களுக்கு. ஸய்யிது சகோதரர்களோ முதலில் வேறுவிதமாகத் தீர்மானித்தார்கள் ; தாங்களே ராஜ்யத்தைக் கைப்பற்றவேண்டும் என்று எண்ணினார்கள். அவ்விதம் செய்தால் அவர்களுக்குள் யார் அரசனாக முடிசூட்டிக்கொள்வது என்ற தர்க்கம் ஏற்பட்டது. ஒரு வழியிலும் முடிவு ஏற்படவில்லை. கடைசியாக, அந்த எண்ணத்தை விட்டு, அரச குடும்பத்தைச் சேர்ந்த பிடார் தில் என்பவனைச் சிங்காதனம் ஏற்றத் தீர்மானித்தார்கள்.

நடு நிசியில் அவனை அழைத்து வர ஆள் அனுப்பினார்கள். ஆனால் அவன் வீட்டார் அந்த ஆட்களை வீட்டிற்குள் நுழைய விடவில்லை. கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே இருந்துவிட்டார்கள். மந்திரிகள்

கூறியதை அவர்கள் நம்பவில்லை; அரச குடும்பத்தார் எல்லோரையும் கொல்வதற்குச் செய்த சூழ்ச்சி அது என்று எண்ணினார்கள்.

இரவுப் பொழுதுக்குள் ஒருவன் சக்கரவர்த்தியாகச் சிங்காதனம் ஏறி ஆகவேண்டும். இவன் இல்லாவிட்டால் வேறொருவன். அதனால் பக்கத்தில் நின்றிருந்த ரபி உத்தர்ஜத் என்னும் ராஜ குமாரனை இழுத்துச் சென்றார்கள் வேலையாட்கள்.

அவன் சாதாரணத் துணிகளையே அணிந்திருந்தான். ராஜ சின்னமாக ஓர் ஆபரணமும் இல்லை. வஜீர் தன் கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றை எடுத்து அவனுக்குப் போட்டு நள்ளிரவில் அவனைச் சிங்காதனத்தில் ஏற்றினான்.

4

புதிய அரசனுக்கு முடி சூட்டப்பெற்றது. பழைய அரசன் பருக்சியாருக்கு இனி அரண்மனையில் என்ன வேலை? அவனை அவ்விடம் வைத்திருப்பதும் அபாயமே. அவனைச் சிறை செய்ய ஆட்கள் அந்தப்புரத்தைத் தேடிச் சென்றனர்.

பணிப் பெண்கள் உட்பட அந்தப்புரத்தவர் எல்லோரும் மன்னனைச் சூழ்ந்துகொண்டார்கள். வஜீர் ஆட்கள் அவனைத் தொடச் சிறிதும் இடங்கொடுக்கவில்லை அவர்கள். பெண்களில் பலர் கத்தி, கேடயம் தாங்கி யுத்தம் செய்தார்கள். அதில் பலர் இறந்தனர். வேறு பலர் படுகாயம் அடைந்தார்கள். மன்னனைச் சூழ்ந்திருந்தவர் எண்ணிக்கை குறைந்து வந்தது. அரசனும் தன் உயிருக்கு மன்றாடிப் போர் செய்தான்.

வேலையாட்கள் மரியாதையைக் கவனிக்கவில்லை. பெண்மக்களைத் தொட்டுப் பிடித்துத் தள்ளி மன்னனைப்

பிடித்தார்கள். ஒருவன் கையைப் பிடித்துக்கொண் டான். மற்றொருவன் மென்னியைப் பற்றிக்கொண் டான். தலைப்பாகையைத் தட்டிவிட்டான் வேறுஒருவன். காலில் போட்டிருந்த மிதியடி போன இடம் தெரிய வில்லை. அவனை அந்தப்புரத்தினின்றும் வெளியே பிடித்துத் தள்ளிச் சென்றார்கள்.

அடியும் குத்தும் கொடுத்துக்கொண்டே கைதி யைக் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் வஜீர் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தினார்கள். நவாப் (வஜீர்) கைப் பெட்டியைத் திறந்து கண்ணுக்கு மை (ஸுர்மா) தீட்டிக்கொள்ள வைத்திருந்த ஊசியை எடுத்துத் தன் ஏவலாளரிடம் கொடுத்தான். சம்பிரதா யத்துக்கும் சமிக்ஞைகளுக்கும் பெயர் பெற்றது மொகலாய சாம்ராஜ்யம். இந்த ஜாடையை அறிந்த ஏவலாட்கள் பேதை மன்னனைப் பிடித்துக் கீழே தள்ளி னர். அவன் அசையவொட்டாதபடி சில தடியர்கள் அவன் மார்புமீது ஏறி உட்கார்ந்தார்கள். வன்கண்ண னாகிய ஒருவன் அந்த ஊசியைப் பல தடவை அவன் இரு கண்களிலும் பாய்ச்சி முன்னம் சக்கரவர்த்தியாக விளங்கிய அவனைக் கபோதியாக்கினான்.

அரண்மனை சூறையாடப்பட்டது. பணிப் பெண் களையும் காதற் கிழத்திகளையும் மந்திரியைச் சேர்ந்தவர் கள் ஸ்வீகரித்துக் கொண்டார்கள்.

கபோதி சிறைச்சாலையிலும் தன் வாழ்க்கையை அமைதியாகக் கழிக்க முடியவில்லை. சில நாட்களுக் கெல்லாம் புதிய மன்னன் பருக்சியாரிடம் க்ஷேமம் விசாரித்துவரத் தன் ஆளை அனுப்பினான். மன்ன னுடைய மனநிலை அப்பொழுது எப்படி இருந் திருக்கும்!

“ தோட்டக்காரன் பாசாங்கைக் கண்டு மலைக் காதே, ஏ வானம்பாடியே, நானும் இதற்கு முன்பு இந்தத் தோட்டத்தில் கூடுகட்டியிருந்தேன் ” என்ற பொருளைக்கொண்ட செய்யுள் ஒன்றால் தன் பதிலைத் தெரிவித்தான் அவன்.

மன்னன் நரகவாழ்க்கை போன்ற அதனை நடத்துவதையும் மந்திரிகள் காணப் பொறுக்கவில்லை. வியாதியஸ்தனுக்கு இரண்டு வழிகளே உண்டு. ஒன்று வியாதியைப் பொறுத்துக் கொண்டிருக்கவேண்டும் ; மற்றொன்று வியாதியை நிவாரணம் செய்யவேண்டும். வைத்தியம் செய்வதற்கு முற்பட்டுவிட்டால் வியாதிக்கு மூலகாரணத்தையே போக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் குணம் ஏற்படாது. அதனால் மந்திரிகள் பரூக்சியாரைப் பூமியினின்றும் நீக்கிவிட முடிவு செய்தனர். விஷத்தை ஆகாரத்துடன் கலந்து கொடுத்தார்கள். மன்னன் ஆகாரம் சாப்பிட்டால்தானே ? அதனால் அந்த முயற்சி வீணாயிற்று. கடைசியாக அவனைக் கொலைசெய்யும்படி நேர்ந்தது.

5

அரசன் இறந்த செய்தி ஊரெங்கும் காட்டுத்தீப் போலப் பரவியது. அவனுக்கு நேர்ந்த கதிக்கு இரங்கிப் பலர் கண்ணீர் வடித்தனர். பரூக்சியார் டில்லி நகரில் கொலை செய்யப்பட்டதைக் கேட்டு ஆத்திரமடைந்தவர்கள் ஏழைகளும் பக்கிரிகளுமேயாவர். உயர்குடியினரும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் மனவெழுச்சியை வெளியில் காட்ட முடியவில்லை. இரகசியமாகக் கண்ணீர் வடித்தனர். மன்னனுக்கு நேர்ந்த கதி தங்களுக்கும் எப்பொழுது வேண்டுமானாலும் நேரிடக்கூடும் என்றே அவர்கள் பயந்தனர்.

என்ன வருந்தி என்ன பயன்? மாண்டவன் மீளு வானே? வஜீரும் அவனைச் சார்ந்தவர்களும் சவத்தை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். உயிருடன் இருந்தபொழுது ஒருபிடி சோறு கொடுக்கவும் மறுத்த அவர்கள் இறந்தபின் அவன் உடலுக்கு ராஜோபசாரங் களைச் சரிவரச் செய்தனர். சவத்தை எடுத்துச் சென்று அரண்மனை முற்றத்தில் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்க ளைப் பரப்பி அவற்றின்மீது வளர்த்தினார்கள்; வாஸனைத் திரவியங்களைப் பூசினார்கள்; படைவீரர்கள் காவல் புரிந்தனர். பிரமுகர்கள் ஒவ்வொருவராக வந்து சவத் தின் பக்கத்தில் மண்டியிட்டு வணங்கி, இறந்தவன் ஆத்மா சாந்தி யடையுமாறு தொழுது கண்ணீர் வடித்துச் சென்றனர்.

சவம் அடக்கம் செய்யப்படவேண்டிய இடத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. வழியில் இருபுறமும் படைவீரர் அணிவகுத்து நின்றனர். ஊர் வலத்தில் சென்ற யானைகளுக்கும் குதிரைகளுக்கும் கணக்கில்லை. மக்கள் வீட்டுக்கூரைமேலும் மரக்கிளை களிலும் ஏறி அரசனுடைய கடைசி ஊர்வலத்தைத் தரிசித்தார்கள். மன்னன்மீது இருந்த அன்பினால் பெண்மக்கள் பலரும் கோஷாவை விடுத்து வெளியில் வந்து அவன் உடலைப் பார்த்துச் சென்றனர்.

மன்னன் உடலைப் பன்னீரால் கழுவி அடக்கம் செய்தார்கள். சவக்குழிப் ப்க்கத்தில் மட்டும் இருபதி னாயிரம் பேர்களுக்கு அதிகமாகக் கூடியிருந்தனர். அர சாங்கத்திலிருந்து தாராளமாகப் பணம் செலவு செய்யப் பட்டது. சவ அடக்கம் முடிந்த பிறகு, இறந்தவன் ஆத்மா சாந்தியடையப் பக்கிரிகளுக்குக் கொடுக்கச் செப்புக்காசும்ரொட்டித்துண்டும்ஏராளமாகக்கொண்டு

வரப்பட்டிருந்தன. அந்தக் காசையும் ரொட்டியையும் யார் வாங்கிக்கொள்வார்கள்? அரசாங்க ஏவலாளர்கள் அவற்றை வாங்கிப் பக்கிரிகளுக்குக் கொடுக்கப் போன போது பக்கிரிகள் வாங்க மறுத்தனர். சிலர் அவற்றைப் பெற்றுத் திரும்பக் கொடுத்தவன் முகத்திலேயே வீசி எறிந்தார்கள்.

அம்மட்டிலோ! அரசாங்க உத்தியோகஸ்தர்கள், அவர்களைச் சேர்ந்தவர்கள், வஜீருக்கு வேண்டிய பிரமுகர்கள் ஆகியோர்கள் வீடுகளில் பிச்சை எடுப்பதில்லை என்று அந்த ஏழைப் பக்கிரிகள் முடிவுசெய்து கொண்டனர். ஏழை பங்காளனான பரூக்சியார் ஆன்மா சாந்தியடைய அவர்கள் தங்களைப்போன்ற ஏழைகளிடத்திலும் குடிமக்களிடத்திலும் பிச்சை வாங்கி, அன்னதானம் நடத்த ஏற்பாடு செய்தார்கள்.

மன்னன் இறந்த மூன்றும் நாள் அவர்கள் அவன் உடல் கழுவப்பட்ட மேடைக்குப் பக்கத்தில் கூடி ஏராளமான கூட்டத்துக்கு அன்னதானம் செய்தார்கள். தாங்களும் வயிறார உண்டனர். இரவு முழுவதையும் மன்னன் ஞாபகார்த்தமாகக் கொண்டாடினார்கள்.

வஜீருக்கு இதைக் கேட்டதும் அடக்கமுடியாக் கோபம் வந்தது. ஆயினும் என்ன செய்யமுடியும்? குடிமக்களே அஞ்சாது விரோதமாகக் கிளம்பினர்.

அதற்குப் பிறகு வெகுகாலம் டில்லி வீதிகளில் வஜீரும் அவனைச் சேர்ந்தவர்களும் செல்லவே முடியாமல் இருந்தது. அவர்கள் தலையைக் கண்டவுடன் பக்கிரிகள் கூச்சலிட்டுக்கொண்டு அவர்களைத் துரத்தி ஓடுவர்.

அசோகன் துறவு

1

வாழ்க்கையே வெறுப்பாக இருந்தது அவளுக்கு. எதை அடைந்திருந்தாலும் மனம் விரும்பியது கிடைக்கா விட்டால் வாழ்க்கையில் வெறுப்பு, சலிப்பு ஏற்படுவது மனித இயல்பு. அதற்கு ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு இல்லை; இளைஞன் கிழவன் என்ற வித்தியாசமும் இல்லை.

இந்திய நாட்டைத் தருமத்தால் வென்று ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து யவன தேசங்களிலும் புகழ் பரக்க ஆண்டுவந்த அரசனுடைய பிரிய மஹிஷியாக இருப்பவளுக்கு ஒருவிதக் குறைவும் இல்லை. அவள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்துமுடிக்க ஏவலாளர் பலர் காத்திருந்தனர். அம்மட்டிலோ? அவர்கள் அரசியின் விருப்பத்தைக் குறிப்பு அறிந்து முடித்து வந்தனர். பாரத நாடே அவள் பாதத்தில் விழுந்து கிடக்க அவளுக்குச் செல்வத்திலும் குறைவு உண்டோ?

சக்கரவர்த்தி அவள்மேல் மிகுந்த பிரியம் உள்ளவன். பட்டமஹிஷியாக வேறொருத்தி இருந்தும் அவன் சதா சர்வகாலமும் அவள் அரண்மனையிலேயே இருப்பான். அவன் எங்கே சென்றாலும் அவளே உடன் செல்வாள். அவள் இருக்கும் இடங்களில் சக்கரவர்த்தியை நிச்சயம் காணலாம். அவள்மேல் காற்றும் சிறிது கடுமையாக வீசுவதைக்காண மன்னன் மனம் சகியான். அவள் மனத்தைச் சந்தோஷிக்கச் செய்வதிலேயே

கண்ணும் கருத்துமாக இருந்தான். உண்மையில் நாட்டை ஆண்டுவருபவன் மன்னன் அல்லவென்றும், அவளே என்றுங்கூட வதந்தி.

பிறர் கண்டு பொருமை அடையக்கூடியவாறு இவ் விதம் உயர்ந்த நிலையில் இருந்தும் அரசி திஷ்யரக்ஷிதை யின் மனமோ சந்துஷ்டியுடன் இல்லை. வாழ்க்கையே வேப்பங்காயாகக் கசந்தது. அதற்குக் காரணந்தான் என்ன ?

இயற்கையை மாற்றுவது மாந்தர்களுக்கு எளி தல்ல. பருவ சேஷ்டைகளும் அப்படிப்பட்டனவே. மனிதர்களாகப் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொன்றையே லக்ஷிய மாகக் கொண்டிருப்பார்கள். இந்த இயற்கை விதிக்கு மாருக நடப்பவர்கள் மிக அரியர்.

சக்கரவர்த்தி காளைப்பருவத்தைக் கடந்து வெகு காலம் ஆகிவிட்டது. உடல் தளர்ச்சியுற்று நரை கண்டு விட்டது ; கிழவனுகிவிட்டான். வாழ்க்கையின் பருவத் துக்கேற்றபடி அவன் மனம் மரணத்தின் பிற்கால நிலையையே நாடிச் சென்றது. உலக இன்பங்களை அனுபவிப்பதில் உள்ள பற்று நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. இயற்கையின் இந்தச் சக்தியை மாற்றமுடியுமா ?

அரசியோ மடந்தைப் பருவத்தில் இருந்தாள். உடம்பில் ரத்தத் திமிர் நிறைந்திருந்தது. உலக சுகங் கள் முழுவதையும் அனுபவிக்காத அவளுக்கு மரணத் திற்குப்பின் ஏற்படக்கூடிய நிலைமையைப்பற்றிய கவலை ஏது ? உலக வாழ்க்கை தெவிட்ட ஆரம்பித்த பிறகு தானே முக்தியைப்பற்றிக் கவனிப்பார்கள் மாந்தர்கள் ? அரசி விரும்பியது எல்லாம் உலக சுகமே.

சக்கரவர்த்தியோ அரசி விரும்பியவை யாவற்றை யும் அளித்திருந்தான். ஆயினும் என்ன பயன்? அவள் மனத்தைச் சந்தோஷிக்கச் செய்ய முடியவில்லை.

2

இவ்வித நிலையில் இருந்தவன் இன்றைக்குச் சுமார் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பரதகண்டத்தை ஏக சக்கராதிபதியாக ஆண்டுவந்த அசோகன் என்னும் மௌரிய வமிசத்து அரசனுவன். அவன் ஸ்வபாவமாகவே பிறர் கஷ்டப்படுவதைக் காணச் சகியாதவன். அவன் தன் ஆட்சியின் முதலில் கலிங்கதேசத்தின்மீது படையெடுத்துச் சென்றபோது யுத்தத்தில் பலர் மடிந்ததைக் கண்டதும் அவன் உள்ளம் உருகிவிட்டது. அதனுல் அவன் 'இனிமேல் படைகளை நடத்திப் போர் செய்வதில்லை' என்ற விரதத்தைக் கொண்டான்.

அவன் அதனுடன் நிற்கவில்லை. அஹிம்ஸையையே அடிப்படையாகக் கொண்ட புத்த தருமத்தை மேற் கொண்டான். ஸதா ஸர்வகாலமும் பௌத்த பிக்ஷுக் களை உபசரிப்பதில் காலம் போக்கினுன். அவன் அரச னுக இருந்தாலும் ஒரு துறவியைப் போலவே வாழ்ந்து வந்தான்.

அவன் மக்களும் அங்ஙனமே வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் சிலர் ராஜ போகங்களைத் துறந்து தருமோபதேசம் செய்வதை மேற்கொண்டார்கள். மஹிந்தன் என்பவனும், ஸங்கமித்தை என்பவளும், புத்தமதப் பிரசாரம் செய்வதற்காக இலங்கைத் தீவிற்குச் சென்றுர்கள்.

அசோகன் மக்களுள் குணுலன் என்பவனும் ஒருவன். அவன் தன் மூத்த பிள்ளையாதலின் அவன்

துறவியாதற்கு மன்னன் இணங்கவில்லை. அதனால் அவன் தந்தைக்கு உதவியாக உடன் இருந்து அரசாங்கக் காரியங்களைக் கவனித்துவந்தான்.

அந்தக் காலத்தில் குணாலன் நல்ல கட்டிளமைப் பருவத்தில் இருந்தான். நல்ல உயரமும் வாட்ட சாட்டமுமான சரீரத்தை உடையவன். பார்வைக்கு லக்ஷணமாக இருப்பான். சிறிதும் கபடம் அற்றவன்.

ராணியின் மனம் குணாலன்பால் சென்றது. மிருக இச்சைக்குத் தராதரம் இல்லை. குணாலன் எப்பொழுதும் அரசியைப் போலவே மன்னன் சமீபம் இருந்துவந்தா ஞதலால் திஷ்யரக்ஷிதை அவனுடன் நெருங்கிப் பழக நேர்ந்தது. அவள் எப்பொழுதும் குணாலன்பால் அன் புடன் நடந்துவந்தாள். முதலில் அவன் அதைத் தாயின் அன்பு என்று மதித்து மிகவும் போற்றிவந்தான். அதனால் அவன் அவள் மனத்துக்கு உகந்தவாறு நடந்தான்.

ஆயினும் அரசி அவன் நடத்தையை வேறு விதமாகக் கருதினாள். குழந்தை தாயிடம் கொண்டுள்ள அன்பு என்று எண்ணவில்லை. காமாலைக் கண்ண னுக்குக் கண்டவை எல்லாம் மஞ்சளாகவே தோன்றும் அல்லவா ?

இவ்விதமான நிலைமையை விவரித்துக் கூறுவதில் பயன் என்ன? அரசி ஒருநாள் குணாலனிடம் தன் விருப் பத்தைத் தெரிவித்தாள். அவனா அதற்கு இசைபவன் ? அவன் கனவிலும் அவ்விதமாக எண்ணியவன் அல்லன். இம் மாபெரும் பாதகத்துக்கு அவன் உடன்பட மறுத்தான். அரசியின் மனோரதம் உடைந்துவிட்டது.

3

அதற்குப்பிறகு அவர்கள் ஒன்றுசேர்ந்து வாழ்வது கூடுமா? ஒருவரை ஒருவர் பார்ப்பதற்கும் லஜ்ஜைப் படுவர் அன்றோ? அரசிக்கு அவனைக் காணும் போதெல்லாம் அவனது செய்கை மனக்கண்முன் வந்து நிற்கும். அவள் அடைந்த அவமானத்தை - தோல்வியை - நினைவுறுத்தி மனத்தை அலைக்கும். இதைப் பிறர் அறிந்திருப்பாரோ என்ற பயத்தினால் ஸகஜமாக வெளியில் வருவதற்கே உடல் குன்றும். இவ்வித நிலையில் விருப்பு வெறுப்பாக மாறுவது இயற்கையே. அரசிக்குக் குணாலன்மீது தீராப்பகை உண்டாயிற்று.

குணாலன் உயிருடன் இருக்கும் வரையில் அரசிக்கு மனம் சமாதானம் கொள்ளாது. எந்தச் சமயத்திலும் அவள் இரகசியம் வெளிப்பட்டுவிடும். இந்த அவமானத்தினின்றும் தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. குணாலன் பேசமுடியாதபடி செய்துவிடவேண்டும். அவன் இவ்வுலக வாழ்வை நீத்துவிடவேண்டும். இன்றேல் பாடலிபுரத்தினின்றும் வெளிப்பட்டுவிட வேண்டும்.

அரசியின் எண்ணத்துக்குத் தக்க சமயமும் வாய்த்தது. ராஜ்யத்தின் வடமேற்கு எல்லைப்புறத்திலே, தக்ஷசீலத்தில் இருந்த மண்டலாதிபதியின் நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை. மக்கள் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டனர். சக்கரவர்த்தியைத் திருப்தி செய்யவேண்டி மண்டலாதிபதி குடிகளின் மனோபாவத்தை நன்கு அறியாமல் தீவிரமாகப் புத்த மதப் பிரசாரம் செய்துவந்ததே காரணம். எல்லைப்புற மாகாணத்தின் கலகத்தை அடக்குவதற்கு அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒருவனை அனுப்புவதே சரியானவழி என்று

தீர்மானித்தார். ராஜதந்திரம் நன்கு அறிந்த குணா லனைத் தவிர அதற்குத் தகுதி வாய்ந்தவன் ஒருவனும் இல்லை.

அசோகனோ குணாலனைத் தக்ஷசீலம் அனுப்புவதற்கு இஷ்டப்படவில்லை. அவ்விடம் ஏற்பட்ட கலகத்துக்குத் திஷ்ய ரக்ஷிதையின் தூண்டுதலே காரணமாக இருக்குமோ என்றும் அவன் சந்தேகப்பட்டான். அவளுக்கு எப்பொழுதுமே புத்த மதத்தின்மீது விரோ தம் உண்டு. அரசன் புத்தமதத்தைப் பின்பற்றிப் பிக்ஷுக் களைப் போற்ற ஆரம்பித்தமையாலேதான் தான் உலக இன்பங்களை அனுபவிக்க முடியாத நிலை வந்தது என்று அவள் பூரணமாக நம்பிவந்தாள்.

கடைசியாகக் குணாலனைத் தக்ஷசீலத்துக்கு மண்ட லாதிபதியாக அனுப்புவதென்று முடிவுசெய்யப்பட்டது. அவன் புறப்படுமுன்பு மன்னன் அவனைத் தனியாகக் கூப்பிட்டுப் பலவிதமான உபதேசங்களைச் செய்தான். கடைசியில், "குழந்தாய், நீ போகுமிடத்தில் உனக்கு ஏராளமான விரோதிகள் இருக்கிறார்கள். அவர்கள் உன்னைப் பலவிதமாக ஏமாற்றப் பார்ப்பார்கள். அவற் றிற்குச் செவி சாய்க்காதே. என்னிடமிருந்து வந்தவை போன்ற ஸ்ரீமுகங்களைச் சிருஷ்டித்துக் காண்பிப்பார் கள். அவற்றையும் கவனியாதே. உண்மையாக நான் அனுப்பிய ஓலைகளாக இருந்தால் அவற்றில் என் னுடைய பல்லின் முத்திரை இருக்கும். அவற்றைக் கூர்ந்து கவனித்துப் பார்த்த பிறகே அவற்றின்படி நட. தருமம் தலைகாக்கும்" என்று ஆசீர்வதித்து அனுப்பினான்.

4

தக்ஷசீல நகரமெங்கும் ஒரே பரபரப்பு, அரசன் உத்தரவைக் கேட்டவர்கள் எல்லோரும் திகைத்துப் போயினர். மன்னன் இரகசியமாக அவ்விடத்தில் உள்ள மந்திரிக்கு ஓர் உத்தரவு அனுப்பினுன். 'கண்டவுடன் மந்திரி மண்டலாதிபதியான ராஜகுமாரன் குணுலன் கண்களைப் பிடுங்கி நாட்டைவிட்டுத் துரத்திவிடவேண்டும்.' இதுவே அந்த உத்தரவின் ஸாராம்சம். தேவானும் பிரியன் என்றும், தர்ம கீர்த்தி என்றும் புகழ் வாய்ந்த மன்னனு இவ்வுத்தரவை அனுப்பியவன்? இவ்விதம் ஆணையிடுபவனுக்கு எவ்வளவு கொடூர சித்தம் இருக்க வேண்டும்? அரசன் ஆணையைக் கண்ணுற்ற மந்திரி அதை நம்பவில்லை. 'கனவு உலகத்தில் இருக்கிருேமா!' என்று ஐயுற்ருன்.

குணுலன் நாட்டுக்குச் செய்த நன்மைக்குப் பிரதி உபகாரமா இது? அவன் தன் சாமர்த்தியத்தால் கலகத்தை வெகு சீக்கிரம் அடக்கிவிட்டான். அம்மட்டுமா? மக்கள் யாவரும் முன்னைவிட அதிகமாக ராஜ விசுவாசம் உடையவர்கள் ஆயினர். யாவரும் அவனைத் தெய்வமாகவே கொண்டாடினர். அவனை மெச்சிக் கௌரவிப்பதற்குப் பதிலாகக் கண்களைப் பிடுங்கிவிட உத்தரவிட்டால் அதை யார்தாம் சகிக்கக்கூடும்?

மந்திரி வெகுசீக்கிரம் உண்மையை உணர்ந்து கொண்டான்; அரசி திஷ்ய ரக்ஷிதையின் செயலே இது என்பதை நிச்சயமாக அறிந்தான். அதைக் குணுலனிடம் தெரிவித்தான்.

குணுலன் அவ்வுத்தரவை நன்ருகக் கவனித்தான். தந்தையின் பல் முத்திரை அதில் நன்கு இடப்பட்டிருந்தது. அதைக் கண்ட அவன் அவ்வுத்தரவை ஸந்தேகிக்க

மறுத்தான், தந்தைசொல் மிக்க மந்திரமில்லை யன்றோ? மந்திரி மறுத்தால் வேறு ஒருவரும் இல்லையா? அதனால் அவன் தன் மெய்காப்பாளரை விளித்து அவ்வுத்தரவை நிறைவேற்றச் சொன்னான்.

இக்கொடுமையைச் செய்ய யார் உடன்படுவர்? எல்லோரும் மறுத்தனர். "அரசன் ஆணையில் ஏதோ சூது இருக்கிறது. அதனை விசாரிக்கவேண்டும்" என்று யாவரும் ஒருமுகமார வேண்டிக்கொண்டனர். குணாலன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ராஜத் துரோகம் செய்திருந்தால் அன்றோ அஞ்சவேண்டும்? உலகத்தை வெறுத்த அவனா தந்தையைக் கொன்று அரசை அடைய ஆசைப்படுவான்?

அரசன் ஆணையை நிறைவேற்ற ஒருவரும் முன் வராமையால் அவன் தன் கையாலேயே பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கண்களில் செலுத்திப் பார்வையைப் போக்கடித்துக் கொண்டான். அரசி செய்த சூதை அவன் அறிவானோ? மன்னன் ஆணையிட்டது போல ஓலையைத் தயாரித்து அசோகன் தூங்கும் பொழுது அவனுடைய பல் முத்திரையை வஞ்சகமாகப் பெற்று அனுப்பினாள் என்பதை அவன் அறியமாட்டான். அன்றி, அறிந்திருந்தாலும் அதனை நிறைவேற்று வதில் பின்வாங்கி யிருக்கமாட்டான்,

5

அரசன் ஆணைப்படித் தக்ஷசீலமண்டலத்தினின்றும் வெளியேறிய கபோதி குணாலன், பல தேசங்களையும் கடந்து பாடலிபுரத்தை அடைந்தான். எல்லாவற்றையும் துறந்த அவனுடைய ஜீவனத்துக்கு வழியென்ன? பதியையே தெய்வமாகக் கருதும் அவன் மனைவி

பதிவிரதை. அவள் தன் கையைப் பிடித்து நடத்திச் செல்ல, அவன் பாடலிபுரத்தின் வீதிகளில் பாடிக் கொண்டு பிச்சை எடுத்துச் சென்றான். அவர்களுடைய உடைகிழிந்து கந்தலாக விளங்கியது. இக்கோலத்தில் அவர்களை யாரும் அறிந்துகொள்ள முடியாது.

உருக்கமாகக் குணாலன் பாடிச்சென்ற பாட்டுக்களை அசோகன் தன் அரண்மனையில் இருந்தவாறு கேட்க நேர்ந்தது. அந்தப் பாட்டுக்களின் கருத்து அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அந்தக் குரல் அவன் எங்கோ கேட்டிருப்பது போலவே தோன்றியது. எனினும் அது அவன் உடலிலே ஒரு நடுக்கத்தை விளைவித்தது.

பிச்சைக்காரர்களைத் தன்முன் அழைத்து வரும்படி அரசன் கூறினான், அங்கஹீனனை அரசன் காணக் கூடாது என்று பலர் தடுத்தும் அவன் கேட்கவில்லை. உடனே அழைத்துவருமாறு ஆணையிட்டான்.

அவர்களைக் கண்டதும் தன்னை அறியாமலே மன்னன் கண்களில் நீர் ததும்பியது. " என் மகனையும் மருமகளையும்போலவே இவர்கள் காணப்படுகின்றனர். சே! அவர்கள் தக்ஷசீலத்திலன்றோ இருக்கின்றனர்? அன்றி அவர்கள் இவ்வித நிலையில் வருவதற்குக் காரணமில்லையே. ஆதலின் இவர்கள் வேறு யாரோ ? " என்றே அவன் எண்ணினான்.

* * * *

உண்மை வெளியாகிவிட்டது. மன்னனுக்கு ராஜீய விவகாரங்களில் இருந்த சிறு பற்றும் அறுந்து விட்டது. தான் இனி அரசாங்கத்தை நடத்துவது முடியாது எனத் தீர்மானித்தான்.

தகுந்த வைத்தியர்களைக் கொண்டு குணாலனுக்குக் கண் வைத்தியம் செய்து பார்வையைப் பெறும்படி செய்தான். அவனுக்குப் புறப்பார்வை மீட்டும் கிடைத்தது உண்மையே. ஆயினும் என்ன? அவனுடைய நாட்டம் அகப்பார்வையிலேயே இருந்தது. அவன் அரசாங்கத்தை விரும்பவில்லை. துறவறமே மேல் என்று புத்த சங்கத்தில் சேர்ந்துவிட்டான்.

அரசிக்கு நேர்ந்த கதியை நாம் கூறவேண்டியதில்லை. நாட்டு மக்கள் அவளை உயிருடனே கொளுத்திவிட்டனர் என்று கூறுவர்.

மன்னனுக்கு மனம் முறிந்துவிட்டது. ஸாம்ராஜ்யத்தைப் புத்த சங்கத்துக்கு அர்ப்பணம் செய்தான். காஷாயத்தைத் தரித்துப் பௌத்த பிக்ஷுவாக, முப்பத்துமுக்கோடி மக்களுள் ஒருவனாக மறைந்துவிட்டான்.

பறையறைந்த பெண்

“மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி இறந்து போய் விட்டார்.”

இவ்விதம் ஒருவன் நகரின் வீதிகளில் பறையறைந்து வந்தான். அவன் குதிரையின் மீது அமர்ந்து டங்காவைக் கொட்டிச் செய்தியை இரைந்துகூறித் தெரிவித்து வந்தான். குதிரையை வேகமாகச் செலுத்தாமல் ஒவ்வொரு வீதி வழியாகவும் அவன் மெதுவாகச் சென்றுகொண்டிருந்தான்.

இச்செய்தி நகர் எங்கும் ஒரு பெரிய குழப்பத்தை உண்டுபண்ணி விட்டது. ஜனங்கள் இதை எவ்விதம் நம்புவார்கள்? அவன் பறையறைவிப்பதில் சிறிதும் உண்மை இருக்கமுடியாது. எப்படி இருக்க முடியும்? அன்றைத் தினந்தான் சக்கரவர்த்தி வேட்டையினின்றும் திரும்பிவந்தான். அவன் நகரத்திற்குள் நுழைந்து முக்கியமான வீதிகள் வழியாகப் பவனி வந்து அரண்மனையை அடைந்ததைப் பலர் பார்த்திருந்தனர்.

அன்றைத் தினம் காலையில் வஜ்ர சரீரயான அரசனைத் திடகாத்திரமாகப் பார்த்தவர்களிடம் பகலில் ஒருவன் வந்து மன்னன் இறந்துவிட்டான் என்று கூறினல் அவர்கள் அதை நம்புவார்களா? அவர்களுடைய சந்தேகத்தைக் கிளப்புவதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அவ்விதம் தண்டோராப் போட்டுச் சென்றவன் அரசாங்க ஊழியனு? அவனே அதற்கு முன் அந்தப்

பக்கத்தில் கண்டதேயில்லையே! அவன் சர்க்கார் சேவகனுகக் காணப்படவில்லை. அவன் யாரோ புதியவன்.

இவ்விதம் வேற்றுமனிதன் ஒருவன் அரசனுடைய தலைநகரத்துக்கு வந்து இந்தச் செய்தியைப் பரப்புவது எதற்காக? இது உண்மையாக இருக்குமா? பொய்யாக இருக்குமானுல் அதைத் தண்டோராப் போட்டுத் தெரிவிப்பதற்கு அவனுக்கு எவ்வளவு தைரியம் வேண்டும்!

ஆயினும் அவனைக் கூறுவதில் பயனென்ன? அவன் வேலையாள் தானே? அவ்விதம் அவனைப் பறையறைவிக்கச் சொன்னவர்களையன்றோ கவனிக்க வேண்டும்? அவனுக்குச் சேரவேண்டிய கூலியை, இரண்டு மடங்காக, முன்பணமாகக் கொடுத்துவிட்டால் அவனுக்கு என்ன? ஆக்ஷேபணை யில்லாமல் பறையறைந்து விடுகிருன்.

அரசன் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்ட ஒருவரும் நம்பவில்லை. அரசன்மீது உள்ள விரோதத்தாலேயே அவனை நிந்திக்க யாரோ ஒருவர் இவ்விதம் தண்டோராப் போட ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று எண்ணினுர்கள். அரசன் கொடுங்கோல் மன்னனு? அல்லவே அல்ல. குடிகள் யாவரும் மன்னனைப் போற்றி வந்தார்கள். சாதாரண ஜனங்களில் அவனை விரோதித்தவர்களே இல்லை. அப்படியானுல் யார் இவ்விதம் செய்திருக்கக்கூடும்?

பறையறைந்தவனும் ஒன்றிரண்டு தெருக்களோடு நின்றுவிடவில்லை. நகர்ப் புறத்திலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு வீதி வழியாகவும் முரசு முழக்கிச் சென்றுன். கடைசியில் ராஜ வீதியிலும் சென்று அரசன் வாழும் அரண்மனை வாசலிலும் அவ்விதமே பறையறைந்தான், அவ்வளவுதான். அவனுக்கு முடிவு காலம் வந்து

விட்டது போலும்! கல்லுப் பிள்ளையார் மாதிரி சக்கரவர்த்தி அந்தப்புரத்தில் இருக்கும்பொழுது அரண்மனை வாசலில் சக்கரவர்த்தி இறந்துவிட்டார் என்று ஒருவன் தண்டோராப் போடமுடியுமா? சேவகர்கள் அவனை விடுவார்களா? முயலைக் கண்ட செந்நாய்கள் போலக் காவலாளிகள் அவன்மீது பாய்ந்து கௌவிப் பிடித்துக்கொண்டார்கள்.

2

மொகலாய சக்கரவர்த்தி அக்பர் பாதுஷா கொலு வீற்றிருந்தான், அவன் இறந்துவிட்டதாகத்தான் அந்தக் கூலியாள் பறையறைந்து வந்தான். சபையில் ஒரு மூலையில் அவன் ஒடுங்கி நின்றான். வீதிகளில் தமுக்குப் போடும்போது அவனுக்கிருந்த கம்பீரம் அப்பொழுது காணப்படவில்லை. அவன் உடல் நடுக்க முற்றது. எண்சாண் உடம்பையும் ஒரு சாணாகக் குறுக்கிக்கொண்டு நின்றான்.

அவனுக்குப் பக்கத்தில் ஒரே வெண்மையான உருவம் ஒன்று காணப்பட்டது. காலோடு தலை வெள்ளைப் போர்வை போட்டு மறைந்திருந்தது. ஆயினும் அதனைக் கூர்ந்து கவனித்தால் அது ஒரு பெண்ணின் உருவம் என்பது நன்கு புலப்படும்.

அவள் யார்? பறையறைந்த கூலியாளுடன், அவன் பக்கத்தில் அவள் நிற்பானேன்? அவளா அதற்குக்காரணம்? அவள் கூறியதைக் கேட்டுத்தானா அந்த ஆள், சக்கரவர்த்தி இறந்துவிட்டான் என்று தலைநகரத்தில் பறையறைந்தான்? உண்மையில் அவளே அதற்குப் பொறுப்பாளியாக இருந்தால் அவளுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும்?

ராஜத் துவேஷமான இந்தக் காரியத்தை அவள் எதற்காகச் செய்தாள்? அம்மம்ம! அதுவும் சக்கரவர்த்தி இருக்கும் அரண்மனை வாசலிலா? இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். ஒருகால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகவே இருக்குமோ? ராஜகுமாரன் ஸலீம் செய்த சூழ்ச்சியாக இருக்குமா? ஆம்; அவன் சிங்காதனத்தைக் கைப்பற்றவேண்டும் என்று பல காலமாக எண்ணிவருகிறான். அக்பர் நீண்டகாலம் உயிர் வாழ்வது அவனுக்குச் சகிக்கவில்லை. அந்தக் கிழம் எப்பொழுது சாகும். தான் எப்பொழுது சிங்காதனத்தில் அமரலாம் என்று காத்திருக்கிறான். அரசன் இறந்துவிட்டான் என்ற பொய் வதந்தியால் மக்களைக் கிளப்பித் தன் காரியத்தை நிறைவேற்ற எண்ணி இவ்விதம் செய்திருக்கக் கூடுமா?

'சீ! அங்ஙனம் இராது. அப்படி இருக்குமானால் அவன் டில்லி, அலாஹாபாத் முதலிய வெளி இடங்களில் இவ்விதம் பொய்யைப் பறையறைந்து தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டிருப்பான். குத்துக்கல் போல அரசன் உயிருடன் வாழும் ஆக்ரா அரண்மனை வாயிலிலா இவ்விதம் செய்திருப்பான்? எவ்விதத்திலும் இதன் மர்மம் புரியவில்லையே.'

இவ்விதம் சென்றது சபையில் கூடியிருந்தவர்களுடைய யோசனை. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எண்ணினர்.

சக்கரவர்த்திக்கும் ஒன்றும் புரியவில்லை. அவனையும் மீறிக் கோபம் முன்னின்றது. காவலாளரைக் கூப்பிட்டு அப்பெண் போர்த்தியிருக்கும் படுதாவை அகற்ற உத்தரவிட்டான். தர்பாரில் விசாரணைக்கு வந்திருக்கும் ஒரு கைதிக்குப் படுதா வேறு வேண்டி

யிருக்கிறதோ என்று எண்ணினன்போலும்! அதுவும் சாமானியமான குற்றமா? மிகவும் கடூரமான தண்டனை விதிக்கவேண்டிய ராஜத்துவேஷம்.

அப்பெண்ணை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தான் மன்னன். அவ்வளவுதான்; அவன் மனத்தில் ஒரு கலக்கம் உண்டாகிவிட்டது. அவளுடைய உன்னதமான தோற்றம் அவள் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதைக் காட்டியது. சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தான். 'உருவத்தைக் கண்டு மயங்கக்கூடாது; எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ; யார் கண்டது? விசாரணையை நடத்த வேண்டியதுதான்' என்று முடிவு செய்தான்.

3

"சக்கரவர்த்தி, என்னை மன்னிக்கவேண்டும். நான் தான் இவ்விதம் இவன் பறையறைந்ததற்குப் பொறுப்பாளி. அதற்கு உண்டான முழுத் தண்டனையையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இந்த ஆள் கூலிக்கு வேலை செய்தவனே. வற்புறுத்தியே இவனை இக் காரியத்தைச் செய்யச் சொன்னேன். இவன்மீது குற்றம் சிறிதும் இல்லை. ஆதலால் இவனை விட்டு விடுங்கள். அந்தத் தண்டனையை எனக்கு விதியுங்கள்" என்று மன்றாடினாள் அந்தப் பெண்.

"எதற்காக நீ இவ்விதம் செய்தாய்?" என்று கேட்டான் அக்பர் பாதுஷா.

"சக்கரவர்த்தி இறந்துவிட்டாரென்று எனக்குப் பட்டது; அதனால் பறையறையச் சொன்னேன்."

இதைக் கேட்டதும் தர்பாரி ஒருவன், ஐயாயிரம் படைக்குத் தலைவன், பல்லை நற நறவென்று கடித்தான்.

அவளை ஒருதரம் முறைத்துப் பார்த்தான். பிறகு, " உஸ்! பேசாதே. சக்கரவர்த்தி முன்னிலையில் அவ்விதம் பேசினுல் என்ன ஆகும் தெரியுமா? " என்று உறுமினுன்.

" ஹ ஹ் ஹா ' என்று வாய் விட்டுச் சிரித்தாள் அந்தப் பெண். " என்ன நடந்துவிடும்? உயிர்தானே போகும்? அதற்கு நான் சிறிதும் அஞ்சவில்லை; சக்கரவர்த்தி நீடூழி வாழவேண்டும் என்று வாழ்த்தி என்ன பயன்? மானத்தை இழந்து, பெண்களுக்கு அணிகலனுன கற்பையிழந்து உயிர் வாழவேண்டும் நான்; அவ்விதம் உயிருடன் இல்லாமல் உயிரை இழப்பதே மேல். அரசன் உயிர் வாழ்வது எதற்காக? தான் போகங்களை அனுபவிப்பதற்காக அல்ல; குடி மக்களைக் காப்பாற்றுவதற்காகவே. அங்ஙனம் குடிகளைக் காப்பாற்ருத மன்னன், நீதி வழங்காத மன்னன், இருப்பதும் ஒன்றுதான்; இல்லாததும் ஒன்றுதான். அரசன் உண்மையிலேயே உயிருடனிருந்தால் இத்தகைய அநீதி நடக்குமா? தர்மத்துக்கு விரோதம் வந்தால் நிச்சயம் அரசன் உயிர் வாழவில்லை என்றே கூறவேண்டும். அவ்விதமே நான் கூறினேன்."

இவ்வாறு அந்தப் பெண் பயமில்லாமல் கம்பீரமாகத் தெரிவித்தாள். இதைக் கேட்டதும் பாதுஷாவுக்கு அவள்மீது இருந்த கோபம் போய்விட்டது. அதற்குப் பதிலாக அக்கோபம் பன்மடங்காக அவளுக்குத் தீங்கிழைக்க முன்வந்தவன்மீது பாய்ந்தது. ' அவன் யார்? அவளுக்கு என்ன தீங்கு இழைத்தான்? தன்னுடைய ராஜ்யத்திலும் அப்படிப் பெண்களுக்குத் தீங்கிழைக்கும் ஒருவன் இருக்கிருனு?' என்பதை அறிய விரும்பினுன் அவன்.

4

அவள் லாஹோரைச் சார்ந்தவள்; உயர் குடியில் பிறந்தவள்; கல்வி கேள்விகளில் மேம்பட்டவள்; உயர் குடிப் பெண்களுக்குரிய கலைகள் பலவற்றிலும் தேர்ந்தவள். அவளை மனைவியாக அடைபவன் கொடுத்து வைத்தவனே.

அக்காலத்தில் லாஹோர் சுபாவுக்குக் கவர்னராக இருந்தவன் அவள்மீது மையல் கொண்டான். அவன் கெட்டழிந்தவன்; பெருங்குடியன்; நிர்வாகத் திறமை சிறிதும் இல்லாதவன். எனினும் அவன் சக்கரவர்த்தியின் உறவினன் என்பதற்காக எல்லோரும் அவனை மதித்துவந்தார்கள். ஆனால் அப்பெண்ணோ அவனைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவில்லை. அவனை மணந்து கொள்ள முடியாது என்று நிச்சயமாக மறுத்து விட்டாள்.

அவனோ விடுவதாக இல்லை; பல விதத்திலும் தொந்தரவு செய்தான். அவளை மணந்து கொள்ளா விட்டாலும் எப்படியாவது அவளுடன் கூடி இன்பம் அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணமே அவன் மனத்தில் மேலிட்டு நின்றது. அதனால் அவன் அவள் தனக்கு இணங்காவிட்டால் அவளுடைய குடும்பத்தையே அதோகதியாக்கிவிடுவதாகப் பயமுறுத்தினான்.

அவள் மேலதிகாரிகளுக்குப் பல மனுக்கள் அனுப்பினாள். ஒன்றிற்காவது பதில் வரவில்லை. அவை உரிய அதிகாரிகளிடம் போய்ச் சேர்ந்தால் அல்லவோ அவளுக்கு நியாயம் கிடைக்கும்? கவர்னர் அரசனுடைய உறவினன் என்று பயந்துகொண்டு அதிகாரிகள் சும்மா இருந்து விட்டார்கள். அதற்குப் பிறகுதான் அவள் இவ்விதமான சூழ்ச்சி செய்தாள்.

எப்படியாவது இந்தச் செய்தியை அரசன் காதில் போட்டுவிடுவது என்று தீர்மானித்தாள். அதை முடிப்பது லேசில் ஆகிற காரியம் அல்லவென்பதையும் அவள் சீக்கிரம் உணர்ந்துகொண்டாள். தான் ஆக்ராவுக்குச் சென்று சக்கரவர்த்தியைப் பேட்டி கண்டு முறையிடுவது நடக்காது என்பதை அறிந்தாள். அதனால் இம்முறையை மேற்கொண்டாள். இதில் கட்டாயம் வெற்றியுண்டு, ராஜத்துவேஷக் குற்றத்தை விசாரிக்க அவளை நிச்சயம் சக்கரவர்த்தி முன்னிலையில் நிறுத்துவார்கள் என்று நம்பினாள். அவ்விதமே நடந்தது.

5

அவள் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றி விட்டாள். சக்கரவர்த்தியும் அவள் கூறியது உண்மை என்பதை அறிந்துகொண்டான். அதனால் அதை விசாரிப்பதற்குத் தானே நேரில் லாஹோருக்குப் போக வேண்டும் என்று தீர்மானித்தான்.

உடனே புறப்பட முடியுமா? எவ்வளவு சீக்கிரமாகப் புறப்பட்டாலும் ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிடுமே? அதுவரையில் அவளை என்ன செய்வது? திருப்பி லாஹோருக்கு அனுப்பினால், கவர்னர் மறுபடியும் அவளை ஏதாவது ஹிம்சித்தால் என்ன செய்வது? ஆகவே மன்னன் அவளைத் தன்னுடனே நிறுத்திக் கொண்டான்.

சிலநாளில் சக்கரவர்த்தியும் லாஹோருக்கு விஜயம் செய்தான். இந்தக் குற்றத்தைப்பற்றி விசாரணை நடந்தது. கவர்னர் 'இல்லவே இல்லை' என்று முதலில் சாதித்து விட்டான். அவன் ஒப்புக்கொள்வானா? ஆயினும் அக்பர் அதோடு விடவில்லை. ஒற்றர்களைக்

கொண்டு ரகசியமாக விசாரித்தான். உண்மை தெரிந்து விட்டது.

முறைப்படி பகிரங்கமாக விசாரணை நடந்தது. கவர்னர் வேறு வழியில்லாமல் குற்றத்தை ஒப்புக் கொள்ள நேர்ந்தது. பிறகு கேட்பானேன்? அதற்குரிய தண்டனையையும் அடைந்தான் கவர்னர்.

அக்பர் அந்தப் பெண்ணுடைய கூரிய புத்தியைக் கண்டு வியந்தான். அவளைத் தன் சொந்தப் பெண்ணைப் போல நடத்தினான். கடைசியில் தன்னுடைய சொந்தச் செலவில் நல்ல இடத்தில் அவளை மணம் செய்து கொடுத்தான். அவளுடைய வமிசத்தினர் இன்றைக்கும் பஞ்சாபில் இருக்கின்றார்களாம்.

கலையின் பலி

1

எப்போது பொழுது விடியப்போகிறது என்று காத்துக்கொண்டிருந்தான் அவன். இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையிலே புரண்டு புரண்டு படுத்திருப்பதும் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது; பஞ்சுமெத்தையும் முள்போல உடலை உறுத்தியது.

தூக்கத்தை வருவிப்பதற்குச் சாதாரணமாக மேற்கொள்ளும் முறைகளை அனுஷ்டித்துப் பார்த்தான். கண்களை மூடிக்கொண்டான். தன் மனத்தில் எழும் எண்ணங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுச் 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்க' முயன்றான். ஆனால் தூக்கம் மட்டில் வரவில்லை. அவன் உள்ளத்தில் சிந்தனை அலைகள் மோதிக் கொண்டிருக்கும்போது தூக்கம் வர இடமேது?

அவன் மனம், எண்ணம் யாவும் சிறிது நேரத்திற்கு முன்பு அவன் கேட்ட பாடலின் மேலேயே இருந்தன. அது அப்பொழுதும் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. எவ்விதம் முயன்று பார்த்தும் அவனால் அதை மறக்க முடியவில்லை.

அவனை வசப்படுத்தியது அந்தப் பாடலா அல்லது அதைப் பாடிய பெண்மணியின் குரலா என்பதை அவனால் நிச்சயிக்க முடியவில்லை. பாட்டின் பாவமும்

அதைப்போலவே அந்தக் குரலில் கண்ட இனிமையும் அவன் மனத்தைக் குளிரச்செய்தன.

" செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றூரோ தடவினர் - பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய் "

என்னும் அந்தப் பாட்டு அவன் மனத்தைக் கவர்ந்தது. அது தன்னைப் புகழ்ந்து பாடியது என்பதை அவன் அறிந்து பின்னும் பெரு வியப்பை அடைந்தான்.

அரசன் கேட்டது அவனைப் புகழ்ந்து பாடிய பிர பந்தம் ஒன்றின் ஒரு பாட்டாகும். நள்ளிரவில் அதைப் பாடியவர் யார் என்பதை அவனால் பார்க்கமுடியவில்லை. ஆயினும் அந்தக் குரலால் அவள் ஒரு பெண் என்பதை மட்டில் அவன் செவி உணர்த்தியது.

அவன் வழக்கப்படி மாறுவேடம் அணிந்து, பரி வாரம் ஒன்றும் இல்லாமல் தன்னந்தனியனாக நள்ளிர வில் நகரைச் சுற்றிப் பார்த்துவந்தான். அரசவீதியின் இருபுறங்களையும் அலங்கரிக்கும் மாளிகைகளுள் ஒன்றன் உப்பரிகையினின்றும் அந்தப் பாடல் காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. அவள் பாட்டுடன் ஒட்டிய வீணையின் மெல்லிய நாதமும் ஒலித்தது. நிச்சப்தம் குடிகொண்டு விளங்கிய அந்த நள்ளிரவின் மோன நிலை யில் அந்தப் பாட்டு அவன் காதுகளில் அமிர்த வர்ஷம் பொழிந்ததுபோல் இனித்தது.

ஒரு ஸாம்ராஜ்யத்துக்கு அதிபதியாக விளங்கும் அவன், சக்கரவர்த்தி, நிசிவேளையில் உதவிக்கு மெய் காவலர் ஒருவரும் இல்லாமல் ஒன்றியாக உலவிவரும் பொழுது ஓரிடத்தில் அதிக நேரம் தங்க முடியுமா? அவனை அந்நிலையில் யாராவது கண்டுகொண்டால்

என்ன செய்வது? சில சமயங்களில் அது ஆபத்தாகவும் முடியக் கூடுமே? வேற்றரசர்களின் வேவுகாரர்களில் யாராவது அவனை அப்படிப் பார்த்துவிட்டால், அவனுடைய உயிருக்கே மோசம் வந்தாலும் வரக்கூடும்.

மன்னன் அவ்விடம் அதிக நேரம் தங்கவில்லை. அதற்குமேல் வேறே இடங்களுக்குச் செல்லவும் அவன் மனம் இடம்கொடுக்கவில்லை. அதனால் விரைந்து அரண்மனையை அடைந்தான். பொழுது விடிந்ததும் அந்தப் பெண்ணை அழைத்துவந்து முழுமையும் பாடச்சொல்லிக் கேட்கலாம் என்றே எண்ணினான்.

இவ்விதம் பொழுது புலர்வதை எதிர் நோக்கியிருந்த அவனுக்கு இரவின் பிற்பகுதியில் தூக்கம் வராதது இயற்கையே அன்றோ?

2

பொழுது புலர்ந்தது. அரசனுக்கு வேறு எண்ணமே இல்லை. முதல் நாள் இரவு தான் கேட்ட பாட்டை மறுபடியும் கேட்க விரும்பினான். ஏவலாளர்களுக்கு அந்த வீட்டைக் குறிப்பிட்டு அதில் வசிப்பவர்கள் யார் என்பதை அறிந்துவரும்படி அனுப்பினான்.

அவர்களும் விசாரித்து அறிந்து செய்தியை விரைவில் வந்து தெரிவித்தார்கள். பாண்டி நாட்டினின்றும் காஞ்சீபுரத்துக்கு நூதனமாக வந்த பரத்தை ஒருத்தி அந்த மாளிகையில் வசித்து வந்தாள். அவள் தருண யுவதி. சங்கீதத்திலும் நாட்டியத்திலும் கைதேர்ந்தவள். இதுவே அவர்கள் தெரிவித்தது.

இச்செய்தி அவன் ஆச்சரியத்தை இன்னும் பன்மடங்காக அதிகப்படுத்தியது. 'என்ன! பாண்டி நாட்டினின்றும் இந்நகரத்துக்கு இப்போது வந்தவள் என்

புகழைப் பாடுகிருள். இதுவரையில் நான் கேட்காத புதிய பாடலாகவும் இருக்கிறது. பாண்டியன் ஒளியை யும் மங்கச்செய்த நம் பெருமையைப் புகழ்ந்து பாண்டி நாட்டார்களும் பாடிவருகிருர்கள் என்பது அதிசயமாக இருக்கிறதே! அவளைக் கட்டாயம் கூப்பிட்டு விவரம் அறிந்து பாடல் முழுவதையும் சொல்லக் கேட்க வேண்டும்' என்று தீர்மானித்தான் மன்னன்.

அவளை அரண்மனைக்கு அழைத்துவரச்சொன்னுன் அரசன். அவளும் வந்தாள். அவளை ஓர் ஆசனத்தில் அமர்த்திவிட்டு அவளைப் பார்த்து, "அம்மணி, நேற்று இரவு நான் வீதிவழியே வந்துகொண்டிருக்கையில் தாங்கள் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். அந்தப் பாடலின் சொல்லும் பொருளும் தங்கள் குரலின் இனிமையும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. அதனை மறுபடியும் கேட்கவேண்டும் என்ற ஆசை அதிகமாக இருக்கிறது. தாங்கள் தயைசெய்து என் அபிலாஷை யைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

"பெருமான் அடிகள் அவ்விதம் சொல்லக்கூடாது. தாங்கள் அவ்விதம் விரும்புவதை அடியாள் எனக்குக் கிடைத்த பாக்கியமாகவே கருதுவேன். கலா ரஸிகராகிய தாங்கள் இந்த ஏழையின் பாடலிலும் ஓர் இனிமை இருந்தது என்று கூறுவது வெறும் உபசாரமே. எனக்குத் தெரிந்தவற்றைச் சமுகத்தில் பாடுவதற்குத் தயாராக இருக்கிறேன்."

இவ்விதம் அடக்கத்துடன் பதில் கூறிய அவள் அரசன் முன்னிலையில் பாடுவதற்கு ஆயத்தமானுள். வீணையைச் சுருதி சேர்த்துத் தந்திகளை மீட்டி முதல்

நாள் இரவு தான் பாடிய பாடலை மறுபடியும் பாடினாள். கல்லும் கரைந்து உருகும்வண்ணம் பாடினாள்.

அந்தப் பாட்டு முடிந்தது. அரசன் கண்களை மூடிக்கொண்டு சிலைபோல உட்கார்ந்திருந்தான். அங்கே நிச்சப்தம் நிலவியது.

சிறிது நேரம் கழித்து மன்னன் கண்களைத் திறந்து பார்த்தான்.

“அம்மணி, மேலே கொஞ்சம் தொடர்ந்து பாடுங்கள்” என்று மறுபடியும் வேண்டினான்.

அவள் என்ன செய்வாள்! அவளுக்கு அந்த ஒரு பாட்டுத்தான் தெரியும். அதை அவள் சமீபத்திலே தான், ஒரு வாரத்திற்கு முன்பு, கற்றுக்கொண்டாள். அதனால் அவள் மன்னனை நோக்கி, “அரசே, என்னை மன்னிக்கவேண்டும். எனக்கு இந்த ஒரு பாட்டுமட்டுமே தெரியும். என்னுடைய உபாத்தியாயர் இது ஒன்றைத் தான் கற்றுக்கொடுத்தார்” என்று சொல்லிவிட்டாள்.

அந்தப் பாடலை எழுதியவன் அது ஒன்றுடன் நின்றிருக்க மாட்டான்; வேறு பல பாடல்களையும் தொடர்ந்து எழுதி அவற்றை ஒரு நூலாக அமைத்திருக்கவேண்டும். இதனை நன்கு அறிவான் மன்னன். அதனால், ‘அந்தப் புலவன் யார்? எங்கிருக்கிறான்?’ என்பதை அறிய ஆவல்கொண்டான் அவன்.

அந்தப் பரத்தை, அவளுடைய உபாத்தியாயர் ஆகியவர்களைக்கொண்டு விசாரித்து அறிந்து கடைசியில் அந்த ஆசிரியனைக் கண்டுபிடித்தான் சக்கரவர்த்தி.

அந்த நூலின் ஆசிரியன் யார் என்பதைக் கேட்டவுடனே அவன் ஆச்சரியம் முன்னம் இருந்ததைவிடப் பன்மடங்காயிற்று.

'என் தம்பி எழுதிய நூலா இது? இது உண்மையாக இருக்குமா? என்னுடன் போர்க்களத்தில் நேருக்கு நேர் நின்று போர் செய்த என் விரோதி என்னைப் புகழ்ந்து எழுதியிருப்பானு?' என்றெல்லாம் அலைக்கப் பட்டது அவன் மனம்.

3

இவ்வித நிலையில் இருந்தவன் இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சீபுரத்தினின்றும் தமிழ்நாட்டின் வடபகுதியை ஏக சக்கராதிபதியாக ஆண்டுவந்த பல்லவ அரசனை நந்திவர்மன் எனப்படுபவன். பல்லவர்கள் மகோன்னத நிலையில் விளங்கியதைக் கண்டு அக்காலத்தே மதுரையினின்றும் ஆண்டுவந்த ப்ாண்டியர்கள் பொருமை கொண்டார்கள். அங்ஙனம் அவர்கள் பொருமை அடைந்ததற்கு மற்ருெரு காரணமும் உண்டு.

நந்திவர்மன் போர்த்தொழிலில் மட்டும் மேம்பட்டவன் அல்ல; அவன் உயர்ந்த கொடையாளி; நல்ல கவித்திறம் வாய்ந்தவன். அவன் ஒரு கலா ரஸிகன். சித்திரகாரன் ஒருவன் எழுதும் ஓவியத்தைப் பார்த்து இன்புற்று அனுபவிப்பதற்குச் சித்திரக்கலையின் நுட்பம் சிறிதளவாவது தெரிந்திருக்க வேண்டும்; உணர்ச்சிப் பெருக்கு எடுக்கவேண்டும். நல்ல பாட்டைக் கேட்டு மகிழ்வதற்குச் செவிச் செல்வம் படைத்திருக்க வேண்டும். அவ்வாறே காவியங்களையும் கவிகளையும் ரஸிப்பதற்கு ஒருவனுக்குக் கவித்திறம் சிறிதளவாவது இருத்தல் வேண்டும்.

கலையின் நுட்பத்தை அறிந்தவன் சும்மா இருக்க மாட்டான்; வாழ்நாட்களை வீணுகக் கழிக்கமாட்டான்.

கலாவல்லவர்கள் இருக்கும் இடங்களைத் தேடியடைந்து அவர்களுடன் கலந்து உறவாடுவான். அவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணித் தானும் மகிழ்வான். கலையின் தொடர்பு இல்லாமல் அவனால் உயிர்வாழ முடியாது. அதுவே அவன் வாழ்க்கையின் ஜீவன். அதுபோலவே கலாவல்லவர்களும் அவனைத் தேடி அடைவார்கள்.

அப்படிப்பட்டவன் ஒரு நாட்டின் அரசனாக விளங்கினால் அவனைத் தேடி அடையும் வித்துவான்களின் எண்ணிக்கையை நாம் குறிப்பிட முடியுமா?

நந்திவர்மன் தமிழிலே ஆழ்ந்த ஞானம் படைத்தவன். புலவர்கள் அவனைத் 'தமிழறியும் பெருமாள்' என்றே போற்றி வந்தனர். அவனது சபையை அலங்கரித்து வந்த வித்துவான்களுக்குக் கணக்கில்லை. புலவர்கள் சம்பந்தப்பட்டவரையில் தமிழுக்கே தாயகம் போன்று விளங்கிய மதுரையும் பாழ்த்துவிட்டது என்னலாம். பாண்டியன் பொறாமையைத் தூண்டிவிட்டதற்கு இதுவே காரணம் என்றும் கூறலாம்.

நந்திவர்மன் ஆட்சியின் முதலில் பல போர்கள் நிகழ்த்த நேர்ந்தது. அவை யாவும் பாண்டியர்களின் பொறாமையாலேயே மூண்டன. அப்போர்கள் எல்லாவற்றிலும் நந்தியே வெற்றி கொண்டான். ஆனால் அவன் மனம் உடைந்துவிட்டது.

அவன் தம்பியே அவனுக்கு விரோதமாகப் பாண்டியர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய உளவுகளைச் சொல்லிக்கொடுத்து வந்தான். அம்மட்டிலோ? அவனுக்கு எதிராகப் போர் முகத்திலும் நேரில் வந்து நின்று போர்புரியத் தொடங்கிவிட்டான். தம்பியின் இச்செய்கை நந்திக்கு மிகுந்த வருத்தத்தைக்

கொடுத்தது, 'கோடரிக் காம்பு' போன்ற அவனைப் போர்க்களத்தில் கண்டது முதல் நந்திக்கு உலகத்தில் வெறுப்பு உண்டாகிவிட்டது.

அத்தகைய விரோத பாவம் கொண்ட தம்பி தன் தமையன் பெருமையைப் புகழ்ந்து பாடியிருத்தல் கூடுமா? காலம் மனக்கசப்பை மாற்றி அவன் தம்பிக்கு நல்ல புத்தியை அளித்திருக்குமா? உண்மையிலேயே அவன் திருந்திவிட்டானா? பாடலைக் கேட்பதுடன் இதனை அறியவும் அரசன் மனம் ஆசைப்பட்டது.

4

நந்திவர்மனுடைய தம்பி அரசன்மீது பாடிய கலம்பகத்தை அரங்கேற்ற நல்ல வேளை நிச்சயிக்கப்பட்டது. ராஜசபை கூடியது. சிற்றரசர்களும் நாட்டின் பிரமுகர்களும் வந்திருந்தார்கள். புலவர்கள் பலர் கூடியிருந்த அந்தச் சபை மிகுந்த சோபையுடன் விளங்கியது.

அரசன் சிங்காதனத்தின்மீது அமர்ந்திருந்தான். பக்கத்தில் அவன் தம்பி, கலம்பகத்தின் ஆசிரியன், வீற்றிருந்தான். எதிர்ப்புறத்தில் ஒரு பீடத்தில் ஏடு படிக்கும் கற்றுச்சொல்லி ஒருவனும், கலம்பகத்தின் செய்யுட்களை எடுத்துக்கூறிப் பொருள்விளக்கி அரங்கேற்றம் செய்யப் புலவன் ஒருவனும் அமர்ந்திருந்தனர். 'அரங்கேற்றம் ஆரம்பிக்கலாமா?' என்று கேட்பதுபோல அரசன் அந்தச் சபையை ஒருதரம் சுற்றி நோக்கினான்.

கலம்பகத்தின் ஆசிரியன், அரசனின் தம்பி, சபையில் கம்பீரமாக உட்கார்ந்திருக்கவில்லை. அவன் தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தான். அவன் மனத்துள் ஏதோ ஒன்று குமுறிக்கொண்

டிருந்தது. அவன் மனம் பட்ட வேதனையை யார் அறிவார் ?

சபையினர் வேறு விதமாக எண்ணினர். வெகு காலம் பிரிந்திருந்து விரோதியாகக் காலம் கழித்த அவன் தன் தமையனுடன் இப்போது கூடியதால் அவனுக்கு ஏற்பட்ட வெட்கம், கூச்சம் என்றே அதனை மதித்தனர்.

அவன் தற்செயலாகத் தலை நிமிர்ந்தான். அரசன் முகத்தைக் கண்டான். அரசன் முகத்தில் விளங்கிய ஜோதி அவன் கண்களை மங்கச் செய்தது; அவன் மனத்தில் இருந்த குழப்பத்தை அதிகமாக்கியது; அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

அப்படி அவன் அதிக நேரம் உட்கார்ந்திருக்கவில்லை. 'இனித் தாமதித்தால் மோசம் வந்துவிடும்' என்பதை அறிந்தான். எப்படியும் அரங்கேற்றத்தை நிறுத்திவிடவேண்டும் என்று விரும்பினான். அதற்கு என்ன வழி ?

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவனாக இருக்கையினின்று எழுந்து அரசன் அடியில் விழுந்தான்; அவன் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

அவன் எழுந்தவுடன் 'நூலாசிரியன் என்ற முறையில் அரங்கேற்றத்துக்கு அனுமதி கோருவதற்கு எழுந்திருக்கிறான்' என்று எண்ணினார்கள் அவ்விடம் கூடியிருந்தவர்கள். ஆனால் அவனோ அவ்விதமான அனுமதியை வேண்டவில்லை.

இரு கண்களினின்றும் நீர் ஆறாக ஒழுக, "அரசே! என்னை மன்னிக்கவேண்டும். நான் கேட்கும் வரத்தை நீங்கள் கொடுத்தே ஆகவேண்டும். இந்த அரங்கேற்

றத்தை நடத்தக் கூடாது. இதுவே நான் வேண்டுவது" என்று கெஞ்சினுன்.

அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் எழுந்து குனிந்து தன் தம்பியை வாரித் தூக்கித் தன் மார்புடன் அணைத்துக்கொண்டான்.

சபையில் இருந்தவர்களும் பரபரப்பை அடைந்தனர். ராஜகுமாரனைப் பார்த்தால் புத்தி சுவாதீனம் இல்லாதவன் போலத் தோன்றியது.

ராஜகுமாரன் சபையோர்களைப் பார்த்து வீராவேசம் கொண்டவன்போலப் பின்வருமாறு கூறினுன்:

"நான் மகாபாதகம் செய்தவன். என்னுடைய துரோகத்துக்கு நல்ல கதி கிடைக்காது. இந்நாட்டின் அரசைக் கைப்பற்றப் பலவிதங்களிலும் நான் முயன்றேன். முயற்சி கைகூடவில்லை. கடைசியாக இந்த முறையை மேற்கொண்டேன்......

"அமிர்தத்துடன் கொடிய விஷத்தையும் கலந்து குழந்தைக்குக் குடிக்கக் கொடுப்பார் உண்டோ? அத்தகைய பாவச் செயலைச் செய்திருக்கிறேன் நான்.

"இந்நூலைப் பலவருஷங்கள் சிரமப்பட்டு இயற்றி முடித்தேன். எப்படி? பிறர் அறியமுடியாதபடி அமங்கலச் சொற்களை நடுநடுவே கலந்து இயற்றினேன்; அறம் வைத்துப் பாடினேன். அரசனைப் புகழ்ந்து எழுதிய கலம்பகம் என்று யாவரும் மதிக்கக் கூடிய இந்நூல் உண்மையில் மன்னனுடைய சரம கவியாக அமையும்படி இயற்றினேன். இப்படிப்பட்ட நூலைப் பரம கருணுநிதியான இம் மன்னன், என் அண்ணன், முன்னிலையில் அரங்கேற்றம் செய்யவோ? கூடவே கூடாது."

அவன் பித்துப் பிடித்தவன்போலக் கீழே இறங்கி, புலவர் கையிலிருந்த ஏட்டைப் பிடுங்கிக் கிழித்துவிட ஓடினான்.

கூடியிருந்தோர் எல்லோரும் அவனைப் பிடித்துச் சமாதானம் செய்தார்கள். அரசன் அரங்கேற்றத்தை நிறுத்த விரும்பவில்லை. இவ்விதம் ஏமாற்றம் அடைவதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டான் அவன்?

அன்றொரு நாள் அவன் கேட்ட பாட்டு அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. எப்படியாவது அந்த நூல் முழுதையும் கேட்க விரும்பிய அவன் ஆசா பங்கம் அடையச் சகிப்பானா?

கவிதையைக் கேட்காமல் உயிர் வாழ்வதைவிட அதனைக் கேட்டுவிட்டு இறப்பதே மேல் என்று எண்ணினான் மன்னன். கலையின் ரசிகத் தன்மை அதுவே யன்றோ? அரங்கேற்றம் நிற்கவில்லை. முறைப்படி நடந்து பூர்த்திபெற்றது.

* * * *

(குறிப்பு :—அரங்கேற்றத்தைப்பற்றிக் கர்ணபரம்பரையான கதை ஒன்று உண்டு.

தான் கலம்பகத்தைப் பூர்த்தியாகக் கேட்டவுடன் இறந்துவிடுவது நிச்சயம் என்பதை அறிந்த மன்னன் அரச சபையினின்றும் அதனைக் கேட்க விரும்பவில்லை. நகர்ப்புறத்தே இருந்த ஓர் அழகிய தோட்டத்தின் நடுவே ஒரு பெரிய பந்தலை அமைத்து அதன் பக்கத்தில் சந்தனக் கட்டைகளால் சிதை ஒன்றையும் அடுக்கினான். பந்தலில் புரவலரும் புலவரும் கூடியிருந்தனர்.

அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று. மன்னன் சிதையின்மீது ஏறிப் படுத்துக்கொண்டு அதனைக் கேட்டு வந்தான்.

புலவன் ஒவ்வொரு பாட்டாகப் பாடிவந்தான். மன்னன் நாடியும் சிறிது சிறிதாக அடங்கிவந்தது.

கலம்பகம் பூர்த்தியாகும் சமயம். அரசன் மூச்சு நின்று விட்டதென்றே கூறவேண்டும். கடைசிப் பாட்டுக்கும் வந்துவிட்டான் புலவன்.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்
கற்பக மடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் புகுந்ததுன் தேகம்
நானுமென் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே"

என்னும் பாட்டைக் கூறி முடித்தான். அப்பொழுது கண்டது என்ன ?

அரசன் படுத்திருந்த சிதை தீப்பிடித்துக்கொண்டு எரிந்ததாம். இங்ஙனம் கலைக்காக உயிரைத் துறந்த மன்னனை யார்தாம் போற்றமாட்டார்கள் ?

"நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்"

— சோமேசர் முதுமொழி வெண்பா]

கடைத் தேங்காய்

1

" என்ன அவனுக்கு அவ்வளவு கர்வமா? அதை ஒரு நொடியில் அடக்கிவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கவேண்டும்" என்று கர்ஜித்தான் ஸுல்தான். பக்கத்தில் இருந்தவர்கள் நடுங்கிப் போய்விட்டார்கள்.

அரசனுக்குக் கோபம் எல்லைகடந்து வந்தது. அவன் உதடுகள் படபடத்துத் துடித்தன. தாடியும் மீசையும் காற்றினால் அலையுண்டு, கோபமுற்று விளங்கிய அவன் முகத்தை இன்னும் கோரமாக்கின. விழிகள் நெருப்பைக் கக்குவனபோல உருண்டு தனியாக விளங்கின.

கோபத்தால் அவன் பூமியில் ஓங்கி அறைந்த அறை அவன் அமர்ந்திருந்த ஒரு சாண் உயரமான மெத்தையை 'ரஜாய்' மெத்தையாக ஆக்கிவிட்டது. சாய்ந்திருந்த திண்டையும் கொட்டைகளையும் உதறித் தள்ளிவிட்டு எழுந்து நின்றான்; நிலை கொள்ளவில்லை. இங்கும் அங்கும் உலவ ஆரம்பித்தான்.

உச்சிப்பொழுது; நல்ல கோடைக்காலம். வெயில் கடுமையாகத் தகித்துக்கொண்டிருந்தது. மக்கள் அதனைத் தாங்கமாட்டாமல் வீடுகளில் படுத்து உறங்கி வந்தனர். கண் கூசும் வெளிச்சம் உள் நுழைய முடியாதபடி ஜன்னல்களையும் கதவுகளையும் மூடி வைத்திருந்தனர். வெப்பத்தைத் தணிக்கப் பக்கங்களில் எல்லாம் தண்ணீரை ஊற்றி வைத்திருந்தனர்.

இவ்விதமான கோடையின் தாபத்தை மனிதன் குதூகலமாக இருக்கும்பொழுதுகூடத் தாங்கமுடியாது. கோபத்தால் ரத்தக் கொதிப்பை அடைந்த மன்னனல் அதனைத் தாங்கமுடியுமா? அது எவ்வளவு கொடுமையாக இருக்கும்?

அறை விசாலமாக இருந்தது. தரை முழுவதும் பாரசீகத்தில் தயாரிக்கப்பட்ட உயர்ந்த ரத்தின கம்பளம் கொண்டு மூடப்பட்டிருந்தது. சுவர் முழுவதும் பல வகையான சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அவை மனிதர் உள்ளத்தில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் சக்தி வாய்ந்தவை; ராஸக்கிரீடை போன்றவற்றை உருவாக்கிக் காட்டும் சித்திரங்கள்.

அந்த அறையைப் பார்த்தாலே அது ஜனனுவின், அந்தப்புரத்தின், ஒருபாகம் என்பது நன்கு விளங்கும். அரசன் பகற்பொழுதை அந்தப்புரத்தில்தான் கழிப்பது வழக்கம். பொதுவாக உச்சிப்பொழுதில் படுத்து உறங்கிக்கொண்டிருப்பான். பக்கத்தில் தாதியர் உட்கார்ந்து விசிறிகொண்டு வீசுவர்; மெல்ல அடிகளை வருடிக் கொண்டிருப்பார்கள்.

இன்றைக்கு அவை ஒன்றும் இல்லை, மன்னனுக்குக் கரைகடந்த கோபம் வந்துவிட்டது. கூட்டில் அடைபட்ட சிங்கம்போல இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தான்.

“திமிர்பிடித்த கழுதை! நாசமாய்ப்போக! ஏழுஏழு ஜன்மங்களும் அவன் நரகத்தில் கிடந்து அழிய” என்றெல்லாம் உருமிக்கொண்டிருந்தான். அடிமைகள், நபும்ஸகர்கள், ஹுக்காக்குழாயைக் கையில் எடுத்துக் கொண்டு அவன் பின்னல் திரிந்துவந்தனர்.

" பேஷ்வா, இப்பொழுதே கிளம்பவேண்டும்; உடனே படையைத் தயார்செய்; அவன் கர்வத்தை, திமிரை, அடக்காவிட்டால் நம்முடைய கௌரவம் என்னவாகும்? நம்மை அவ்விதம் அவமானம் செய்வதற்கு அவனுக்கு எங்கிருந்து தைரியம் வந்தது? பார்க்கலாம்" என்று கட்டளையிட்டான் மன்னன்.

" ஹுஸூர்!"

பேஷ்வாவுக்கு மன்னன் உத்தரவு பிடிக்கவில்லை. அதற்குக் கீழ்ப்படிந்தால் நாட்டுக்கு என்ன கேடு நேரிடுமோவெனப் பயந்தான். மன்னன் மனத்தை எப்படியாவது மாற்றிவிட விரும்பினான்.

" நீ சொல்லப்போவது எனக்குத் தெரியும். அது எல்லாம் ஒன்றும் கூடாது. உடனே படையைத் தயார் செய்யவேண்டும்" என்று முடிவாகக் கூறிவிட்டான் மன்னன்.

மன்னன் பேச்சைக் கேட்டு ஒருதரம் அவமானம் அடைந்தது போதாதா? இன்னம் எவ்வளவு தடவை படவேண்டுமோ என்ற ஏக்கத்துடன் தலைகவிழ்ந்தான் பேஷ்வா.

2

குல்பர்கா நகரத்தில் அரண்மனைக்குப் பக்கத்தில் அமைந்திருந்த சிங்காரத் தோட்டம்; வஸந்த காலம்; மாலைப்பொழுது; இளந்தென்றல் மெதுவாக வீசிக் கொண்டிருந்தது. வண்டுகள் பறந்துவந்து ஒவ்வொரு பூவாக உட்கார்ந்து மகரந்தத்தை உறிஞ்சிக்கொண்டு போயின.

அதன் மத்தியில் நிறுவப்பட்டிருந்த கொடிவீட்டில் மன்னன் முகம்மது ஷா பாமனி தங்கியிருந்தான்.

உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்கு அந்தப்புரத்துப் பெண்கள் பலர் கூடியிருந்தனர்.

மன்னன் நடுவில் திண்டின்மீது சாய்ந்துகிடந்தான். அவனுடைய ஆதரவைப் பெற விரும்பிய பெண் ஒருத்தி, பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பளிங்குக் கோப்பையில் மதுபானம் கலந்த ஷர்பத்தை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

விஷம் ஏறுவதுபோல மதுபானத்தின் போதை ஏறிக்கொண்டே போயிற்று. கள்ளுடன் காமமும் கலந்தது. எரியும் நெருப்பில் ஊற்றப்படும் நெய்யேபோல், அதனை வளப்பதற்குப் பாட்டும் நடனமும் சேர்ந்தன.

நடன கோஷ்டியினர் சிங்காரத் தோட்டத்தில் மன்னன் முன்னிலையில் தங்கள் திறமையைப் பிரகாசப் படுத்திக்கொண்டிருந்தனர். இனிய சங்கீதமும் அதற்குத் தக்க நடனமும் சேர்ந்து மன்னன் மனத்தைக் கொள்ளை கொண்டன. நடன மாதர்களின் எழிலும் அதற்கு ஏற்றபடியே இருந்தது. மன்னன் கண்களைக் கொட்டவில்லை என்றே சொல்லலாம்.

நடனகோஷ்டியினர் அமீர் குஸ்ருவின் பாடல்களைப் பாடினர். அவை கர்ணாமிர்தமாக இருந்தன. அவற்றின் அர்த்த புஷ்டியும், அவற்றிற்குத் தக்கபடி மாதர்கள் பிடித்த நடனமும் மன்னனை மயக்கின. ஷா தன் சுய உணர்வை இழந்தான். பித்தம் தலைக்கு ஏறியது.

"அச்சா, பஹுத் அச்சா!" என்று கைகொட்டி ஆரவாரித்தான்.

"பேஷ்வா, இவர்களுக்கு நாலு லக்ஷம் பொன் சம்மானம் செய்" என்று உத்தரவிட்டான் மன்னன்.

பேஷ்வாவுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை; அவ்வளவு பணத்துக்கு எங்கே போகிறது? அரசனை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய்? விஜயநகரம் கஜானாவுக்கு உடனே உத்தரவு அனுப்பு. உண்டியல் கொடுத்துவிடு, ஜல்தி."

என்ன செய்வான் பேஷ்வா? 'மன்னனோ இப்பொழுது குடிமயக்கத்தில் இருக்கிறான். இப்பொழுது எதிர்த்துப் பேசமுடியாது. உண்டியலை எழுதிக் கொடுத்துவிடலாம். குடிகாரன் பேச்சுப் பொழுதுவிடிந்தால் போச்சு. காலையில் நடன கோஷ்டியினருக்கு ஏதாவது சம்மானம் செய்து அனுப்பிடவிடலாம்' என்றுஎண்ணினான். அந்தப் படியே நடன கோஷ்டியினருக்கு நாலு லக்ஷம் பொன் அளிக்கும்படி விஜயநகரத்துக் கஜானாவிற்கு உத்தரவு செய்து ஒரு தரிசன உண்டியல் அளித்தான்.

3

நடன கோஷ்டியினர் கிரமப்படி அந்த உண்டியலை விஜயநகரத்து ஆஸ்தானத்திலே ஆஜர் செய்தனர்.

முதலில் அவர்கள் அதைப் பற்றி ஒன்றும் கவலைப் படவில்லை; விஜயநகரம் செல்வதாகவே இல்லை. மறுநாள் காலையில் பேஷ்வா அளிக்கும் சம்மானத்தைப் பெற்றுக் கொண்டு திருப்தி அடைந்துவிடலாம் என்றே இருந்தார்கள்.

ஆனால் முகம்மது ஷா விடவில்லை. மறுநாள் காலையில் மதுவின் மயக்கம் தீர்ந்து சுய உணர்வுடன் இருக்கும்பொழுதும் முதல் நாள் ராத்திரி சொன்னது போலவே சொல்லிவந்தான். அவர்களுக்குக் குல்பர்கா கஜானா, பாமனி அரசாங்கத்துக் கஜானாவிலிருந்து

செல்லாக்காசும் கொடுக்கக் கூடாது என்று கட்டளை இட்டான்.

நடன கோஷ்டியினர் என்ன செய்வர்? விஜய நகரம் சென்ருலோ ஆபத்தும் அவமானமும் உண்டாகும். அங்கே எதற்காக ரூபாய் கொடுக்கப் போகிருர்கள்? 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது' போல விஜயநகரத்துக் கஜாஞவிலிருந்து இவர்களுக்குச் சம்மானமா? அதுவும் நான்கு லக்ஷம் கொடுக்கப் பாமனி ஸுல்தானுக்கு என்ன அதிகாரம்?

போகாவிட்டாலோ மன்னனுக்குக் கோபம் வந்து விடும். உடனே சிரச்சேதந்தான். ஒருகால் விஜயநகரம் சென்று அவ்விடத்தில் ஏதாவது விபரீதம் நடந்துவிட்டால், குல்பர்காவில் அடைக்கலம் புக இடமுண்டு. மன்னன் காப்பாற்றுவான். இல்லாவிட்டால் மரண தண்டனை நிச்சயம். இவ்விரண்டினுள் விஜயநகரம் சென்றுவருவதே மேல் என்று நினைத்துச் சென்றனர்.

அவர்கள் விஜயநகரம் போவதற்கு வேண்டிய செலவையும், அவ்விடத்தில் ராஜாவைப் பேட்டி காணுவதற்குச் செலுத்த வேண்டிய மரியாதைக் காணிக்கை முதலியவற்றையும் பாமனி அரசாங்கத்தாரே கொடுத்து உதவினர். அதேபோல அவர்கள் சென்று பேட்டியும் கண்டார்கள்.

முகம்மது ஷா பாமனியின் உத்தரவு விஜயநகர அரசவையில் பெரிதும் வியப்பை உண்டுபண்ணியது. அதனைப் பார்த்து முதலில் அரசன் உள்பட எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்: யார் வீட்டுப் பணத்தை யார் எடுத்துக் கொடுப்பது என்று. ஆனல் கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சிரிப்புக் கோபமாக

மாறியது. "நமக்கு இவ்விதம் கடிதம் எழுதுவதற்கு அவ்வளவு துணிவு வந்துவிட்டதா பாமனிக்கு?" என்று ஆத்திரப்பட்டான் விஜயநகர மன்னனுன புக்கதேவ மஹாராயன்.

இதற்குத் தக்க புத்தி கற்பிக்க விரும்பினுன் புக்கன். குல்பர்கா நகரத்துத் தூதுவர்களுக்கும், நடன கோஷ்டியினருக்கும் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அலங்காரம் செய்தான். அது மட்டுமா? எருக்கம் பூமாலை, கழுதைச் சவாரி: இந்தக் கோலத்துடன் அவர்கள் குல்பர்கா திரும்பிச் செல்லவேண்டும். அவர்கள் நகர எல்லையைத் தாண்டியதும், 'எங்கே கீழே இறங்கி அலங்காரத்தைக் கலைத்துவிடப் போகிருர்களோ' என்று ராஜ்யத்தின் எல்லைப்புறம் வரையில் அவர்களுக்குப் பாரா வேறு கொடுத்தனுப்பினுன். எல்லோரும் நகைத்துப் பாமனி மன்னனைப் பரிகசித்தனர். நடன கோஷ்டியினர் அவமானத்தால் வெட்கிப் போய் உடல் குன்றி ஊரை அடைந்தனர்.

4

பாமனி ஸுல்தான் இதனைக் கண்டு பொருமலே தான் விஜயநகரத்தின்மீது படையெடுத்து வர விரும்பினுன். பேஷ்வா எவ்வளவோ தடுத்துப் பார்த்தான்; முடியவில்லை. கடைசியில் படையெடுப்பு நடந்தே முடிந்தது. இருதரத்தாருக்கும் பெருத்த சேதம். அதனை நாம் விவரிப்பானேன்? கி. பி. பதினுன்காம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நடந்த இப்போரில் விஜயநகரப் படையில் மொத்தம் ஐந்து லக்ஷம் பேர் இறந்திருப்பர் என்று கூறுவர்.

எப்படியாயினும் என்ன? முடிவில் புக்கதேவ ராயன் வஞ்சிக்கப்பட்டான்; பாமனி ஸுல்தான் விரித்த வலையில் சிக்கிக்கொண்டான். மேற்கொண்டு போரை நடத்த முடியாதவாறு அகப்பட்டுக் கொண்டான். சமாதானம் செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ராஜிப்பேச்சும் நடந்தது. அப்பொழுது என்ன செய்வது? பாமனி ஸுல்தான் விஜயநகரத்துக் கஜானாவின்பேரில் தான் முன்னம் கொடுத்த தரிசன உண்டியலுக்குப் புக்கதேவ ராயன் பணம் கொடுத்தாக வேண்டும் என்று வற்புறுத்தினன். அதனை மறுக்கமுடியாமல் புக்கதேவனும் ஒப்புக்கொண்டு அதன்படி பணத்தைக் கொடுத்தான்.

இந்த நியாயம் எப்படி?

‘ அந்தச் சனியன் ’

1

“ பொழுது சாய்ந்துவிட்டதே. எவ்வளவு நேரம் இங்கே உட்கார்ந்திருப்பது ? அவரவர் வீட்டிற்குப் போகவேண்டாமா ?” என்றார் ஒருவர்.

“ ஆமாம், இதென்ன பெருத்த மானக்கேடாக இருக்கிறதே ! வெளியில் தலையை நீட்ட முடியவில்லையே !......... அடே, யார் அங்கே ? அந்தச் சனியன் ஒழிந்துபோய்விட்டதா ? பார் ” என்று வேலையாளைக் கூப்பிட்டு ஏவினார் மற்றொருவர்.

இவ்விருவரைப்போல இன்னும் நாலைந்து பேர்கள் இருந்தனர் அவ்வறையில். ஒருவரைப்போலவே மற்றவரும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். எப்படியாவது வெளியேறி வீட்டிற்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்ற ஒரே துடிதுடிப்புத்தான் ஒவ்வொருவர் மனத்திலும்.

அவர்கள் கூடியிருந்தது ஒரு விசாலமான அறை ; அரண்மனைபோன்ற உன்னதமான மாளிகையின் மேல் மாடியில் தெருவைப் பார்த்தாற்போல முன்புறமாக அமைந்திருந்தது. அந்த அறையின் பெரிய ஜன்னலண்டை நின்று பார்த்தால் தெருவிலும் பக்கங்களிலும் நடப்பவை யாவற்றையும் காணலாம். ஆயினும் ஒருவருக்கும் ஜன்னல் பக்கம்போய் எட்டிப் பார்ப்பதற்கு வேண்டிய தைரியம் இல்லை.

அந்த அறையின் தளம் முழுவதும், நடப்பவர்கள் காலில் அணிந்திருக்கும் பூட்ஸ் நிலத்தில் பட்டுச் சப்தம்

கேட்காதவாறு, உயர்ந்த பாரசீக ரத்ன கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. சுவர்ப்பக்கத்தே பலவிதமான சித்திர வேலைப்பாடு அமைந்த மெல்லிய துணிப்படுதாக்கள் உள் இருக்கும் விகாரங்களை மறைப்பன போலத் தொங்கிக் கொண்டிருந்தன. ஜன்னல்களிலும் வாசற்படிகளிலும், உள்ளே நடப்பவற்றை வெளியிலுள்ளோர் கண்டு கொள்ளாதவாறு மறைக்கும் திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

அறையின் மத்தியில் ஒரு பெரிய வட்டமேஜை போடப்பட்டிருந்தது. அவர்கள் அந்த மேஜையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டுதான் முக்கியமான விவகாரங்களை நடத்துவது. ஆனால் அன்றைத்தினம் அவர்கள் மேஜையண்டை உட்கார்ந்திருக்கவில்லை. முக்கியமான வேலை முடிந்துவிட்டது; வீட்டிற்குப் போவதற்குக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

மாலைப்பொழுதுடன் குளிரும் வந்துவிட்டது. உதறி எடுக்கும் குளிரைப் போக்குவதற்கு அந்த அறையின் ஒரு மூலையில் பெரிய கணப்பு ஒன்று 'கண கண' என்று ஜொலித்துக்கொண்டிருந்தது. அவர்கள், தங்கள் நாற்காலிகளைக் கணப்பின் பக்கத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு சிறிது அங்கே உட்காருவதும், சிறிது அந்த அறையில் குறுக்கு நெடுக்காக உலவுவதுமாக முள்ளின்மீது இருப்பதுபோலப் பொழுதைப் போக்கி வந்தனர். எஜமானர்கள் உத்தரவுப்படி ஏவலாளன் வெளியே எட்டிப் பார்த்தான். 'அந்தச் சனியன்' ஒழிந்த பாடில்லை; அங்கேதான் இருந்தது.

இதனை அவர்களிடம் எப்படித் தெரிவிப்பது என்பது அவனுக்குப் புரியவில்லை. ஒருகால் அவர்கள்கோபத்தால் வெறிகொண்டு எங்கே தன்னுடைய உத்தியோகத்

திற்கே உலே வைத்துவிடுவார்களோ என்று பயப்பட்டான் போலும்! மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் கையைப் பிசைந்துகொண்டு நின்றான்.

அவனுடைய நிலைமையைக் கண்ட அவர்களுடைய கோபம் உண்மையிலேயே கரைகடந்து விட்டது. ஆயினும் அவர்களால் என்ன செய்யமுடியும்? 'அந்தச் சனிய' னிடத்தில் அவர்கள் கைவரிசை ஓங்கவில்லை.

2

அவர்கள் கையால் ஆகாதவர்கள் அல்லர். அவர்கள் எல்லோருமே மகா சாமர்த்தியசாலிகள் ; லக்ஷப் பிரபுக்கள். அவர்கள் குறிப்பை அறிந்து நடப்பதற்கென்றே வேலையாட்கள் பலர் காத்திருந்தனர்.

அவர்கள் வசம் அஞ்சா நெஞ்சினர்களாலாகிய பட்டாளங்கள் இருந்தன, திரண்ட ஐசுவரியமும் உண்டு. தங்கள் திரவியத்தையும் படைவலிமையையும் கொண்டு அவர்கள் பெரிய கண்டத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்தனர்.

அவர்கள் முதல் முதல் வியாபாரிகளாக நம் நாட்டில் புகுந்து காலக்கிரமத்தில் நாடு முழுவதையும் கைக்கொண்டு அரசு செலுத்திய கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்கள் ஆவர். அவர்கள் கூடியிருந்த கட்டிடம் இங்கிலாந்தின் தலைநகரான லண்டன்மா நகரத்தில் லெடன்ஹால் வீதியில் இருந்த அவர்களுடைய தலைமை ஸ்தாபனமாகும்.

நகரத்தின் ஜனநெருக்கமான பாகத்தின் மத்தியில் அமைந்திருந்தது அந்த மாளிகை. அந்த வீதியில் ஜனங்களின் போக்கு வரத்து இராப்பகல் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும். வீதியில் போவோர் வருவோர் கம்பீரமான அந்தக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்து

அகமகிழ்ந்து செல்வர். 'பணம் காய்ச்சிமரம்' வளரும் நாடெனக் கருதிய இந்தியாவில் ஊழியம் செய்து பைநிறையப் பணம் சம்பாதித்து ஊர் திரும்பியவர்கள் 'நவாபு'கள்போல வாழ்க்கை நடத்திவருவதைக் கண்ட அவர்கள், அந்தக் கட்டிடத்திற்குள்ளேயே பொன்னும் மணியும் குவிந்துகிடந்தன என்றே எண்ணினர்கள்.

கம்பீரமான அந்தக் கட்டிடத்தை அடைவதற்கு வீதியினின்றும் பல படிகள் ஏறி உயரமான வாசற்படியைத் தாண்டிச் செல்லவேண்டும். வீதியில் படிகளின் அடியில் 'அந்தச் சனியன்' நின்றுகொண்டிருந்தால் என்ன செய்வது ?

அப்படியும் அவன் ஒன்றியாக நின்றுகொண்டிருந்தானு ? எப்பொழுதும் அவனைச் சுற்றித் திருவிழாக் கூட்டம். அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டுதான் உள்ளேயோ வெளியேயோ செல்ல வேண்டும். அவர்கள் தலையைக் கண்டவுடன் கூட்டத்தில் உள்ளவர்கள் கைகொட்டிச் சிரித்துக் கேலி செய்தார்கள்.

அந்தக் கட்டிடத்திற்கு மற்ருெரு வாசலும் இருந்தது. அது திட்டிவாசல் ; பின்புறம் இருந்தது. அந்தப் புறத்தே இருந்தது பெரிய வீதியல்ல : ஒரு சிறிய சந்து. அதன் வழியாக 'லெடன்ஹால் மார்க்கட்டு'க்குப் போகலாம். அவர்களுக்கு அந்தத் திட்டிவாசல் வழியாகப் போவதற்கு மனம் ஒருப்படவில்லை.

அது அவர்களைப்போன்ற எஜமானர்களுக்கு ஏற்பட்டதன்று. ஆசார வாசலில் நுழைய யோக்கியதையற்ற ஊழியர்களுக்கென்று ஏற்பட்டதாகும். அவர்கள் திருடர்களா அல்லது ஊழியர்களா, திட்டிவாசல் வழியாகத் தலைமறைந்து வெளியில் செல்வதற்கு ?

டைரக்டர்களும் சும்மா இருக்கவில்லை ; அவனை அப்புறப்படுத்துவதற்குத் தங்களால் இயன்ற மட்டும் முயன்று பார்த்தார்கள். அரசாங்கத்துக்கும் நகரசபைக்கும் கடிதத்தின்மேல் கடிதமாக எழுதினார்கள். அரசாங்கமும், நகரசபையும் அவனை என்ன செய்யமுடியும் ? ஒரு குற்றமும் அவன் செய்யவில்லையே ! எதற்காக அவனைத் தண்டிப்பது ? அவர்களும் செய்யும் வழி அறியாமல் திகைத்தனர். அவன் மக்களுக்கு நன்மையே செய்துவந்தான். நகர சபையினர் செய்யவேண்டிய வேலையை அவர்களிடமிருந்து ஊதியம் ஒன்றையும் எதிர்பாராமல் அவனே செய்துவந்தான் ! அதற்காகவா அவனைத் தண்டிப்பது ?

அவன் அவர்களை வையவும் இல்லை ; திட்டவும் இல்லை. துடைப்பம் கொண்டு அந்தக் கட்டிடத்தின் முன்னால் தெருவைக் கூட்டிவந்தான் ; போவோர் வருவோருக்குத் தன் சுயசரிதையைக் கூறிவந்தான். அதுவே அவர்களுக்கு ஆத்திரமூட்டியது.

3

அவன் நல்ல உயரமும் கம்பீரமான தோற்றமும் உடையவன். பார்வைக்கு ஐம்பது வயது என்று மதிப்பிடத் தகுந்தவன். அவன் தோல் இங்கிலாந்தில் உள்ளவர்களுடையதைப்போல வெளுப்பாக இல்லை. அவன் அதிககாலம் உஷ்ணப் பிரதேசத்தில் வாழ்ந்துவந்தமையால் தோல் கொஞ்சம் கறுத்திருந்தது.

அவன் உடுத்திருந்த உடையும் ஒரு காலத்தில் நன்றாக இருந்திருக்க வேண்டும். இப்பொழுதோ சாயம் வெளுத்துப்போயிருந்தது. சட்டை நிஜார் ஆகியவற்றின்

ஓரத்திலுள்ள கரை நைந்து நூல்கள் வெளிவந்து 'ஜாலர்கள்' போலத் தொங்கிக்கொண்டிருந்தன.

அவன் துடைப்பங்கொண்டு தெருவைப் பெருக்கிக் கொண்டிருந்தாலும், பார்ப்பவர்களுக்கு அவன் ஒரு தோட்டி அல்லன் என்பது நன்கு விளங்கிவிடும். அவன் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றே நினைப்பார்கள்.

"ஏன் அப்பா, உன்னைப் பார்த்தால் தோட்டியாகத் தோன்றவில்லையே ; இந்த இழிதொழிலை ஏன் செய்கிறாய் ?" என்று யாராவது கேட்டுவிட்டால் போதும்.

" பிரபுக்களே, உண்மைதான். நான் பரம்பரைத் தோட்டி அல்ல. ஒரு காலத்தில் கௌரவமாக வாழ்ந்தவன்தான். இப்பொழுது என்ன செய்வது ? வயிறு ஒன்று இருக்கிறதே. அதை வளர்க்க ஏதாவது செய்தாக வேண்டாமா ? என் வாழ்நாட்களையெல்லாம் இவர்களுக்கு உழைத்துக் கழித்தேன். சில்லறை வேலைக்காரனாக அல்ல ; ஒரு மாகாணத்தின் கலெக்டராக. உற்றார் உறவினரை விடுத்துக் கண்காணாத தேசத்துக்குச் சென்று பணம் சம்பாதித்துக் கொடுத்தேன். நீங்களே பாருங்கள் : இவ்வளவு பெரிய மாளிகை கட்டுவதற்குப் பணம் எங்கிருந்து வந்தது ? உடலில் சக்தி இருக்கும் வரையில் நான் வேலை செய்தாகிவிட்டது. எதற்கும் இனிப் பயன்பட முடியாத இந்தச் சக்கையை வைத்துக் கொண்டு இனி எப்படிக் காலம் கழிக்கப்போகிறேனோ ! கடைசிக்காலத்தில் ஏதோ மிஞ்சியிருக்கும் என்னுடைய நாட்களை நிம்மதியாகக் கழிக்க வழியில்லையே ! கிழ வேலைக்காரனாகிய எனக்குக் கொடுத்துவரும் உபகாரச் சம்பளத்தை இவர்கள் கொடுக்கமுடியாது என்று மறுத்து விட்டனர். அந்தப் பணத்தைக் கொண்டு

இவர்கள் இன்னும் ஓர் அடுக்கு மாடி கட்டிக்கொள்ளட்டும்! உங்களைப்போன்ற புண்ணியவான்கள் இருக்கும் வரையில் எனக்குப் பயமில்லை; கடவுள் என்னைக் கைவிட்டுவிட மாட்டார்." — இவ்விதம் உபந்நியாசம் செய்ய ஆரம்பித்துவிடுவான் அவன். தெருவில் போவோர் வருவோரைச் சும்மா இழுத்து உறவு கொண்டாடுபவனுக்கு யாராவது இப்படிக் கேட்டால் போதாதா?

அவனைச் சுற்றி ஒரு சிறிய கூட்டமும் கூடிவிடும். அதற்குமேல் கேட்பானேன்? கூட்டம் சேரச்சேர அவனுடைய பிரசங்கமும் விரிவடைந்து விறுவிறுப்பாக வளரும். அவ்விதம் கூடியவர்களில் யாராவது அவனுடைய நிலைமைக்கு இரக்கப்பட்டு ஒரு பென்னி பிச்சை வழங்கினால் அதனை மரியாதையுடன் வாங்கிக்கொண்டு அவருக்குச் சலாம் செய்துவிட்டுப் பையில் போட்டுக் கொள்வான்.

4

இவ்வித நிலைமையில் இருந்தவன் **தாமஸ் ஸ்நாட்க்ராஸ்** என்பவன். அவன் இந்தியாவில் சென்னை மாகாணத்திலே கலெக்டராக இருந்தவன்.

அவன் தந்தை கபரியேல் ஸ்நாட்க்ராஸும் கிழக்கிந்தியக் கம்பெனியில் உத்தியோகம் வகித்துவந்தவன். கும்பினியாருக்குக் கடலில் செல்லத்தக்க மரக்கலங்களைக் கட்டிக் கொடுப்பதற்காக அவன் இந்தியாவிற்கு வந்திருந்தான். அக்காலங்களில், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கும் மற்றத் தேசங்களுக்கும் சென்றுவந்த கப்பல்கள் எல்லாம் இந்தியாவில்தான் கட்டப்பட்டு வந்தன. அவன் வேலையினின்றும் விலகி ஊர் திரும்பிய பிறகும், அங்கே கும்பினியாரின் கடற்

போக்கு வரத்தைக் கண்காணிக்கும் 'ஸர்வேய'ராக இருந்துவந்தான்.

இவ்விதம் ஊழியம் செய்துவந்த தந்தையின் சிபார்சினுல்தான் மகனுக்கும் கும்பினியார் உத்தியோகம் அளித்தார்கள். தாமஸ் சென்னைக்கு ஒரு குமாஸ்தாவாக வந்துசேர்ந்தான். கொஞ்சம் கொஞ்சமாக உத்தியோகத்தில் உயர்ந்து முறையே கிட்டங்கி அதிகாரி, வியாபாரி, நிர்வாக உதவியாளன் என்ற பதவிகளை அடைந்தான்; கடைசியாகக் கஞ்சம் பிரதேசத்திற்கு ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டான்.

அது அவன் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை உண்டுபண்ணியது. அக்காலத்தே இந்தத் தேசத்தில் வளர்ந்துவந்த 'பணம் காய்ச்சி மர'ங்களை ஒருவர் நன்ருக உலுக்கினுல் கீழே உதிரும் பணத்தை அள்ளிக் கொண்டு வந்துவிடலாம் என்று மேல் நாடுகளில் உள்ளவர் எண்ணி வந்தார்கள். தாமஸும் அவ்விதமே பணம் சேர்க்க ஆசைப்பட்டான். அதில் ஓர் அளவு வெற்றிபெற்ருன் என்றே கூறவேண்டும்.

அவனுக்குக் கோபாலகிருஷ்ணம்மா என்ற துபாஷி ஒருவன் இருந்தான். அந்தக் காலத்து வழக்கப்படி ஸ்நாட்க்ராஸ் தன்னுடைய அலுவல்கள் எல்லாவற்றையும் துபாஷியின் மூலமாக நடத்தி வந்தான். துபாஷி நல்ல சாமர்த்தியசாலி; அதிகாரியின் முகம் கோணுமல் அவன் இஷ்டப்படி நடந்து தன்னுடைய காரியங்களையும் சாதித்துக்கொள்ளும் திறமைவாய்ந்தவன். கஞ்சம் பட்டினத்தினின்றும் பத்துமைல் தூரத்தில், சில்கா ஏரிக்கரையை ஒட்டி, ரம்பா என்னும் இடத்தில் ஸ்நாட்க்ராஸ் தனக்காக ஒரு பெரிய மாளிகையை நிர்மாணம் செய்துகொண்டு எப்பொழுதும்

அந்த மாளிகையிலேயே வாசம் செய்துவந்தான். அது ஒரு கேள்விலாசமாகவே விளங்கியது.

அக்காலத்திலே நாட்டில் கொடிய பஞ்சம்; ஜமீன்தார்கள் கும்பினியாரின் ஆதிக்கியத்தை ஒப்புக்கொள்ளாமல் கலகம் விளைத்து வந்தனர். ஒருவர் இருவர் செலுத்தும் வரிப்பணமும், பஞ்சத்தால் வாடும் குடிமக்களுக்கு உதவிசெய்வது என்னும் சாக்கைக்கொண்டு கட்டிடங்களை எழுப்புவதில் செலவு செய்யப்பட்டு வந்தது; சர்க்கார் கஜானுவுக்கு ஏதும் எட்டவில்லை. ரெஸிடெண்டு, அவனுடைய துபாஷி ஆகியவர்கள்மீது புகார்கள் கிளம்பின. அதனால் அந்த உத்தியோகத்தையே எடுத்துவிட்டுக் கலெக்டர் என்னும் அதிகாரியை நியமித்தனர் கும்பினியார். பால்போர் என்னும் புதிய கலெக்டர் வந்துவேலையை ஒப்புக்கொண்டான்.

ஸ்நாட்க்ராஸ் சென்னையில் நான்கு வருஷம் வேலையின்றிச் சுற்றிக் கொண்டிருந்தான். ஆயினும் மீண்டும் அதே ஜில்லாவுக்குக் கலெக்டராக வந்துவிட்டான். இப்போது கோபாலகிருஷ்ணம்மா துபாஷியாக இல்லை; பதிலாக ஜகந்நாத ராவ் என்பவன் வந்துசேர்ந்தான். யாராக இருந்தால் என்ன? 'யதா ராஜா ததா ப்ரஜா'. துபாஷி கச்சேரி கஞ்சத்தில்; கலெக்டர் முகாம் ரம்பா மாளிகையில். இவ்விதம் பழையபடியே தர்பார் நடந்து வந்தது. கலெக்டர் மாளிகையில் எப்பொழுது பார்த்தாலும் சிரிப்பும் வேடிக்கையுந்தான். அவன் மனத்திற்கு உகந்தபடி நடக்க நடன மாதர்கள் பலர் இருந்து வந்தனர். ஏராளமான சிப்பந்தி வர்க்கமும் இருந்தது. இவ்வளவு பேர்களுடைய செலவுக்கும் துபாஷி பணம் வசூல் செய்து அனுப்பவேண்டும். லஞ்சப்பேய் தாண்டவம் ஆடியது. சர்க்காருக்குக் கிஸ்தி வந்து சேர

வில்லை. அதற்குக் காரணங்களா கண்டுபிடிக்க முடியாது? மழையின்மை, பயிர்கள் சரியான காலத்தில் விளையாமை, ஜமீன்தார்களுக்குள் கலகம், காட்டு ஜாதியார் தொந்தரவு - இவை யாவும் ஒன்ருகச் சேர்ந்து கொண்டமையாலே குடிமக்கள் கிஸ்திப் பணத்தைக் கட்டமுடியாமல் தவித்தனர் என்று கூறினுன் ஸ்நாட்க்ராஸ்.

அரசாங்கத்தார் அதனை ஒப்புக் கொள்ளவில்லை. அதனுல் அவர்கள் ஸ்நாட்க்ராஸுக்குப் பதில் கலெக்டராக ப்ரௌன் என்பவனை நியமித்தார்கள். புதிய கலெக்டர் வந்து பொறுப்பை ஏற்றுக்கொள்வதே பெருத்த கஷ்டமாகிவிட்டது. பழைய கலெக்டர் தன் அதிகாரத்தை விட ஒப்பவில்லை. எப்படியோ புதிய கலெக்டர் 'சார்ஜ்' வாங்கிக்கொண்டான்.

ஸ்நாட்க்ராஸ் நிர்வாகத்தைப்பற்றி நாம் இப்பொழுது ஒன்றும் கூற முடியாது. அந்தக் காலத்துக் (1793—1801) கணக்குகள் யாவும் சில்கா ஏரியில் எறியப்பட்டு விட்டனவாம்; இப்போது ஒன்றுமே இல்லை. "என்னைப்பற்றிய புகார்களை விசாரிக்க இவ்விடம் வந்தாயோ, உன் உயிரை வாங்கிவிடுவேன்" என்று ஸ்நாட்க்ராஸ் புதிய கலெக்டரைப் பயமுறுத்தியதாகவும் கேள்வி. மறுபடியும் ஸ்நாட்க்ராஸுக்கு உத்தியோக 'அஞ்ஞாத வாஸம்'. கடைசியாக வேலையை விட்டு நீக்கப்பட்டு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தான், அவன் இந்தியாவில் இருபத்தேழு வருஷங்கள் இருந்தான். அக்காலங்களில் சம்பளம் மிகவும் சொற்பம். எனினும் ஊர் திரும்பும்பொழுது மிக்க பணம் குவித்திருந்தான்.

5

ஸ்நாட்க்ராஸிடம் வேண்டிய பணம் இருந்த தாயினும் அவன் வகித்திருந்த பதவிக்கு ஏற்ற கௌரவம் வாய்க்கப் பெறவில்லை. அவன் உத்தியோ கத்தைத் திறமையுடன் நிர்வகிக்கவில்லை என்றே கருதினார்கள் கும்பினி அதிகாரிகள். அதனால் வேலையி லிருந்து நீங்கியவர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கும் உபகாரச் சம்பளத்தை அவனுக்கு வழங்க மறுத்தார் கள். ஸ்நாட்க்ராஸுக்குப் பென்ஷன் பணம் அவசிய மில்லை. எனினும் அது மறுக்கப்பட்டதைத் தனக்கு நேர்ந்த பெரிய அவமானமாகவே கருதினான் அவன். ஆகவே அதை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்று தீர்மானித்து அதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்தான்; நயவார்த்தைகள் சொன்னான்; ஸ்தோத்திரம் பண்ணினான்; பயமுறுத்தி னான். கும்பினி டைரக்டர்கள் ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை.

முயற்சிகள் யாவும் வீணாயினமை கண்டு ஸ்நாட் க்ராஸ் கடைசியாக இந்த முறையைக் கையாண்டான். துடைப்பமும் கையுமாக அவர்கள் கச்சேரியின்முன் தோன்றித் தோட்டி வேலை செய்ய ஆரம்பித்தான். கீழ்வெட்டாகப் பேசிக் கும்பினி டைரக்டர்களை அவமானப்படுத்தினான்.

ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தை நிர்வகித்து ஆண்டு வந்த அவர்கள் தங்கள் காரியாலய வாசலில் நிற்கும் 'அந்தச் சனியனை' அப்புறப்படுத்த வழியறியாமல் திகைத்தனர். ஆகவே அவர்கள் ஸ்நாட்க்ராஸுடன் பேரம் பேச ஆரம்பித்தார்கள்.

"இது என்ன? உன்னுடைய கௌரவத்தைக் குறைத்துக் கொள்கிறாயே? உன் கஷ்டத்தைத் தெரிவித்தால் நாங்கள் உனக்கு உதவிசெய்ய மாட்டோமா? கவனிக்கமாட்டோமா? நீ இவ்விடத்தில் இருக்கக் கூடாது. உடனே வீட்டுக்குப் போய்விட வேண்டும். இந்தப் பக்கம் எட்டிப் பார்க்கக்கூடாது. நீ அவ்விதம் செய்வாயானால் நாங்கள் உன் உரிமையைப் புனராலோசனை செய்வோம்" என்று தங்கள் தூதன் மூலம் தெரிவித்தனர்.

ஸ்நாட்க்ராஸ் சிறிதும் பணியவில்லை. இருந்த இடத்தினின்றும் அசைவதற்குக் கூட மறுத்து விட்டான். "எனக்குச் சேரவேண்டிய பென்ஷனை நான் வேலையைவிட்டு விலகிய தேதியிலிருந்து இன்று வரைக்கும் மொத்தமாகக் கொடுக்கவேண்டும். இனி என் வாழ்நாள் முழுவதும் வழங்கும் உறுதியையும் அளிக்கவேண்டும். அதுவரையில் என்னால் நகர முடியாது" என்று அந்தத் தூதுவனிடம் தெரிவித்து விட்டான்.

வேறு வழியின்றி அவர்கள் கடைசியாக அவன் கேட்டபடியே உத்தரவிட்டனர். அதன் பின்னரே அவர்களால் வெளியே தலைகாட்ட முடிந்தது.

* * * *

[குறிப்பு :—ஸ்நாட்க்ராஸ் பின்னர் முப்பது வருஷங்கள் ஜீவித்துப் பென்ஷன் வாங்கிக்கொண்டிருந்தான். முந்தியும் பிந்தியும் இந்தியாவில் கவர்னர்களாகவும், கவர்னர் ஜெனரல்களாகவும், தளகர்த்தர்களாகவும் விளங்கிய பல பெரிய மனிதர்களோடு பழகியே தன் வாழ்நாளைக் கழித்தான். நீண்ட காலம் இந்தியாவில் வசித்து வந்தபடியால் இந்தியர்

களுடைய பழக்க வழக்கங்களில் பல அவனுக்குப் படிந்துவிட்டன. இங்கிலாந்திலும் அவனால் அவற்றை மாற்றி அமைத்துக்கொள்ள முடியவில்லை. பலர் அதைப் பார்த்துப் பரிகசித்தார்கள். அவனை மூலாதார மாகக் கொண்டுதான் சார்லஸ் டிக்கன்ஸ் என்னும் ஆங்கில நாவல் ஆசிரியர் **பிக்விக் பேபர்ஸ்** என்னும் புத்தகத்தில் ஸ்நாட்க்ராஸ் என்னும் பாத்திரத்தைச் சிருஷ்டி செய்திருக்கிறார்.]

நடன ஸரஸ்வதி

1

அவன் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அவன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டான். அவன் கண்ட காட்சி அவன் மனத்தே பலவிதமான எண்ணங்களை எழுப்பின.

'என்ன ஆச்சரியம்! ஒதுக்குப் புறமாயுள்ள இந்த நாட்டுப்புறத்தில் கூடவா இவ்விதம் நாட்டியம் ஆடக் கூடியவர்கள் இருக்கிறார்கள்? உலகானுபவத்தைச் சிறிதும் அறியாத அந்தப் பெண் பிடிக்கும் அபிநயம் பழுத்த கலைஞனுக்குக்கூட வராதே! தான் அனுபவிப்பதோடு அதைக் கண்ட பிறரும் ரஸிக்கும் வண்ணம் உணர்ச்சிப் பெருக்கோடு விளங்கிய அவளுடைய நடனத்தை யார்தாம் மெச்சமாட்டார்கள்! உண்மையில் அவள் கலையின் உச்சியை எட்டிப் பிடித்துவிட்டாள் என்றே கூறவேண்டும்!'

அவன் இவ்விதம் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

ஆனால் வாஸ்தவமாக அவன் மனத்தை அலைத்து அவனை மயக்கி நிலைகுலையச் செய்தது அவளுடைய அற்புதமான நடனமா, அபிநயத்தில் அவள் எடுத்துக் காட்டிய அவளுடைய அங்க பாவங்களோடொத்து அவற்றின் பொருளைக் கூறுவதுபோல அர்த்த புஷ்டியுடன் அவள் பாடிய பாடலா, கேட்பவர் காதுகளைக் குளிரச் செய்த அவள் குரலா, அல்லது எல்லாவற்

றுக்கும் மேலாக அவள் முகத்தில் தோன்றிய பொலிவா என்பதை நிச்சயமாகக் கூறமுடியாது. எவ்விதமோ அவள் மன்னன் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டாள்.

அவளுக்கு வயசு அதிகம் ஆகவில்லை : பதினைந்து பதினாறுதான் இருக்கும். குறுகுறுவென்ற விழிகளும் களைசொட்டும் முகமும் பெற்றிருந்த அவள் அழகு ராணியாகவே விளங்கினாள். அதனுடன் கலாபூர்ணையாக விளங்கிய அவள் மையலில் அரசன் சொக்கிப்போனதில் ஆச்சரியமே இல்லை.

அவள் அரச குடும்பத்திலே பிறக்கவில்லை என்பது உண்மைதான். அதனால் என்ன ? அரசியாக - அல்ல, ஒரு ஸாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக - விளங்குவதற்கு வேண்டிய சகல அம்சங்களையும் பெற்றிருந்தாள்.

சாந்தல தேவி சாதாரண குடும்பத்தில் பிறந்தவள் தான். அவள் தகப்பன் ஒரு பேர்கடே - கிராம அதிகாரி; மிகுந்த சாமர்த்தியசாலி. சுற்றுப் பக்கங்களில் வாழ்ந்து வந்த குடிமக்கள் அவனை அரசனைப்போலவே மதித்து வந்தார்கள். அவர்கள் அரசனை எங்கே பார்க்கிறார்கள் ? அடிக்கடி பார்ப்பது அவன்கீழ் அதிகாரியான பேர்கடே மாரசிங்கையாவைத்தானே ?

சாந்தையைக் குடிமக்கள் தங்கள் கண்ணுக்குக் கண்ணாக மதித்துப் போற்றி வந்தார்கள். அவளும் நாட்டுப்புறத்தில் சுயேச்சையாகச் சுற்றித் திரிந்து வந்தாள்.

இத்தகைய பெரும்பதவி தனக்குக் கிட்டும் என்று அவள் கனவிலும் கருதவில்லை. அரசன் மனைவியாக அந்தப்புரத்தை அடைந்தால் எங்கே தன்னுடைய சுயேச்சை போய் விடுமோ என்று பயந்தாள்.

அந்தப்புரத்தில் உள்ளவர்கள் தங்கள் இஷ்டம்போல வெளியே எங்கும் போக முடியாதே!

அரசன் விருப்பத்துக்கு இணங்க அவள் முதலில் இசையவில்லை. அரண்மனையின் சுகபோகங்களை அனுபவிக்க அவளுக்கு ஆசைதான். ஆனால் அது சுயேச்சையை விட முக்கியமானது ஆகாது.

அவளுடைய தாய் தந்தையர்களோ தங்களுக்குக் கிட்டாத பாக்கியம் கிடைத்தது என்று மகிழ்ந்தார்கள். எப்படியாவது அந்த ஸம்பந்தத்தை முடித்துவிட வேண்டும் என்று துடித்தார்கள். எனினும் சாந்தையின் விருப்பத்துக்கு மாறாகப் போவதற்கு அவர்களுக்குத் துணிவு ஏற்படவில்லை.

தாய் தந்தையர் அவளுடைய க்ஷேமத்தைக் கருதுபவர்களே. ஆனாலும் அவள் பணிந்தொழுகுவதற்குரிய ஆணை அவர்களிடம் இல்லை; குலகுருவான பிரபாசந்திர சித்தாந்த தேவரிடந்தான் இருந்தது. அவரும் அவளுக்குப் பலவிதமாக உபதேசம் செய்தார்.

"குழந்தாய், உலகத்திலே மனித ஜன்மம் எடுத்தவர்கள் தாங்கள் சுகம் அனுபவிப்பதையே கருதி அதற்காக வாழ்க்கையை நடத்தக்கூடாது. இங்கே அனுபவிக்கும் சுகத்தின் முடிவு பிறகு துக்கத்திலேயே கொண்டுவிடும். என்போன்ற முனிவர்கள் உடலை வருத்தி வாழ்வதன் தத்துவத்தை நீ அறிவாயே!

"குடிமக்களுக்கு நன்மையைச் செய்வதற்கான அரிய சந்தர்ப்பம் உனக்கு வாய்த்திருக்கிறது. ஆகவே நீ உன் சுகத்தை மட்டுமே கருத்தில் கொண்டு வாழ்க்கையை நடத்தாதே. அரசியாகப் போகும் உனக்குக் குடிமக்கள் எல்லோரும் குழந்தைகள் ஆவர் என்பதை நினைத்துப் பார். தாய் தன் குழந்தைகளிடம் வைக்கும்

பிரியத்தைக் குடிகளிடம் வைத்து நீ அவர்களைக் காப்பாற்றுவாயாக.

“இத்தகைய பதவி உனக்கு ஏற்படப்போகிறது என்பதை நான் முன்னரே அறிவேன். அதற்கு யோக்கியதை உடையவளாகச் செய்யவேண்டியே நான் உனக்குச் சகல கலைகளையும் போதித்தேன். நீயும் அவற்றுள் அதி சீக்கிரமாகப் பாண்டித்தியத்தைப் பெற்றுவிட்டாய். மனிதர் உள்ளத்தை வசியப்படுத்து வதற்காக அவற்றை உபயோகப்படுத்தாதே. எம் பெருமான் சேவைக்கே அவை உகந்தவை. அதுவே புருஷார்த்தம்.

“உன் புருஷன், ஹொய்சல சக்கரவர்த்தி விஷ்ணு வர்த்தனனது மனம் கோணாமல் நடந்துவா. இதுவரை நீ கேட்ட உபதேசங்களைக் கருத்தில் வைத்து அவற்றின் படி நடந்தால் போதும். இறைவன் உனக்கு ஸர்வ மங்களமும் அளிப்பார்.”

சாந்தையை இவ்விதம் ஆசீர்வாதம் செய்து அனுப்பினார் முனிவர்.

2

“இந்த மானங்கெட்ட வாழ்க்கையை இனி நடத்த முடியாது. அரண்மனை என்றும் அந்தப்புரம் என்றும் இருந்த கௌரவம் முழுவதும் போய்விட்டதே!”

“எப்படி இருக்கும்? நாட்டுப்புறத்தில் மாடு மேய்க்கும் பிள்ளைகள் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கப் புளியமரத்தின் கீழும், ஆலமரத்தின் கீழும் கூத்தாடியவளை அரண்மனையில் கொணர்ந்து வைத்தால் அப்படித் தானே முடியும்?”

“இவள் துணியை வழித்துக் கட்டிக்கொண்டு கூத்தாடுகிறாளாம்; தெருவில் போகும் காலிகள் வந்து

பார்த்து மெச்சுகிருர்களாம். அவர்கள் பார்த்துத்தானே புகழவேண்டும் !''

“அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் ! ஜாதிக் குத் தகுந்த புத்திதானே இருக்கும் ? அவள் பிறந்த குலம் என்ன ? அரண்மனையை எட்டிப் பார்ப்பதற்கும் யோக்கியதை உண்டா ?''

“அவளைச் சொல்லி என்ன பயன் ? மஹாராஜாவை யன்றோ சொல்லவேண்டும் ? அவர் அழைத்து வந்து தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடினர். அவளுக்குக் கர்வம் ஏறிவிட்டது ; தலை கிறு கிறுக்கிறது ; இஷ்டப் படி ஆடுகிருள். மஹாராஜாவும் பார்த்துக்கொண்டு இருக்கிருர்.''

“அது மட்டுமா ? அவள் தன்வரையில் எப்படிப் போனாலும் போகிருள் என்று இருக்கலாமே ! உங்களைக் கூட அல்லவோ அலக்ஷ்யம் செய்து அவமானப் படுத்தப் பார்க்கிருள்.''

“நான் இன்றைக்கு முடிவாகக் கூறிவிடப் போகிறேன் மஹாராஜாவிடம் : 'வேண்டுமானல் அவளை வைத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்துங்கள். நான் குழந்தையை எடுத்துக்கொண்டு பிறந்தகம் போய் விடுகிறேன்' என்று.''

இவ்விதம் தீர்மானித்தாள், விஷ்ணு வர்த்தன னுடைய பட்ட மஹிஷியான லக்குமதேவி.

ராஜகுலத்தில் பிறக்காத ஒருத்தியைச் சக்கர வர்த்தி மணம் செய்துகொண்டு வந்தது பட்ட மஹிஷிக் குப் பிடிக்கவில்லை. அவள் மன்னனுடைய காதற் கிழத்தி ஆவாளேயன்றி அரசியாக முடியுமோ வென்றே வாதம் செய்துவந்தாள். ஆனல் மன்னனே அவளைத் தன் மஹிஷியாகக் கொண்டுவிட்டான். அதுமட்டு

மன்று. அவள் அரசனுடைய பிரிய தேவியாகவும் ஆகிவிட்டாள்..

பட்டத்து இளவரசனின் தாயாகிய பட்ட மஹிஷிக்கு இதில் அசூயை. சமயம் வாய்த்தபொழுதெல்லாம் அவள் சாந்தல தேவியை அவமானம் செய்ய முயன்று வந்தாள். அரசன் அன்பு உள்ளவரையில் சாந்தைக்கு அதைப் பற்றிய கவலேயே இல்லே. லக்கும தேவியின் செய்கைகளே அவள் அலக்ஷ்யம் செய்துவந்தாள்.

லக்குமதேவி பிறந்தது முதல் அரண்மனேயிலேயே வளர்ந்தவள். உள்ளத்தே தோன்றும் மனவெழுச்சி களே முகத்தில் காட்டாதவாறு புன்சிரிப்புடன் விரோதி களிடமும் சல்லாபம் செய்யும் ராஜதந்திர வித்தையை அவள் நன்கு அறிந்தவள். சாந்தல தேவியோ நேர் மாருனவள்; தன் மனத்தில் தோன்றியதை அப்படி அப்படியே சொல்லிவிடுவாள். மனத்திற்குப் பிடிக்கா விட்டால் அவளுடன் நெருங்கி உறவாடமாட்டாள். ஆனல் எந்தப் பகையையும் உடனே மறந்துவிடுவாள். நீடித்து நில்லாது.

அவர்களுக்குள் ஏற்பட்ட பிளவு மறுபடியும் ஒன்று சேருவதற்கு மார்க்கம் இல்லாமலே போய்விட்டது. லக்குமதேவி சும்மா இருக்கவில்லே. சதா சர்வ காலமும் அவள் சாந்தையைப்பற்றி மன்னனிடம் குறை கூறி வந்தாள். அரசன் முதலில் அதற்குச் செவிசாய்க்க வில்லே. ஆனல் எறும்பு ஊரக் கல்லும் தேயும் அன்ருே?

3

விஷ்ணுவர்த்தனனே அவன் கால்கள் தாமாகவே சாந்தையின் அரண்மனேக்கு இட்டுச் சென்றன. அவள்

நடத்தை அவனுக்கே பிடிக்கவில்லை. அவன் மனம் மட்டில் எங்கேயோ ஸஞ்சரித்துக் கொண்டிருந்தது.

துவார சமுத்திரம் (மைசூர் ஸம்ஸ்தானத்திலே இப்பொழுது ஹளேபீடு, அதாவது பழைய வீடு என்று வழங்கப்படும் நகரம்) வந்த பிறகு சாந்தலதேவி வாரம் தவருமல் வெள்ளிக்கிழமைதோறும் லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய இரு தேவியருக்கும் பூஜை நடத்திவந்தாள். ஒருத்தி ஐசுவர்யத்தின் அதிதேவதை; மற்றவள் கலைக்கு உரியவள். தனக்கு மட்டுமன்றி, தன் பதி அரசு புரியும் ராஜ்யம் முழுமையுமே பொருட் செல்வமும், கலைச் செல்வமும் பெருக அவள் அவ்விரு தேவியரையும் பூஜை செய்வது கிரமந்தானே?

அவள் தன் அரண்மனையின் முன்புறத்தி லிருந்த விசாலமான அறையில் பூஜா மண்டபத்தை நிறுவியிருந்தாள். ஒருபுறம் லக்ஷ்மியின் உருவம்; மலர்ந்த செந்தாமரையினின்றும் எழுந்தருளும் திருக்கோலம். மற்றொருபுறம் ஸரஸ்வதியின் திருமேனி; வீணை ஏந்தி வருடும் கோலம். இரண்டும் தங்கத்தால் வார்த்த விக்கிரகங்கள். அவற்றைக் கோபுரத்துடன் கூடிய வெள்ளி விமானங்கள் தாங்கி நின்றன. கிழக்கு முகமாகப் பக்கத்துக்கு ஒன்ருக அமைந்திருந்த அவ்விரு தேவியரின் திருவுருவங்களுக்கு மத்தியில் பீடத்துடன் கூடிய ஓர் ஆசனம் இருந்தது.

ஒவ்வொரு பூஜைக்கும் கட்டாயம் மன்னன் வருவான். தேவ பூஜை முடிந்தவுடன் தேவி சக்கரவர்த்தியைப் பீடத்தில் அமர்த்தி அவனுக்குப் பாத பூஜை செய்வாள். பிறகு அங்கே எதிரில் உட்கார்ந்து வீணையை மீட்டிக் கந்தர்வர்களையும் வெல்லக்கூடிய இனிய குரலில் தேவ கானத்தைப் பொழிவாள்.

முடிவாக அவள் தன் ஜீவனுன நாட்டியக் கலையின் பாண்டித்தியத்தையும் புலப்படுத்துவாள் ; அபிநயம் பிடிப்பாள்.

அதனைப் பார்க்க நகரமாந்தர் யார் வேண்டுமானு லும் வரலாம். கட்டுக்காவல் இல்லை. அவர்களை யாரும் தடுக்கமாட்டார்கள். அரசனைப் பின்பற்றிய வர்கள்தாமே குடிகள் ? அவர்கள் அதைப் பார்த்துப் பக்தி பரவசமாக வேண்டும் என்று விரும்பினுள் போலும் தேவி.

அன்றைத் தினமும் வெள்ளிக்கிழமை. ஆனால் மன்னனுக்கோ வழக்கப்படிப் பூஜைக்குப் போக மனம் வரவில்லை. அவன் மனத்துள் லக்குமதேவி மூட்டிய சினத்தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது.

சாந்தையின் அரண்மனையில் எப்பொழுதும் போலப் பெரிய கூட்டம். ஆஸ்தான வித்துவான்கள், மந்திரி பிரதானிகள் முதலிய பிரமுகர்கள் பலரும் குடி மக்கள் சிலரும் அங்கே பிரஸன்னமாகி யிருந்தனர்.

“இதென்ன சந்தைக் கூட்டமா? அந்தப்புரம் என்ற மரியாதை இல்லையா ?” என்று கோபித்துக் கொள்ள வாய் திறந்த அவன், பிரதம மந்திரியையும் ஆஸ்தான பண்டிதரையும் அங்கே கண்டுவிட்டான். அவன் தன் மனைவியை எப்படி வேண்டுமானுலும் கண்டிக்கலாம் ; அவமானப் படுத்தலாம். ஆனுல் அவர் களை அவ்விதம் உல்லங்கனம் செய்யலாமா ? கோபத்தை ஒருவாறு அடக்கி வாயை மூடிக்கொண்டான். எனி னும் அவன் மனம் குமுறிக்கொண்டுதான் இருந்தது. எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோலக் காணப்பட் டது அவன் முகம்.

சாந்தை அதைக் கவனித்துவிட்டாள். மஹாராஜாவுக்கு அத்தகைய கோபம் வரும்படி என்ன நடந்துவிட்டது என்பது அவளுக்குத் தெரியவில்லை. அதை அறிந்துகொள்ள அவள் தீவிரமாக யோசித்துப் பார்த்தாள். அவளுடைய மனச்சாந்தி கலைந்ததுதான் லாபம்; ஒன்றும் புலப்படவில்லை. 'தணியாக் கோபம் சும்மா போகாது; ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது' என்பதை மட்டில் அவள் உணர்ந்தாள்.

அவள் மனம் பூஜையில் லயிக்கவில்லை, யந்திரம் போல அவள் அதைச் செய்துவந்தாளே யன்றி அவள் அதனுடன் ஒன்றுபடவில்லை. மனம் எங்கேயோ திரிந்து கொண்டிருந்தது.

பாதபூஜை நடக்கவேண்டும். "சக்கரவர்த்தி இந்தப் பீடத்தில் எழுந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள் தேவி.

அவனுக்கு உட்கார மனசு இல்லை. "மேலே ஆகட்டும், ஒருவிதமாகச் சீக்கிரம் பூஜையை முடி" என்று பதில் சொன்னான் அவன்.

ஆனால் தேவி விடுவதாக இல்லை. ஆஸ்தான பண்டிதரின் பலவந்தத்தின்மீது அவன் உட்கார்ந்தான்.

கானத்துக்கும் நடனத்துக்கும் உரிய கட்டம் வந்தது. தேவியின் மனம் அவற்றின்மீது நிலைக்கவில்லை. கட்டுப் பிரிந்துபோயிற்று,

ஏதோ ஒருவிதமாக யாவும் முடிந்தன. கூட்டம் கலைந்ததும் கலையாததுமாக இருந்தது. அரசனால் தன்னுடைய ஆத்திரத்தை அடக்கி வைத்திருக்க முடியவில்லை. பீறிக்கொண்டு வெளிக் கிளம்பிவிட்டது அது.

"இனி இந்தக் கூத்தை என்னால் சகிக்க முடியாது. நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். இத்தகைய பூஜைக்கு

இன்றே கடைசி நாள். உன் கூத்தாட்டத்துக்கும் அப்படியே. இனி நாட்டியம் ஆடக்கூடாது.”

பிரமுகர்கள் சிலருடைய காதிலும் விழுந்து விட்டது அந்த ஆணை. அவன் ரகசியமாகக் கூறவில்லை. அவர்களும் கேட்கவேண்டும் என்றே கூறினுன் போலும்.

ஆனால் கலாரஸிகன், கானலோலன், நாட்டிய கலாப்ரதீபன் ஆகிய விஷ்ணுவர்த்தனன் கூறிய வார்த்தைகளா அவை ?

அந்த ஆணையைக் கேட்டபொழுது தேவியின் மனம் எத்தகைய நிலையில் அழுந்தி இருக்கும் ?

4

கொஞ்ச காலமாக ஒவ்வொரு நாளும் அர்த்தஜாம பூஜையின் பொழுது யாரோ ஒருத்தி தெய்வ ஸந்நிதானத்தில் நடனம் ஆடிவந்தாள்.

அர்த்தஜாம பூஜையின்போது ஸ்வாமி தரிசனத்துக்காக யாரும் அதிகமாக வரமாட்டார்கள். கோயிலில் சுவாமி காரியம் பார்க்கும் தேவகன்மிகளைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள். அதனுல் அவள் ஆட்டத்தை அப்பொழுது கண்டு மகிழக் கூடியவர் யாரும் இல்லை. பிறர் கண்டு மகிழவேண்டும் என்ரு அவள் நடனமாடினுள்? அல்லவே அல்ல. கடவுளுக்குச் செய்யவேண்டிய திருப்பணிகளுள் அதுவும் ஒன்ருயிற்றே. அதனைச்செய்து முடிக்க ஒருத்தி வேண்டாமா?

மன்னன் பிட்டிதேவன் எனப்படும் ஹொய்சல விஷ்ணுவர்த்தனன் தன் தலைநகரத்திலே எடுப்பித்த கோயில் அது. ஆம். அவன் முன்னம் மேற்கொண்டிருந்த புறச் சமயமான ஜைனமதத்தைத் துறந்து வைஷ்ணவ

சமயாசாரியராகிய ஸ்ரீராமானுஜ முனிவரிடம் உபதேசம் பெற்றுப் பரம பாகவதன் ஆனான். புதிய மதத்தின் பற்று அவனைப் பெரிதும் ஆட்கொண்டது.

பரதெய்வமாகத் தான்கண்ட எம்பெருமானுக்குத் தன் தலைநகரத்திலே ஓர் ஆலயம் எழுப்பினான். விஜய நாராயணஸ்வாமி ஆலயம் சித்திரம் சிற்பம் முதலிய கலைகளிடம் அவன் கொண்டிருந்த ஆர்வத்தை இன்றைக்கும் எடுத்துக் காட்டிக்கொண்டு விளங்குகிறது.

அத்தகைய கோயிலில் நித்திய நைமித்திக கருமங்களுக்கும் அவற்றை நடத்தி வைப்பாருக்கும் குறைவு உண்டோ? பணியாளர் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். எல்லாம் நிறைந்திருந்தன. ஆனால் ஒன்றுமட்டும் குறையாக இருந்தது.

எம்பெருமானுக்கு முன்னிலையிலேயே பூஜாவேளையில் தீபாராதனை நடக்கும்பொழுது நடனமாட நாட்டியப் பெண் ஒருத்தியும் இல்லை, அப்படி ஒருத்தியை நியமிக்க மன்னன் இஷ்டப்படவில்லை ; மறுத்துவிட்டான். நாட்டியத்தைப் பார்த்துப் பார்த்து அவனுக்கு அலுத்துவிட்டதா ? அதில் வெறுப்புத்தான் தட்டிவிட்டதா ? ஒருகாலும் அவ்விதம் நடந்திராது. நடனம் ஒரு தெய்வக்கலை. அதற்குப் பிறரைத் தன்னிடம் இழுக்கும் சக்தி உண்டே தவிர அவர்களைத் துரத்தும் வலிமை இல்லை.

தோகையை விரித்துக் கானமயிலாடக் கண்டிருந்த அவனுக்கு வான்கோழி தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடுவதைக் காணப் பொறுக்கவில்லையோ ? குழலினும் இனிய குயிலின் பாட்டைக் கேட்ட அவனுக்குக் காகம் தன் குரலை எடுத்துக் கரைவதைக் கேட்கச் சகிக்கவில்லையோ ?

எப்படியாயினும் நடனம் இல்லாமலே தேவபூஜை நடந்துவந்தது.

அன்றொரு நாள் ஸ்வாமி தரிசனத்துக்கு வந்த அவள் இதனை அறிந்து அப்படியே ஸ்தம்பித்து விட்டாள்.

"இவ்வளவு தூரம் சென்றுவிட்டதா?" என்று தன் வாய்க்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

சிறிது நேரம் வாய்மூடி மௌனியாக நின்றாள்.

'தேவபூஜையில் குறைவு ஒன்றும் ஏற்படக் கூடாது. நாட்டியப்பெண்ணை மஹாராஜா நியமிக்கா விட்டால் என்ன? அதை வேறு யாரும் செய்யக் கூடாதா? தேவதானத்திலிருந்து மானியம் கேட்டால் அல்லவோ மன்னர் உத்தரவு தேவை? ஊதியம் ஒன்றும் வேண்டாமல் தெய்வ கைங்கரியத்தைச் செய்யக் கூடாது என்று யாரால் தடுக்க முடியும்? அந்தப் பணியை நானே நிறைவேற்றினால் என்ன?' என்று எண்ணினாள். உடனே முடிவுக்கும் வந்துவிட்டாள்.

பட்டரைக் கூப்பிட்டாள். "ஸ்வாமி, அந்தப் பணியை அடியேனே செய்கிறேன். நட்டுவனாரை அழைத்து வாருங்கள்" என்று வேண்டிக்கொண்டாள்.

பட்டர் அவளை ஏற இறங்கப் பார்த்தார். ஒல்லி யான சரீரம்; உடம்பில் நகை ஒன்றும் இல்லை. சாதா ரணப் புடைவைதான் உடுத்திருந்தாள். அன்னம் கண்டு ஆறு மாதம் ஆனவள்போன்ற தோற்றம். கவலை தோய்ந்த முகம். ஆனால் முகத்தில் தனியான ஒருசாந்தி. குரலில் ஒரு கம்பீரம்.

பட்டருக்கு என்ன செய்வது என்று விளங்க வில்லை. அவளைப் பார்த்தால் நடனத்தைத் தொழிலாகக்

கொண்டவள்போலத் தோற்றவில்லை. யாரோ ஒரு குலஸ்திரீ யென்றே தெரிந்தது.

அவள் அதைச் செய்யலாமா? பிறர் அறிந்தால் என்ன சொல்வர்? நகைப்புக்கு இடமாயிற்றே. மஹாராஜா ஒருகால் கோபித்துக்கொண்டால் என்ன செய்வது? இவற்றுக்காக அவள் சிறிதும் கவலையுற்றவளாகத் தெரியவில்லை.

பட்டர் என்னவோ நொண்டிச் சமாதானம் சொல்லிப் பார்த்தார்; அது ஏறவில்லை.

நட்டுவன் வந்தான். பூஜையும் ஆரம்பமாயிற்று. அதனோடு அபிநயமும் தொடங்கியது.

பட்டருக்குத் தாம் காணுவது கனவா, நனவா என்பதே தெரியவில்லை. அன்று பல வருஷங்களாக அனுபவிக்கவேண்டிய கலையின் ரஸம் ஒருங்கே வெள்ளம்போலப் பொங்கி வருவதுபோலிருந்தது. நடனத்தின் அழகிலே ஈடுபட்ட அவருக்குப் பூஜையிலே வழக்கம்போல மனம் செல்லவில்லை. ஏதோ ஒருவிதமாகப் பூஜை நடந்தேறியது.

அதுமுதல் அவள் ஒவ்வொரு நாளும் அர்த்த ஜாம பூஜைக்கு வந்துவிடுவாள்; அந்த மனோகரமான நடனம் நடைபெறும்.

இதை ரகசியமாக வைத்திருக்க முடியுமா? செய்தி கொஞ்சம் கொஞ்சமாக ஊரில் பரவியது. கோவிலுக்குப் போகாதவர்களும் இந்த அதிசயத்தைப் பார்க்க அர்த்த ஜாம பூஜைக்குப் போக ஆரம்பித்தனர். அந்த அற்புத நடனத்தைக் கண்டவர் மறப்பரோ?

தினமும் அர்த்த ஜாம பூஜை திருவிழாவைப்போல நடந்துவந்தது. நாளுக்குநாள் கூட்டம் அதிகமாயிற்று.

இந்தச் செய்தி மன்னன் காதிலும் விழுந்தது.

முதலில் அவன் அதை நம்பவில்லை. ஊதியத்தை எதிர்பாராமல் கோயிலில் நடனமாட யார் முன்வந்திருக்கக் கூடும் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

அதனோடு அவனுக்கு ஒரு சந்தேகமும் உண்டாயிற்று. 'ஜனங்கள் அவளைக் கலாதேவியின் அம்சம் என்று கருதுகிறார்கள். அவ்வித ஞானம் படைத்தவள் நம் நாட்டிலே நமக்குத் தெரியாமல் வேறு யார் இருக்கிறார்கள்? ஒருகால் சாந்தல தேவியாகவே இருப்பாளா? அவள் அவ்வளவுதூரம் துணிந்துவிடுவாளா? அப்படியானால் அவள் நம் ஆணையையும் உதாசீனம் செய்துவிட்டாளா?'

அவன் இதை எதிர்பார்க்கவில்லை. எனினும் அதுதான் உண்மை. அரசன் பிரிய மஹிஷியான சாந்தல தேவியே சாதாரண நடனமாது ஒருத்தியைப்போலத் தினமும் கோவிலில் நாட்டியம் செய்துவந்தாள். மன்னன் இதை நிச்சயம் செய்துகொண்டான்.

அரசன் அடைந்த ஆத்திரத்தை நாம் விரித்துக் கூறமுடியாது. அப்போது அவள் அவனுக்கு எதிர்ப்பட்டிருந்தால் அவளுக்கு என்ன தண்டனை கிடைத்திருக்குமோ? கூற இயலாது. அத்தகைய கோபம் அவனுக்கு. எனினும் மன்னன் அவ்விதம் அவளை ஏதாவது துன்புறுத்தினால் நாட்டு மக்கள் அவனிடம் வைத்திருந்த மதிப்பு, பிரியம் என்னவாகும்?

அவளைச் சும்மா விடுவதா? அரசன் ஆணையை மீறியவர்கள் யாராக இருந்தால் என்ன? பாரபக்ஷம் பார்ப்பதாக இருந்தால் குடிமக்களின் க்ஷேமம், ராஜநீதி

என்னவாகும்? தன் உத்தரவை மீறிப் பெருங்கூட்டத்தினிடையே நடனம் புரியும் அவளுக்குத் தண்டனையாக மன்னன் அவளை அவ்வளவு பேர்கள் முன்னிலையிலும் அவமானப் படுத்துவதுதான் ஏற்றது என்று முடிவு செய்தான்.

அவன் தன் நிலையை மறந்துவிட்டானா? அவன் அவளுக்கு இட்ட கட்டளை அரசன் என்ற பதவியைக் கொண்டா? புருஷன் தன் மனைவியை அடக்கி ஆள நினைத்துச் செய்த முடிவே அது. அவள் அதனை மீறினால் அரசன் ஆணையை மீறுவதாகுமா?

5

வழக்கம்போல் கோயிலில் அர்த்தஜாம பூஜை நடக்கிறது. அவள் நடனமாடிக்கொண்டிருக்கிறாள். அதைப் பார்க்க ஏராளமான கூட்டம் கூடியிருக்கிறது; விஷ்ணுவர்த்தனனும் அந்தக் கூட்டத்துள் புகுந்து அவர்களுள் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்கிறான்.

அவள் நடனத்தில் லயித்திருந்த அவர்களுக்கு முன்னே அவளை அவமானப்படுத்தவேண்டும் என்பதே அவனுடைய எண்ணம். அதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்து நிற்கிறான்.

அவன் தனது ஆத்திரத்தில் மனித தத்துவங்களுள் முக்கியமான ஒன்றைக் கவனிக்கவில்லை. சங்கீதத்துக்கு உள்ள குணத்தை அவன் மறந்துவிட்டான். எத்தகைய குரோதத்தையும் கோபத்தையும் மாற்றவல்ல சக்தி அதற்கு உண்டு. கடும்பசியையும் மறக்கச் செய்யும்.

விஷ்ணுவர்த்தனன் அரிய கலைஞன் ; ரஸிகன் ; சிறந்த சாஸ்திரப் பயிற்சி உடையவன். சங்கீதத்திலும் நடனத்திலும் அவனுக்கு நிகராகவோ அதிகப்படி யாகவோ சாந்தல தேவியையன்றி வேறு யாரையும் கூறமுடியாது.

'கொலையாளியின் கொடூர சித்தத்தையும் மாற்றி விடும்' என்று புலவர் ஒருவர் புகழ்ந்து கூறும் கந்தர்வ கானம்போன்ற அது அவன் மனத்தையும் கவர்ந்தது. அது அதன் வேலையை, சாமர்த்தியத்தைச் சிறிது சிறிதாகக் காட்டி வலை வீசியது. மன்னனும் அதில் சிக்கிக்கொண்டான்.

அரசன் தன் கோபத்தை மறந்துவிட்டான் ; தேவி யின் கானத்திலும் நடனத்திலும் லயித்துவிட்டான் ; ஏகாக்கிர சிந்தை உடையவனாகி அவற்றை அனுபவித்து வந்தான்.

காணாத அதிசயம் ஒன்றைப் புதிதாக அப்பொழுது கண்டுவிட்டானா ? வெகு காலமாகக் கண்டும் கேட்டும் மகிழாத அவன் உள்ளத்தை அவை எளிதில் கொள்ளை கொண்டனவா ?

தேவியோ தன்னைச் சுற்றி நின்றிருந்த கூட்டத்தைக் கவனிக்கவில்லை. அவர்களைப் பற்றிய நினைப்பே இல்லை. அங்கே கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்மீது நிலைத்திருந்தது அவள் உள்ளம். அவள் நடனமாடுவது எதற்காக? பிறர் கண்டு மகிழவா? அவள் தன் கலையைப் பிரகாசிக்கச் செய்தாள். 'எம் பெருமான் பூஜை குறைவின்றி நடைபெறவேண்டும். அவருடைய சேவைக்காக உபயோகப்படுமாயின் அவள்

அந்தக் கலையைப் பயின்றதன் உன்னத நோக்கம் ஈடேறும். மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் தங்கள் கருமங்களின் பலனை அவனுக்கன்றோ அர்ப்பணம் செய்கிறார்கள்? அதுவன்றோ ஜன்ம ஸாபல்யம்? இதை நினைத்துத்தானே அவள் நடனமாடினாள்?

உண்மையில் அவள் தன்னைமறந்தே ஆடிவந்தாள்.

பூஜை முடிந்தது. நாட்டியமும் ஓய்ந்தது. தேவி களைத்துப்போய் விட்டாள்; உடல் துவண்டது; அவளால் நிற்கமுடியவில்லை. ஆனால் கூட்டமோ விலகவில்லை.

நல்ல காற்றுக் கிடையாது. கூட்டத்தை விலக்கிக் காற்றுப் புகுந்தால், அவள்மீது குளிர்காற்று வீசினால், களைப்பு நீங்கிவிடும். அவள் தெளிந்துவிடுவாள். ஆனால் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வெளியில் செல்லவேண்டிய சக்தி அவளுக்கு இல்லை. இன்னும் சற்றுப் போனால் அவள் அங்கேயே மயங்கி விழுந்துவிடுவாள்.

தெய்விக உணர்ச்சி மேலிட்டுத் தன்னை மறந்து நின்றவர்களுக்குத்தான் அது தெரியும். மன்னன் அதனை அனுபவித்திருக்கிறான். தேவியின் உடல்நிலையை அவன் ஒரு நொடிப்பொழுதில் அறிந்துவிட்டான்.

அவள் கலைவாணி மட்டுமன்று; அவன் மனைவி. இத்தகைய புத்துணர்ச்சியும் அவன் மனத்துள் பிறந்தது. கூட்டத்தை விலக்கிக்கொண்டு அவளை அணுகினான். தன் இருகைகளாலும் அவளைப் பிடித்துக் கீழே விழ முடியாதபடி தடுத்து இறுக அணைத்துக்கொண்டான். தேவியும் களைப்பு மேலீட்டால் தன் கண்களை மூடி அவன் தோள்மீது சாய்ந்துவிட்டாள்.

அப்பொழுதுதான் அங்கே கூடியிருந்தவர்கள் அரசனைக் கவனித்தனர். அவர்கள் பின்வாங்கினர். பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கத் தீர்த்த பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வந்த பட்டரும் பிரமித்து நின்றுவிட்டார்.

தேவிக்கு உணர்வு வந்துவிட்டது. சுற்று முற்றும் பார்த்தாள். தன்னைப் பிடித்து அணைத்திருக்கும் தன் கணவனை, மன்னனைக் கண்டாள். அவன் பிடியினின்றும் விலகி அவன் காலடியில் விழுந்தாள். கண்ணீர் ஆருகப் பெருக்கெடுத்து வழிந்தது.

மன்னன் மனத்துள் ஒரு பெரும்புயல் தோற்றியது. பல நாட்களாக அடங்கிக் குமுறிக்கிடந்த துக்கம் பீறிட்டு எழுந்தது. பாசம் அறுந்து போகவில்லை. கீழே குனிந்து அவளை வாரி எடுத்தான்.

அரசனுக்குப் பச்சாத்தாபமும் உண்டாகிவிட்டது. தன் பிழையை உணர்ந்தான். "சாந்தலி, நான் உனக்குப் பெருந்தீங்கு இழைத்துவிட்டேன். என்னை மன்னிப்பாயா?" - அங்கே கூடியிருந்த அவர்கள் முன்னிலையில் இவ்விதம் பகிரங்கமாக அரசன் கேட்டான்.

"அரசே, தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது; நான்தான் அபராதி. என்னை மன்னிக்கவேண்டும். தங்கள் கட்டளையை மீறிவிட்டேன். அதற்கு உரிய தண்டனை எதுவாயினும் ஏற்க அடியேன் சித்தமாக இருக்கிறேன்."

"சாந்தலி, மறுபடியும் அதனை எனக்கு ஞாபக மூட்டாதே. நடனம் ஒரு தெய்வக்கலை. நீ **நடன ஸரஸ்வதி**. இவற்றை நான் முன்னர் அறியவில்லை. எனினும் நீ இவ்விதம் ஒவ்வொரு நாளும் நடனமாடு

வது கூடாது. கோயில் காரியத்துக்கு இன்றைத் தினமே வேறு ஆள் நியமித்துவிடவேண்டும். அந்தப் பொறுப்பை உன்னிடமே விட்டுவிடுகிறேன். இதன் ஞாபகார்த்தமாக, எம்பெருமான்மீது உனக்கு உள்ள பக்திக்காக நீ வருஷத்துக்கு ஒருமுறை கோயிலில் நாட்டியம் ஆடலாம்."

அவ்விடம் கூடியிருந்த ஜனங்களுக்கு இதைக் கேட்டதும் ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

"நடன ஸரஸ்வதிக்கு ஸர்வ மங்களமும் உண்டாகுக" என்று கூறி ஆனந்தக் கூத்தாடினர்.

முற்றும்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105233
EGMORE, MADRAS-600 008

கதைக் கோவை

.... நான்காம் தொகுதி ....

75 — எழுத்தாளரின் சிறுகதைகள் — 75

514 - பக்கங்கள் :: ரூ. 10—8—0

இந்நூலைப்பற்றிய புகழ்மொழிகளிற் சில

தினமணி :— * தமிழ்நாட்டில் சிறுகதைகளின் வளர்ச்சிக்கு அல்லயன்ஸ் கம்பெனியார் குறிப்பிடத்தக்க அளவு சேவை செய்திருக்கின்றனர். * கதைக் கோவைத் தொகுதிகள் இதுவரை நான்கு வெளிவந்திருக்கின்றன. இவற்றின் மூலம் 225 - சிறுகதை எழுத்தாளர்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கின்றனர். 4-ஆம் தொகுதியில் சிறந்த சிறுகதைகள் அடங்கியிருக்கின்றன. * புத்தகத்தின் அமைப்பு அழகாக இருக்கிறது. வாங்கி வைத்துக் கொண்டு நினைத்தபொழுது வாசிப்பதற்கும் கல்யாணம்போன்ற சந்தர்ப்பங்களில் பரிசாகக் கொடுப்பதற்கும் ஏற்ற புத்தகம்.

பாரத தேவி.— * ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் அம்சத்தில் மிகவும் சிலாக்கியமாகவே விளங்குகிறது. * * தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் அல்லயன்ஸ் கம்பெனியார் பல வருஷங்களாக அபாரத் தொண்டாற்றி வந்திருக்கின்றனர்.

The Hindu.— * Maintains a high standard. Large number of stories from women writers are included and form a noteworthy feature of this volume, to which the Mayor of Madras has written an appreciative Foreword.

சக்தி:— * பொதுவாக எல்லாக் கதைகளுமே ஒவ்வோர் அம்சத்தில் சிறந்து விளங்குகின்றன. * தமிழ் நாட்டின் சிறுகதை வளர்ச்சியின் சரித்திரத்திலே அல்லயன்ஸ் கம்பெனியாரின் கதைக் கோவைகள் ஓர் உயர்ந்த ஸ்தானம் பெறும் என்று உறுதியாகக் கூறலாம்.

சந்திரோதயம் :— * பல ஆசிரியர்களுடைய பலதரமான கதைகள் இந்தக் கோவையில் அடங்கியிருக்கின்றன. அதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை. கதைகளில் எல்லா ரகங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

ஆனந்த விகடன் :— * கதைக் கோவையின் முதல் மூன்று தொகுதிகள் நமக்கு மகிழ்ச்சியை அளித்ததென்றால், இப்போது வெளிவந்திருக்கும் 4-ஆம் தொகுதி நமக்கு மகிழ்ச்சியுடன் ஆச்சரியத்தையும் அளிக்கின்றது. * மற்ற 3. தொகுதிகளைப் போலவே ஒவ்வொரு குடும்பத்திலும் மட்டுமின்றி, ஒவ்வொரு வாசகசாலையிலும் அவசியம் இருக்கவேண்டும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - 2

நீலமணி

16 - சிறு கதைகள்

'கலைமகள்' ஆசிரியர்

கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.

எழுதியவை

ரூ. 2—0—0

புகழுரைகளிற் சில

தினமணி—*பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் எழுதிய அழகிய 16 - சிறுகதைகள் இப்புத்தகத்தில் இருக்கின்றன. ஹாஸ்யக் கதைகள் சில; மற்றும் பல வாழ்க்கையின் சில அம்சங்களை எடுத்துக் காட்டுவன. *ஆசிரியரின் நடையும், சில வர்ணனைகளும் நன்றாக இருக்கின்றன. இக்கதைகள் எல்லோருக்கும் இன்பமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

காவேரி—*ஜகந்நாதன் ஒரு சிறந்த எழுத்தாளர். இந்தச் சிறுகதைகளில் தம் முழுத்திறத்தையும் காட்டியுள்ளார். கதைகள் என்பதைவிடப் பேசும் சித்திரங்களெனச் சொல்லலாம். கதைகளில் ஒருவித விருவிறுப்புக் காணப்படுகின்றது. உயர்தர சிறுகதைகள் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு இப்புத்தகம் நல்ல எடுத்துக்காட்டாகும்

பாரததேவி—*எளிய நடையில் விஷயம் புரியுமாறு சரளமாக எழுதும் திறன் வாய்ந்தவர். இப்புஸ்தகத்தில் பதினறு கதைகள் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதத்தில் சிறந்ததாகவே இருக்கிறது. புஸ்தகம் அழகான அமைப்புடன், முத்துமுத்தான எழுத்துக்களைக் கொண்டு சிறந்து விளங்குகிறது.

தமிழன்—*இதிலுள்ள 16 - கதைகளிலும் "பரிவர்த்தனை" என்ற கதைதான் முதன்மையாக விளங்குகிறது. "பிராயச்சித்தம்" என்ற கதையும் அழகாக எழுதப்பட்டிருக்கிறது. "கர்த்தப்ப விஜயம்" என்ற ஹாஸ்யக்கதை கற்பனை உலகத்தின் உச்சி முகட்டையும் முட்டிப் பெயர்த்துக்கொண்டு மேலே பறக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

புயல் - மஹாகவி டாகுர்

62 - அத்தியாயங்கள் :: மொழிபெயர்ப்பு

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

மலிவுப் பதிப்பு ரூ. 5-0-0 ... உயரிய பதிப்பு ரூ. 6-0-0

—— புகழ்மொழிகளிற் சில ——

ஆனந்த விகடன் :— * டாகுர் எழுதியுள்ள நவீனங்களுள் மிகச் சிறந்ததென்று கருதப்படும் 'புயல்' என்ற காதற் கதை, இப்போது வெகு அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாகியிருக்கிறது. * மனத்தைக் கவரும் விதமாக பைண்ட் செய்யப்பட்டிருக்கும் இப்பிரசுரம், புத்தகசாலைகளிலும் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷமாகும்.

சக்தி :— * இனிமையும் தெளிவும் இயல்புமான தெள்ளிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் குமாரஸ்வாமி. அச்சும் பதிப்பும் அருமையா யிருக்கின்றன.

ஹிந்துஸ்தான் :— * அற்புதமான நவீனம் 'புயல்'. அமிர்தம் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப்புறச் செய்கிறது. மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற நவீனம்.

பாரததேவி :— * ஒவ்வொரு புத்தகசாலையிலும் வீட்டிலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.

நாரதர் :— * இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்திரம்.

The Hindu :— * The sympathetic treatment of the characters and the symmetrical development of the plot have been carefully dwelt upon. The Tamil rendering of the Novel is marked by clearness and precision.

The Mail :— * A great work by a great writer, *has been very well done* into Tamil. The diologue is full of pen and interest. *The ending of the story is magnificent.

அல்லயன்ஸ் கம்பெனி, 138-9, பிராடீஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை.

தமிழ் அன்பர்களுக்கு ஓர் அரிய விருந்து

கதைக் கோவை

தொகுதி I

40 - எழுத்தாளரின் — மறு பதிப்பு
40 - சிறு கதைகள் — அச்சில்

தொகுதி II

50 - எழுத்தாளரின்
50 - சிறு கதைகள் — ரூ. 7-0-0

தொகுதி III

60 - எழுத்தாளரின்
60 - சிறு கதைகள் — ரூ. 7-8-0

தொகுதி IV

75 - எழுத்தாளரின்
75 - சிறு கதைகள் — ரூ. 10-8-0

தொகுதி V

(தயாராகிறது) ...

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை